துளிர்விடும்

2014

Thalir தளிர்

தமிழின் தனித்துவம் காப்போம்!

மலர் 4
ஆடி - புரட்டாதி







இந்து சமயத்தின் மூலமொழி



சங்ககால புலமைச் சான்றோர்களின் சமூகக் கண்ணோட்டம்

"எனக்கும் இருக்கிறது நிறைவேறாத ஆசைகள்"

மாண்புறு கணினிகள் மேவிடும் செய்திகள்

பாலுறவுச் சிக்கல்களை கண்டறிவது எப்படி?



நிலவுக்குப் போன கதை நிஜமா?

URBAN™
HOME RENOVATIONS

HOME RENOVATION

- Complete Renovation
- Separate Entrance
- Electrical
- Plumbing
- AC Installation
- Deck & Fence
- Interlock
- Roofing
- Stucco Exterior Finish
- Kitchen & Vanity







Call me for a **FREE** Estimate

Contect : Alfred Remisiar - 647.208.3018
Email : alfred.remisiar@hotmail.com

Renovation Increases the Value of Your Home!

காலாண்டு சமூக இலக்கிய தமிழ் சஞ்சிகை

Thalir

Chief Editor
Sivamohan Sivalingam

Sub Editors
Nanthini Mohan
Sivanayani Mugunthan

Advisors
Prof. E. Balasundaram
Dr. Paul Joseph

Managing Editor
Dr. Paulraj Pandian

Media Cordinator
Pudhuvai Raman

Consultant
Samy Ramachandran

Design & Artwork
Goodwin

Advertisements
Pushpan
Mohan

43 Andover Cresent, Scarborough, ON.
M1E 2X2 Tel: 647 657 0910,
647 345 3022 | Fax: 647 345 3022

Email: thalir.thalir@yahoo.ca

தளிரில் மலர்வது...

இந்து சமயத்தின் மூலமொழி சமஸ்கிருதமா? ஆதித் திராவிடமா?	03
திருக்குறள்	06
சங்ககால புலமைச் சான்றோர்களின் சமூகக் கண்ணோட்டம்	07
மாண்புறு கணினிகள் மேவிடும் செய்திகள்	10
வெள்ளை நிறப் பெண்களை ஆண்கள் விரும்புவதன் ரகசியம்	12
கவித்தளிர்	13
வைன் போத்தில்களை சரிவாக வைப்பது ஏன்	14
புரட்சிப் பெண் புலவர் ஔவையார்	16
வாலிபமும் வயோதிபமும்!	20
சிந்தனை செய் தமிழா!	22
"எனக்கும் நிறைவேறாத ஆசைகள் இருக்கின்றன"	24
நிலவுக்குப் போன கதை நிஜமா?	27
பாலுறவு சிக்கல்களை கண்டறிவது எப்படி	30
கண்ணூறு	32
கவலை – இந்த மூன்றெழுத்துக்குள் எவ்வளவோ பிரச்சினைகள்	34
பழமுதிர்ச்சோலை	36
தளிரில் படர்ந்த நிகழ்வுகள்	42
பற்களை நேராக ஒழுங்குபடுத்தும் பற்சிகிச்சை	44
விண்வெளியில் கருந்துளை	46
பண்டைத் தமிழ்ப் பெண்களின் தேசப்பற்று...	50
நகைச்சுவை துணுக்குகள்	51
குழந்தைக் கனவை சாத்தியமாக்கி வரும் நவீன மகப்பேறு சிகிச்சை	54
சமைப்போம் சுவைப்போம்	56
மகத்துவமிக்க கோவைக்காய்	58
அடம்பன் கொடியும்	59
அறிவியல் ரீதியாக குழந்தை உருவாவது எப்படி என்று பார்ப்போம்	60
குறட்டையின் பயங்கரம்	64
நேரம், காலம் என்பவற்றை நாம் சரியாகப் புரிந்துகொண்டிருக்கிறோமா?	70
தளிரில் அவசியம் தெரிந்துகொள்ளுங்கள்	74
பூந்தளிர்	76

Disclaimer:- All rights reserved the opinion/views expressed by the contributors are their own and do not reflect those of the publisher. The Publisher assumes no responsibility of any kind of publication.

Published by: Thalir Publication
Member of National Ethinic Press Media

எல்லாப் புகழும் இறைவனுக்கே!

அன்பு வாசகர்களே!

மீண்டும் தளிர் வாசகர்களாகிய உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். நமது காலாண்டு சஞ்சிகையான "தளிர்" உங்களனைவரின் ஒத்துழைப்பினால், இந்த இதழோடு தனது ஓராண்டு நிறைவைக் கண்டுகொண்டது. எல்லாப் புகழும் இறைவனுக்கே! இந்த ஓராண்டு காலமும் நமது சஞ்சிகைகளில் எழுதிய எழுத்தாளர்கள், பொருளாதாரத்திற்கு மிகவும் உதவியாயிருந்த தொழில் அதிபர்கள், பத்திரிகையை வடிவமைத்தவர்கள், தட்டச்சு வேலையில் உதவியவர்கள், பிரசுரித்த அச்சுக் கூடத்தினர், விளம்பரங்கள் சேகரித்துக் கொடுத்தவர்கள் மற்றும் அலுவலக நிர்வாகஸ்தர்கள் அனைவருக்கும் ஆசிரியன் என்ற நிலையில் எனது மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் மகிழ்வுடன் கூறிக்கொள்கிறேன்.

இரண்டு வயதை எட்டிப்பிடித்துள்ள "தளிர்", தனது முதலடியை எடுத்து வைக்க உங்கள் கரங்களின் உதவியை நாடுகிறது. இக்குழந்தை கீழே விழுந்து விடாமல் தொடர்ந்து வீர நடைபோட, விளம்பரதாரர்கள் உங்கள் விளம்பரங்களைக் கொடுத்து உதவுங்கள். எழுத்தாளர்கள் உங்கள் ஆக்கபூர்வமான கதை, கவிதை, கட்டுரைகளை அனுப்பி எமது தமிழ்ச் சமூகம் வளர்ச்சிப் பாதையில் செல்ல உதவுங்கள்.

நாமனைவரும் அறிந்திருக்கின்றபடி நமது தளிரில் திரைப்படங்கள், அரசியல் போன்றவைக்கு இடமில்லை. ஆகையால் எழுத்தாளர்கள் இதைக் கவனத்தில்கொண்டு அதற்கேற்றவாறு ஆக்கங்களை எழுதி அனுப்பினால் நமது வாசகர்களுக்கு மிகவும் பிரயோசனமாயிருக்கும்.

நமது "தளிர்" சஞ்சிகை மனிதாபிமான தொண்டு நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்றது என்பதை அனைவரும் அறிவோம்! இந்நிலையில் எங்கள் புலத்தையும் உற்றுநோக்குகின்ற சஞ்சிகையாய் வளர்ந்து வருகின்றது. புலத்தில் அல்லலுறும் நம் உடன் பிறப்புக்களின் நலனில் மிகவும் அக்கறை கொண்டுள்ளபடியால், அரசியல் நகர்வுகளில் எமது மக்களுக்கு இழைக்கப்படும் இடையூறுகள், தனிப்பட்ட குடும்பங்களில் இருக்கும் வறுமைக்கோடுகள், இயற்கை வளத்தில் அவர்களுக்கு வருமானங்களை ஈட்டிக் கொள்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஆகியவற்றை அமைத்துக் கொடுப்பதில் நமது "தளிர்" முனைந்துள்ளது. இதற்குத் தேவை உங்களின் ஊக்கமும், ஆக்கமுந்தான். இவற்றை அளிப்பதில் புலம் பெயர்ந்த தமிழர்களாகிய நாம் சளைத்தவர்களல்ல என்பதைத் தளிர் நன்கு அறியும். எனவே உங்களது அன்பும் ஆதரவும் இருக்கும்வரை தளிர் துளிர்க்கும். எமது செயற்பாடு தொடரும். மீண்டும் அடுத்த இதழில் வரிகளுடன் சந்திக்கும் தளிர் .

நன்றி.

பிரதம ஆசிரியர்
சிவமோகன் சிவலிங்கம்
Email - editor.thalir@yahoo.ca
Phone - 647 657 0910

இந்து சமயத்தின் மூலமொழி சமஸ்கிருதமா? ஆதித்திராவிடமா?

தாய் தெய்வ வழிபாடு

Dr. J.T. சேவியர்,
சத்திர சிகிச்சை நிபுணர்

சொற்பிறப்பில் உதீ ஆதீ என்ற இரு தமிழ்ச் சொற்களுடன் நெருங்கிய தொடர்புற்றிருக்கும் தீ, த்தீ, அத்தீ என்ற ஆதித்திராவிடச் சொற்கள் பண்டைக்காலப் பிற மொழிகளில் சிலவற்றிலும் உள் வாங்கப்பட்டன. இச் சொல்லின் அர்த்தங்கள் பின்வருமாறு:

சமஸ்கிருத மொழியில் தி ஸ்திரீ (பெண்) ஆகவும் சக்தி (பெண்-தெய்வம்) ஆகவும், – வதி பதி (முதல்வன் – கடவுள் என்ற விகுதிகளாகவும் திரிபடைந்தது.

முற்கால இந்து மெய்யியலாளர் உலகிலுள்ள உயிரினங்களின் ஆதிமூலம் படைக்கும் அன்னையே (Mother Creator) எனக் கருதினர். இதற்கு அத்தி (ஆதிமூலம்) ஆதி – தி எனப் பெயரிட்டனர். எல்லாத் தெய்வங்களினதும் தாயைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சமஸ்கிருதப் பதமாகிய ஆதி தி ஆதி திராவிட மூலத்திலிருந்து பெறப்பட்டது. ஆதி தி என்ற பதம் தாய் தெய்வத்தை, ஆதி அன்னையாக வர்ணிக்கின்றது.

ஆதாமினதும், ஏவாளினதும் படைப்புப் பற்றி விவிலிய நூலில் கூறப்பட்டிருக்கும் கதை சுமேரிய மூலங்களிலிருந்து பெறப்பட்டதாகக் கருதப்படுகின்றது. சுமேரியச் சொல்லாகிய தி தவறாக மொழி பெயர்க்கப்பட்டதன் விளைவாகவே ஏவாள், ஆதாமின் விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டாள் என்ற கதை உருவாகியிருக்கலாம் என அஸ்கோபார்ப்பொலா விளக்கியுள்ளார்.

தி என்ற சுமேரியச் சொல் ஹிபுறுவில் செலா (விலா என்பதற்கு ஹிபுறு சொல்) எனத் தவறுதலாக மொழிபெயர்க்கப்பட்டமையே விவிலிய நூலில் பதியப்பட்டிருக்கும் ஹிபுறு கதையின் தோற்றுவாயை விளக்குகின்றது.

பண்டைய திராவிடர்கள் ஆதி அன்னையை வழிபட்டனர். தமது தாய்த் தெய்வம் – தி, ஆதி தி –, ஆதி அம்மா மனு தி எனப்பட்ட முதலாவது மனிதத் தாயைப் பெற்றெடுத்தாள் என அவர்கள் நம்பினர். (மனு–மனித, தி–தாய்).

இறைவனின் ஆணையை மீறியதனால் ஆதாமும் ஏவாளும் மண்ணுலக சொர்க்கமாகிய பாரதீசு (Paradise) ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். ஆதி அன்னை வழிபாடுகளுக்கும் விருட்ச வழிபாட்டிற்குமிடையே உள்ள தொடர்பினை ஆராய விவிலிய நூலின் ஆதியாகமத்திலிருந்து எடுக்கப்பட்டபின்வரும் மேற்கோள்கள் மிகப் பொருத்தம் வாய்ந்தவை.

(8) தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் தோட்டத்தை உண்டாக்கித் தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்.

(9) தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும், புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவ விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார்.

(16) தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி, நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.

சொல்	அர்த்தங்கள்			
	ஆதித் திராவிடம்	தமிழ்	சுமேரியம்	பாவி
தி, த்தி, அத்தி	(1) தாய் (2) தாய் தெய்வம் (3) பெண் (4) உயிரினங்களின் ஆதி, ஆதிமூலம் (5) தெய்வம்	பெண்பால் குறிக்கும் விருதி (உதாரணம் குறத்தி ராசாத்தி)	(1) தாய் (2) பெண் (3) பிள்ளை பெறுதல் உயிர் கொடுத்தல் படைத்தல் (4) விலா எலும்பு	(1) தாய் (2) பெண்
அத்தி	(1) அரச மரம (2) ஜீவ மரம் (3) புத்தி மரம் (போதி மரம்)	அரச மரம் ஜீவ மரம் – –	– –	– –



(17) ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.

(ஆதியாகமம் அதிகாரம் 2, வாக்கியங்கள் 8, 9,16,17)

(4) அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி, நீங்கள் சாகவே சாவதில்லை:

(5) நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது.

(6) அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கின்றது என்று கண்டு அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்: அவனும் புசித்தான்.

(22) பின்பு தேவனாகிய கர்த்தர்: இதோ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்: இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவ விருட்சத்தின் கனியையும் பறித்துப் புசித்து என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்ய வேண்டும் என்று.

(23) அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பி விட்டார்.

(24) அவர் மனுஷனைத் துரத்திவிட்டு ஜீவ விருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல் செய்ய, ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், வீசிக்கொண்டிருக்கிற சுடரொளிப் பட்டயத்தையும் வைத்தார்.

(ஆதியாகமம் அதிகாரம் 3. வாக்கியங்கள், 4,5,6,22,23,24)

பாரத தேசத்தில் (விவிலிய பாரர் தேசத்தில்) வாழ்ந்த ஆதித் திராவிடர்களின் தாய் தெய்வமான ஆதி, அம்மா படைத்த முதல் மானிடத் தாயாகிய மனுதி என்பவள் ஆசை அல்லது ரதியினால் தூண்டப்பெற்று அமிர்தம் தரும் கனியை இழந்து பிறப்பு – இறப்பு, இன்ப-துன்பம் ஆகியவற்றை அனுபவிக்கும் தண்டனையுடன் வெளியேற்றப்பட்டாள் என்ற ஆதித்திராவிடச் சித்திர எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்த சமயக்கதை பிற்கால சுமேரிய சாசனங்களில் பதிவு செய்யப்பட்டது.

இவ்வாறு திராவிட சித்திர எழுத்துக்களில் பதிவு செய்யப்பட்ட சமயப் போதனைகள் வேதங்களில் ஆரிய பிராமணர்களினால் மீளப்பதிவு செய்வதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் இவை சுமேரியரையும் ஈப்ருக்களையும் சென்றடைந்து விட்டன என்பது தெளிவாகும்.

Buying or selling a home?
The key is choosing the Right Realtor ...

வீடு வாங்குவதற்கான முதல் திறவுகோல் சரியான முகவர்...

உங்களுக்கு தேவையான
மோட்க்கேஜை இலகுவாக
பெற்றுக் கொடுக்கப்படும்

Working for you

Arul Chelliah

Sales Representative

Cell: 416.788.3528

Bus: 416.321.6969
Fax: 416.321.6963
Email: arul.chelliah@gmail.com

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/GTA Realty Inc.,
Brokerage
Independently Owned and Operated

5215 Finch Ave.,East #203, Toronto ON M1S 0C2

திருக்குறள்

பிள்ளைகளே! உலகப் பொதுமறையாம் திருக்குறளை உங்கள் அனைவருக்கும் விளங்கும்படி ஆங்கிலத்திலும், தமிழிலும் இங்கு தந்துள்ளோம். இது எமது தமிழ் மொழியில் திருவள்ளுவரால் ஆக்கப்பெற்ற உலகம் வியக்கும் ஒரு நூல். எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய பல கருத்துக்களை உள்ளடக்கியதும், பெரிய விடயத்தை இரண்டே வரிகளில் அழகு தமிழில் எழுதப்பட்டதுமான ஒரு பெருமிதம்... எல்லாத் தமிழர்களும் அறிந்திருக்கவேண்டிய ஒரு நீதி நூல்.

அதிகாரம் / Chapter / Adhigaram: நீத்தார் பெருமை

பால் / Section / Paal: அறத்துப்பால் / Virtue / Araththuppaal 1

இயல் / Chapter Group / Iyal: பாயிரவியல் / Prologue / Paayiraiyal1

குறள் 21:

ஒழுக்கத்து நீத்தார் பெருமை வீழப்பத்து

வேண்டும் பனுவல் துணிவு.

தமக்குரிய ஒழுக்கத்தில் வாழ்ந்து, ஆசைகளை அறுத்து, உயர்ந்த மேன்மக்களின் பெருமையே, சிறந்தனவற்றுள் சிறந்தது என்று நூல்கள் சொல்கின்றன.

Couplet 21

The settled rule of every code requires, as highest good, Their greatness who, renouncing all, true to their rule have stood.

Explanation: The end and aim of all treatise is to extol beyond all other excellence, the greatness of those who, while abiding in the rule of conduct peculiar to their state, have abandoned all desire.

Transliteration:

Ozhukkaththu neeththar peruma vizhuppaththu

vendum panuval thinivu

குறள் 22:

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து

இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

ஆசைகளை விட்டு விலகியவரின் பெருமைக்கு, எண்ணிக்கையால் அளவு கூறுவது, இந்த உலகத்தில் இறந்து போனவர்களின் எண்ணிக்கையை எல்லாம் எண்ணுவது போலாகும்.

Couplet 22

As counting those that from the earth have passed away, 'Tis vain attempt the might of holy men to say.

Explanation: To describe the measure of the greatness of those who have forsaken the two&fold desires, is like counting the dead.

Transliteration

Thuranthar peruma thunaikkoorin vaiyathu

Irantharai ennikkon datru.

குறள் 23:

இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்

பெருமை பிறங்கிற்று உலகு.

இம்மையின் துன்பத்தையும் மறுமையின் இன்பத்தையும் அறிந்து, மெய் உணர்ந்து, ஆசைகள் அறுத்து எறியும் அறத்தைச்செய்தவரின் பெருமையே, இவ்வுலகில் உயர்ந்து விளங்குகிறது.

Couplet 23

Their greatness earth transcends, who, way of both worlds weighed, In this world take their stand, in virtue's robe arrayed.

Explanation: The greatness of those who have discovered the properties of both states of being, and renounced the world, shines forth on earth (beyond all others).

Transliteration

Irumai vagaitherinthu eenduaram poondar

perumai pirangitru ulagu.

குறள் 24:

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்

வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

மெய், வாய்,கண், மூக்கு, செவி என்னும் ஐந்து யானைகளும் தத்தம் புலன்கள் ஆகிய ஊறு, சுவை, ஒளி,

நாற்றம், ஓசை ஆகியவற்றின் மேல் செல்லாமல், அவற்றை மன உறுதி என்னும் அங்குசத்தால் காப்பவன் எல்லாவற்றிலும் சிறந்ததாகிய வீட்டுலகிற்கு ஒருவிதை ஆவான்.

Couplet 24

He, who with firmness, curb the five restrains, Is seed for soil of yonder happy plains.

Explanation: He who guides his five senses by the hook of wisdom will be a seed in the world of heaven.

Transliteration

Uranennum thottiyan orainthum kaappaan

Varanennum vaippitkor viththathu.

குறள் 25:

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்

இந்திரனே சாலுங் கரி.

அகன்ற வானத்து வாழ்பவரின் இறைவனாகிய இந்திரனே, புலன்வழிப் பெருகும் ஆசை ஐந்தையும் அறுத்தவனின்வலிமைக்குத் தகுந்த சான்று ஆவான்.

Couplet 25

Their might who have destroyed 'the five', shall soothly tell Indra, the lord of those in heaven's wide realms that dwell.

Explanation: Indra, the king of the inhabitants of the spacious heaven, is himself, a sufficient proof of the strength of him who has subdued his five senses.

Transliteration

Ainthavithan atral agalvisumbu larkoman

Indirane saalung kari.

சங்க கால புலமைச் சான்றோர்களின்

சமூகக் கண்ணோட்டம்

கலாநிதி,
இ.பாலசுந்தரம்

தமிழர் பண்பாடு - இலக்கியம் என்ற அடிப் படையிலான வரலாற்றிலே சங்க காலம் என்பது கீ.மு. 500 -கீ.பி. 300 ஆம் ஆண்டு களுக்கு இடைப்பட்ட காலம் எனக் கருதப்படுகிறது. அக்காலப் பகுதியில் 552 புலவர்கள் வாழ்ந்தனர் எனவும் - அவர்களில் 33 பெண் புலவர்களும் பாவியற்றியுள்ளனர் எனவும் அப்பால் மந்திரி என்ற அறிஞர் பட்டியலிட்டு தனி நூல் ஒன்றை2006 இல் வெளியிட்டுள்ளார். இப்புலவர்கள் அறிஞர்களால் சங்கச் சான்றோர் எனப் போற்றப்படுகின்றனர்.

சங்கப் புலவர்களால் அவ்வப்போது பாடப்பட்டு – செவிவழியாகவும் ஏடுகளிலும் பதியப்பட்டு வழங்கி வந்த பாடல்களைச் சங்க இறுதிக் காலத்து மன்னரும் வள்ளல்களும் மற்றும் தமிழறிந்த பெரியோரும் தேடித் தொகுத்து எட்டுத் தொகை,பத்துப்பாட்டு எனப் பெயரிட்டு, பதினெட்டு நூல்களைத் தந்துள்ளனர். இப்பாடல்கள் தொகுக்கப் படும்போது பொருள்மரபு. யாப்பு மரபு என்பன பெரிதும் கவனத்திற் கொள்ளப்பட்டமை தெளிவாகின்றது. இவை தமிழ்ப் பண்பாட்டின் ஆணிவேர்களையும் பண்பாட்டின் உருவாக்கங்களையும் சமூக அரசியல் கட்டமைப்புக்களையும் அறிந்து கொள்ளும் ஆவணங்கள் என்பதை உணர்ந்து இவற்றை அக்கறையுடன் பயில வேண்டும்.

"சங்க இலக்கியங்களில் பல பாடல்கள் சுவையற்றன என்றும், மிகச் சில மட்டுமே கவிதைத் தன்மை கொண்டவை என்றும் திறனாய்வாளர் சிலர் பேசி வருகின்றனர். கவிதைத்தன்மை, மார்கசியம், வர்க்கம், முற்போக்கு என்றெல்லாம் இவர்கள் கூறுவன வெற்றுச் சொற்கள். திறனாய்வில் கொள்கைகளையும், பெரியாரியம், மார்கசியம், காந்தியம் போன்ற கோட்பாடுகளையும் படிக்காமல் தங்களை மிகப் பெரிய முற்போக்குச் சிந்தனையாளர்களாகக் காட்டிக்கொள்வதற்காகப் பல தளங்களில் சிதைக்கும் தாக்குதல் பேச்சுக்களைச் சிலர் பேசியும் எழுதியும் வருகின்றனர்" – மேலும் "இக்காலப் புதுக்கவிதை என்னும் உரைப் பாக்களில் பல நல்ல கருத்துக்களும் சில நல்ல உருவகங்களும் கொண்டு சில தேறுகின்றன. அதற்காக அவை மட்டுமே கவிதைகள், சங்க இலக்கியங்கள் இல்லை என்று தமிழ் மக்களுக்குத் தவறான வழிகாட்டல் வழங்க வேண்டியதில்லை" எனவும் பேராசிரியர் பா. இளவரசன் கட்டுரை ஒன்றில் குறிப்பிடுவதை ஈண்டுச் சுட்டிக்காட்டல் பொருத்தமாகும்.

சங்க இலக்கியங்களின் முக்கியத்துவம் என்ன என்பதை முதலிற் புரிந்து கொள்ள வேண்டும். தமிழினத்தின் ஒட்டு மொத்தமான பண்டைய வரலாற்றை முதன் முதலாகத் தன்னகத்தே கொண்ட பெரும் தகவல் களஞ்சியம் அவை என்பது அவற்றின் பெறுமதியாகும். தமிழினம் வரலாற்றின் முக்கியத்துவம் அறியாது வாழ்ந்து வந்த இனமாகும். அதனால்தான் உண்மையான – கட்டுக் கோப்பான உலகோரால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக எழுதப்பட்ட தமிழர் வரலாற்று நூல்கள் இல்லாதிருக்கின்றன. சங்க இலக்கியத்தின் முக்கியத்துவம் பற்றிப் பேராசிரியர் கா. சிவத்தம்பி (2006) குறிப்பிடும்போது– "சங்க இலக்கியத்தினை நோக்கும்பொழுது, தமிழ் நாட்டில் இலக்கியம் உருவாகிய முதற்படிநிலைக்கு உரியது என இவ்விலக்கியத்தைக் கொள்ள முடியாது. இதற்குள்ளே மீற முடியாத ஓர் இலக்கிய மரபை மாத்திரம் அல்லாமல் அந்த மரபின் வளர்ச்சிநிலையையும் காணலாம்" என்பார். தொல்காப்பியத்தின் பொருளதிகாரத்தையும் சங்க இலக்கியங்களையும் ஒப்ப வைத்துப் பயில்வோர் எந்தளவுக்குச் சங்க இலக்கியச் சான்றோர் பெரியதோர் இலக்கிய மரபைக் கட்டிக்காத்து, இம்மரபுகள் தடம் புரளாமல் இலக்கியம் படைத்து வந்தனர் என்பதைஅறிந்துகொள்வா.

தமிழர் வாழ்க்கை முறைகளை நன்கு அவதானித்த சங்கச் சான்றோர் அவற்றை அக வாழ்வு – புறவாழ்வு என வகுத்துக்கொண்டு – அவர்களை அக வாழ்விலும் புற வாழ்விலும் நன்கு நெறிப்படுத்தும் வகையில் இலக்கியம் படைத்தனர். அவர்களது பாடல்களுக்கு மன்னரிடமும்,மக்கள் மத்தியிலும் நன்கு மதிப்பிருந்தது என்பதை இவ் விலக்கியங்கள் சான்றுபடுத்துகின்றன. அகவாழ்வும் புற வாழ்வும் ஒன்றை ஒன்று பிரித்து இயங்கவோ அல்லது நோக்கவோ முடியாதவை. அதனால் இவ்விரு இலக்கியங்களிலும் வாழ்க்கை பற்றிய முழுமையான



செய்திகளை புலவர்கள் பாடி வைத்துள்ளனர். போரைப் பாடும்போது அக வாழ்வியலும்,காதல் பேசப்படும்போது போர் தொடர்புடைய செய்திகளும் கலந்தே காணப்படுகின்றன. இவ்வாறு அக்கால மக்களின் வாழ்க்கையை முழுமையாகச் சித்திரிப்பனவே சங்க இலக்கியங்கள் என்பது அவற்றின் சிறப்பாகும்.

காதலும் போரும் நமது பண்டைத் தமிழ் இலக்கிங்களுக்கு மட்டும் தனித்துரிய பொருள்கள் என்று நினைத்தல் தவறு. கிரேக்கம், லத்தீன் முதலிய பிற மொழிகளிலுள்ள பண்டைச் செய்யுட்களும் இவ் விடயங்களைப் பற்றியனவாகவே பெரும்பாலும் அமைந்துள்ளன. வீரமும் காதலுந்தான் பண்டைக் காலத்து இலட்சியங்கள் எனப் பேரா சிரியர் வையாபுரிப்பிள்ளை கூறுவதும் (1947: 84) நோக்கத்தக்கதே.

காலந்தோறும் சங்க இலக்கியங்கள் தம் ஆளுமையை அவ்வக்கால இலக்கியங்களில் செலுத்திவந்துள்ளன. பிற்காலப் புலவர்கள் சங்கப் பாடல்களைப் பயன்படுத்தி, அவற்றைத் தளமாகக் கொண்டும் தம் இலக்கியங்களைப் படைத்து வந்துள்ளமையை அவதானிக்கலாம்.

உதாரணமாக சங்கச் சான்றோர்களுக்குப் பின்னர் - இலக்கியம் படைத்த சமண பௌத்தப் புலவர்களும் சங்க இலக்கியங்களை நன்கு பயின்றுள்ளனர் என்பதற்குப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் சான்றாகும். திருக்குறள், நாலடியார் போன்றனவும்,ஐந்திணை ஐம்பது. திணைமாலை நூற்றைம்பது மற்றும் களவழி நாற்பது முதலான பல நூல்களும் சங்கச் சான்றோர் பயன்படுத்திய சொல்லாட்சிகளையும் இலக்கிய மரபுகளையும் விட்டு விலக முடியாதவர்காளாக இருப்பதை அவ்விலக்கியங்களைப் பயில்வோர் அறிவர். அக்காலப் புலவர்கள் தம் சமண பௌத்த மதக்கருத்தக்களை மக்களிடம் விதைக்க் தமிழ்ச் சான்றோர் வழிச் சென்றுள்ளமை புலனாகும். சங்கம் மருவிய காலம் முதல், "கோச்சடையான்" (2014) திரைப்படப் பாடல்கள் வரையும் சங்கச் சான்றோரின் பாடல்கள் ஆதிக்கம் பெற்றுள்ளமையை நோக்க வேண்டும். மேலும் சங்கப் புலவர்களை அக்கால மன்னர்களே சிறப்பித்துப் பாடியுள்ளமையும், அவற்றினூடாகச் சங்கப் புலவர்களின் சிறப்பும் மேலோங்கிக் காணப்பட்டமை தென்படுகிறது. சான்றாகப் பின் வரும் தலையானங்கானத்துச் செருவென்றபாண்டியன் நெடுஞ் செழியன் புலவர்களைப் புகழ்ந்து பாடும் பாடலைக் குறிப்பிடலாம்:

"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற் புலவர்.."

என வரும் புறநானூற்றுப் பாடல் வரிகள் (72:13-16) உதாரணம்.

அறிவுடையவராக மக்கள் நாட்டில் வளர வேண்டும் என்பதில் புலவர்கள் மிக்க கவனமுடையோராகச் செயற்பட்டுள்ளனர்:

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே". (புறம்:183) எனப் புலவர் கூற்றாகவும்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே...."(புறம் 312)

எனச் சமூகக் கண்ணோட்டம் கொண்ட தாயின் கூற்றாகவும் அமையும் பாடல்கள்-எவ்வாறு அக்கால மக்கள் நாட்டுப் பற்றாளராகவும் - சமூக அக்கறையுடையவராகவும் வாழ்ந்தனர் என்பதும் - "அறிவுடை யோனா அரசும் செல்லும்... (புறம் 183) என்பதன் மூலம் அறிவுடைச் சமூகத்தை உருவாக்குவதில் புலவர்கள் எங்ஙனம் செயற் பட்டனர் என்பதும் புலனாகும். மக்கள் கடமை- மன்னர் ஆட்சி முறைமை - குடும்பக் கட்டமைப்புஎனப் பல விடயங்களையும் அக்காலப் புலவர்கள் பதிவுசெய்து சமூகத்தை நெறிப்படுத்தினர் என்பதும் நுண்ணியதாக அறியத்தக்கனவாகும்.

"அற்றைத்திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையோம்எங் குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார் யாம் எந்தையுமிலமே" (புறம் 112) என்ற பாடலும்,

"இளையோர் சூடார் வளையோர் கொய்யார்" (புறம்:242)

என்பன போன்ற பாடல்களும் மனித நேயத்தைத் தொடும் நாட்டுப் பற்றை உணர்ச்சி ததும்பப் பாடும் பாடல்கள் என்பதை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். எல்லோருக்கும் எல்லாப் பாடல்களும் சுவைக்கும் என்று சொல்ல முடியாது. அவரவர் அணுகுமுறை, கொள்கை, தரம், தேவை, விருப்பம் முதலியன வேறுபடுகின்றன. ஆயின் இலக்கியத் திறனாய்வாளர் சார்பு இல்லாமல் வழிகாட்ட வேண்டும்.

சங்க காலப் புலவர்கள் மன்னருக்கு நல்லறிவு புகட்டுவோராகவும் செயற்பட்டுள்ளனர். கல்வியிலும் புலமையிலும் சிறந்து விளங்கியவர் ஔவையார். வீரயுகம் எனப் போற்றப்பட்ட சங்க காலத்தில் போர் என்பது சாதனைக் களமாகவும் -சங்ககாலம்வீரத்தின் விளைநிலமாகவும் காணப்பட்டன. வீரத் தாய்மார் மலிந்த காலமாக அக்காலம் போற்றப் பட்டது. போர்க்களத்தே தன் கணவன் வீரமரணம் அடைந்த செய்தியைக் கேள்விப்பட்ட பின்னரும், தன் சிறு பிள்ளையிடம் வேல் கைக்கொடுத்து வீரத்துடன் வென்றுவா என்று போர்க்களம் அனுப்பிய மறக்குல வீரத் தாய்மார் மலிந்திருந்த காலம் சங்க காலம். ஆனால் போர் எனில் பல நூறு அல்லது ஆயிரக் கணக்கான உயிர்ப்பலி இடம்பெறுதல் இயல்பே. போரில் மடிவோர் யாவர்?எக்குலத்தினர்?எம்மொழியினர்? யார் யாரை மாய்த்தனர்? தமிழினம் தன்னைத்தானே அழித்துக் கொண்ட ஒரு வீர வரலாறாகவே சங்க காலப் போரியல் வாழ்க்கை அமைந்திருந்தது. இதற்கெதிராகப் பல புலவர்குரல் கொடுத்துப் பாடியுள்ளனர். இப் பின்னணியில் ஔவையார் போரை நிறுத்தி மக்கள் உயிரைக் காக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

அருளும் அன்புங்கொண்டு நாட்டை ஆள வேண்டும் என்பது நரிவெரூத்தலையார் சேரமானுக்கு வழங்கிய நல்லுரையாகும். கணியன் பூங்குன்றனார், அரசனுக்கு மட்டுமல்ல மக்கள் அனைவருக்கும் அன்பு உடணீயது என்றார்: "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என மனித நேயத்தின் மகிமையை வெளிப்படுத்தினார். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற கோட்பாட்டுடன் அக்காலப் புலவர்கள் வாழ்ந்தமையை ஆற்றுப்படுத்தும் பாடல்கள் சான்றுபடுத்துகின்றன.

இலக்கியங்களுக்கு உணர்ச்சிப் பொதுமை முக்கியமானது, அது இலக்கியத்தின் சிறப்புமாகும். மானுடத்தின் உணர்ச்சிகளைப் பெருமிதப்படுத்திப் பாடும்போது படிப்பவர் அனைவரும் அந்த உணர்ச்சி களைப் பகிர்ந்துகொள்ளமுடியும். அந்த இலக்கியமும் பொது மக்கள் இலக்கியமாக எல்லோராலும் நுகரப்படும் தன்மை பெறுகிறது.

அதனைத் தொல்காப்பியரும் சங்கச் சான்றோரும் நன்கு உணர்ந்திருந்தனர். சங்க காலத்து அகத்திணைப்பாடல்களில் இடம்பெறும் மாந்தரின் பெயரைச் சுட்டிப் பாடுதல் தடைசெய்யப்பட்டிருப்பதைக் காணலாம். அதனையே தொல்காப்பியர் வருமாறு இலக்கணம் செய்தார்:

"மக்கள் நுதலிய அகனைந்திணையில் சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர.." (தொல். பொருள். அகம்:54)

ஒரு மனிதனின் தனித்த தன்மையை உறுதிப்படுத்த உதவும் உத்திகளில் எல்லாம் தலைமையானது அவனது பெயரே. சங்க அகப்பாடல்களில் வரும் தலைவன், தலைவி,தோழி முதலியோர் பெயர் சுட்டி வழங்கப் பெற மாட்டார்கள். அவர்களை அவன், அவள் என்றே குறிப்பிடுவது மரபு. இந்தச் சூத்திரத்தைக் காணும்போது அன்றையத் தமிழன் உணர்ச்சிப் பொதுமையின் தலைமையை உணர்ந்தவன் என்பதை அறிகிறோம். இந்தச் சூத்திரத்தைப் பின்பற்றியே எட்டுத்தொகையில் சேர்ந்த அகப்பாட்டுக்கள் எல்லாம் இயற்றப்பட்டன. வடமொழியில் இக்கொள்கை அழகியல் நூல்களிலே ஏற்றுக்கொள்ளப்பட்டது கி.பி. 10 ஆம் நூற்றாண்டிலேயாகும். ஆகவே சங்கத் தமிழன்தான் உலகில் முதன்முதலாக உணர்ச்சிப் பொதுமையின் சிறப்பை உணர்ந்து நூலியற்றியவன் என்பது உறுதியாகிறது. (அ.வெ. சுப்பிரமணியன், அழகியல் ஒர் புதிய பார்வை,2005 பக்.41)

சங்கச் சான்றோர்களின் பாடல்கள் பற்றி சுப்பிரமணியன் மேலும் கூறுவது நோக்கத்தக்கது: "சங்கப் பாடல்கள் நடைமுறையில் காணாத நிகழ்ச்சிகளைக் காட்டுவதில்லை. கதை மாந்தரின் இயல்புகள் உலகில் நாம் பெரும்பான்மையாகக் காண்பனவாகவே உள்ளன. சுவைக்காகச் சிறுசிறு மாறுபட்ட பாடல்களைக் காட்டினும் அவையும் நடப்பியலுக்கு முரணாக இருப்பதில்லை. இதனால் உணர்ச்சிப் பொதுமை என்பது இப்பாடல்களில் மிகச் சிறப்பாக அமைகின்றது. இதன் விளைவாக கவிஞர்கதைமாந்தருடன் ஒன்றிப்போதல் என்ற நிலை எளிதில் தோன்றி நிலைபெறுகின்றது. இலக்கிய இன்பம் பெரிதாகத் தோன்றிச் கவிஞரை மகிழ்விக்கிறது" (மேலது பக். 46) சங்கச் சான்றோர் மக்களை நெறிப்படுத்துவதில் மிக அக்கறையுடையோராகச் செயற்பட்டனர். வாழ்க்கை என்பது வாழ்வதற்கே. இளமை போனால் மீளாது. இளம் மனைவியைப் பிரிந்து பொருள் தேடி வருதலால் என்ன பயன் என்ற அடிப்படையில் நிஜத்தை மக்களுக்கு உணர்த்தும் வகையில் பாடல் இயற்றினார்கள். சான்றாகப் பின்வரும் பாடல்களை வாசகர்களுக்காகத் தரப்படுகிறது:

"புணரின் புணராது பொருளே..." (நற்றிணை பாடல் 16),

"இறந்து செய்பொருளும் இன்பந் தரும் இளமையின் சிறந்த வளமையும் இல்லை..." (நற்றிணை பாடல் 126),

".....நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்று தன்செய்வினப் பயனே
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் என்பதுவே.". (நற்றிணை பாடல்-110),

"இன்னுயிர் தருதலும் ஆற்றுமோ முன்னிய தேஎத்து முயன்று செய்பொருளே?" (பாலைக்கவி 06) முதலான பாடல்களில் இளம் மனைவியை நெடுங்காலம் பிரிந்து சென்று, தேடிவரும் பொருளால் எப்பயனும் இல்லை என வாழ்க்கைத் தத்துவம் பேசுதலும் நோக்கத்தக்கது.

இவ்வாறாக சங்கச் சான்றோர் இளங்குடும்பத்தினரை நெறிப்படுத்தும் ஆலோசகர்களாகவும் செயற்பட்டிருத்தல் படித்து இன்புறத் தக்கனவாகும்.

சங்க காலத்துக் கவிஞர்கள் இயற்கை உண்மையைச் சித்திரிப்பதில் ஆர்வமுடையவர்கள். தெளிந்த அறிவுக்கெட்டாத மயக்கப் பொருள்களிலே மனத்தைச் செலவிட்டுஅவர்கள் குருட்டாட்டம் ஆடவில்லை. மிகைபடக் கூறுதலை அவர்கள் பெரும்பாலும் மேற்கொள்ளவில்லை. மக்கள் வாழ்வை அழகு செய்வனவாக எவை எல்லாம் அழகோஅவை எல்லாவற்றின் மீதும் பேரார்வம் கொண்டிருந்தனர். அவர்கள் கையாண்ட தமிழ் அவர்களது கருத்துக்களை வெளியிடுவதற்கு ஏற்ற இனிய அழகிய கருவியாக வாய்ந்திருந்தது. சுவைத்துச் சுவைத்து தேர்ந்தெடுத்த சொற்கள்- பொருள் ததும்பும் தொடர்கள் – கருத்தோடு பிணைந்து இயலும் இசை – அழகு நிரம்பிய வடிவங்கள், உணர்ச்சி ததும்பும் செய்யுட்கள் இவை யாவும் செறிந்தவை சங்க இலக்கியங்கள். "நவில்தொறும் நூல்நயம் போலும்.." (783) எனத் திருவள்ளுவர் கூறியுள்ளது சங்க இலக்கியச் சிறப்புக்களைக் கருதியே போலும்! எனப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கூறுவதும் (1947:93) நோக்கத்தக்கதே.

மாண்புறு கணினிகள்

மேவிடும் செய்திகள்!!

நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் கணினி உலகில் நாளாந்தம் கணினி பற்றியும், கணினி மென்பொருட்கள் பற்றியும், கணினிப் பயன்பாட்டால் உருவாகும் புதிய கண்டு பிடிப்புக்கள் பற்றியும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இவை பற்றிய தகவல்களை நாங்கள் அறிந்துகொள்வது மிகவும் தேவையான ஒரு நடவடிக்கையாக இருக்கும் என நான் கருதுகின்றேன். வாசம் நிறைந்த மலராக நறுமணம் பரப்பியவாறு வாசகர்களுக்குப் பயனுள்ள படைப்புக்களைத் தாங்கி வரும் தளிர் சஞ்சிகையில், சமூகத்திற்குத் தேவையான இந்தத் தலைப்பில் எனது கட்டுரைத் தொடர் இடம் பெறுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்தக் கட்டுரைத் தொடர் பற்றிய உங்கள் கருத்துக்களைத் தெரியப் படுத்துங்கள்.

இந்த இதழில் சிறிய அளவிலான கணினியின் துணை கொண்டு பார்வை குறைந்தவர்களுக்கும், பார்வை அற்றவர்களுக்கும் உதவும் வகையில் ஒரு கண்ணாடியை உருவாக்குவதற்காக நடைபெற்று வரும் ஒரு ஆய்வுத்தகவல் பற்றி உரையாடுவோம்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண் தெரியாதவர்கள் பயன்படுத்துவதற்காக ஒரு விசேடமான ஸ்மார்ட் கண் ணாடியை உருவாக்குகின்றார்கள். இந்தக் கண்ணாடிகளின் பிரேமுக்குள் ஒரு கமராவையும், பொக்கட்டில் வைத்திருக்கக்கூடிய சிறிய கணினியையும் கொண்டிருக்கும். இந்தக் கண்ணாடியை அணிந்திருப்பவர்களுக்கு முன், ஏதாவது ஒரு பொருள் இருந்தால் தெரியப் படுத்தப்படும் பொறிமுறையைக் கொண்டதாக கண்ணாடி உருவாக்கப்பட்டது. பிரேமுக்குள் இருக்கும் இரண்டு கமராக்கள் முன்னுள்ள பொருட்களின் தூரத்தை அளவிட்டு இந்தத் தகவலை ஒரு ஒளித்திரையாக மாற்றி விடுகின்றன.

இதற்காக கமராவால் தகவல் சேகரிக்கப்பட்டு கண்ணாடி அணிந்திருப்பவரின் பொக்கட்டில் இருக்கும் சிறிய கணினிக்கு அனுப்பப் படுகின்றது. கணினியால் பெற்றுக்கொள்ளப்படும் தகவல் பரிமாற்றம் செய்யப்பட்டு ஒரு உருவமாக மாற்றீடு செய்யப்படுகின்றது.

இந்தக் கண்ணாடியில் ஒளி வடிவக் குறிகாட்டிகளை உருவாக்கும் வசதியும் உள்ளது. இந்தக் கண்ணாடி சில தகவல்களை வாசித்து ஒலி வடிவில் அணிந்திருப்பவருக்கு தெரியப்படுத்தும் வசதியையும் கொண்டுள்ளது. இந்தக் கண்ணாடியால் பார்கோர்ட் வாசிக்கப்பட்டு பொருட்கள் பற்றிய தகவல்களையும் அணிந்திருப்பவர்களுக்குத் தெரியப் படுத்தவும் முடியும்.

இந்தக் கண்ணாடியை கலாநிதி ஸ்ரீபன் கிக்ஸ் அவர்கள் உருவாக்கி வருகின்றார். இவர் நியூரோசயன்ஸ் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். இந்தக் கண்ணாடியின் விலை 600 பவுண்ஸ் அளவில் இருக்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது. இந்தக் கண்ணாடியால் பேருந்துகளிலும், புகையிரத நிலையங்களிலும் உள்ள அறிவித்தல் பலகையில் உள்ள தகவல்களும் வாசிக்கப்பட முடியும். கண்பார்வையற்ற எல்லோருக்கும் இந்தக் கண்ணாடி யால் பயன் ஏற்படும் என்று சொல்ல முடியாவிட்டாலும் கண்பார்வையற்ற பலருக்கு, இந்தக் கண்ணாடி பயன்தருவதாக அமையும் என்று ஆராய்ச்சி யாளர்கள் கருதுகின்றார்கள். இந்தக் கண்ணாடி பயன்பாட்டிற்கு வருவதற்கு மேலும் சில மாதங்கள் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. கண் பார்வையற்றவர்களில் எழுபத்தைந்து வீதமானவர்களால் ஒளியை உணரக்கூடியவர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு இந்தக் கண்ணாடியால் பயன் உண்டு என்று ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். இந்தக் கண்ணாடியின் தொழிற்பாட்டில் பொருத்தமான மென்பொருளும் பயன்படுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

தளிர் வாசகர்களே! இந்த இதழில் கணினியின் துணைகொண்டு உருவாகும் ஸ்மார்ட் கண்ணாடிகள் பற்றிய செய்தியைக் கவனித்தோம். மீண்டும் சில செய்திகளுடன் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்றி. வணக்கம்.

அன்புடன், அகணி சுரேஷ்

SHAN THAYAPARAN

Sales Representative

Dir: 416.567.7675

Bus: 416.321.2228

Buy or Sell...
Call us first and Compare

SHAN'S
Home Team

www.shan123.com

Re/Max Vision Realty Inc. Brokerage

INDEPENDENTLY OWNED & OPERATED

Not intend to solicit property currently listed for sale or individuals under contract

வெள்ளை நிறப் பெண்களையே ஆண்கள் விரும்புவதன் ரகசியம்

பெண் தேடும் படலம் ஆரம்பித்துவிட்டால், பல மாப்பிள்ளைகளின் முக்கியக் கோரிக்கை தனக்கு வரப்போகும் மனைவி வெள்ளையாக, நிறமாக, சிவப்பாக இருக்கவேண்டும் என்பதே. குணம், கல்வி, குடும்பப் பின்னணி என்று வாழ்க்கைக்கு அவசியமான எத்தனையோ இருக்க, வெள்ளை நிறத்தில் ஏன் மோகம் அத்தகமாக இருக்கிறது. 'இது ஒரு குழந்தை மனப்பான்மை என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள்.

பதின்மப் பருவத்தில் பெண்களுக்கு வெள்ளை நிறச் சருமத்தின் மீது ஆசை வருகிறது. ஆண்களுக்கு உயரமாக வளர வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. பெண், தனக்கு வரும் கணவன் திடகாத்திரமாகவும், உயரமாகவும், அழகாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறாள். ஆணோ, தனக்குத் துணைவியாக வருபவள் அழகில் சிறந்தவளாக, அதுவும் செக்கச் சிவந்த பெண்ணாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறான்.

மனோதத்துவ ரீதியாக இப்படி நிறம், உயரம் போன்றவற்றில் அக்கறை கொள்வதை கொம்ப்ளெக்சன் என்று கூறுகிறார்கள்.

நமது சமுதாயத்தில் இயல்பாகவே உடல்தோற்றத்திற்கு மிகுந்த மதிப்பு அளிக்கப்படுகிறது. ஒரு குழந்தை பிறந்ததும் ஆணா, பெண்ணா என்று கேட்ட மறுநிமிடம் குழந்தை கறுப்பா, சிவப்பா? என்பதுதான் அடுத்த கேள்வியாக இருக்கிறது. திருமண ஊர்வலம் நடந்தாலும், பெண் நல்ல நிறமாக இருக்கிறாளா? என்பது பற்றிய பேச்சு எழுவதைப் பார்க்கிறோம்.

இயல்பாக நமது மனம் இல்லாத ஒன்றை பற்றி ஏங்கும். அதை எப்படியாவது பெற வேண்டும் என்றும் விரும்பும்.

மேனி நிறத்தை மெருகூட்டுவதாக நிறைய விளம்பரங்கள் வருவது பெரும்பாலானவர்களுக்கு சிவந்த தேகத்தில் இருக்கும் அக்கறையை எடுத்துக் காட்டும் சிறந்த உதாரணமாகும். உண்மையிலேயே எந்தப் பொருளும் இயல்பான வண்ணத்தை மாற்றிவிடாது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனாலும் அதன்மீது உள்ள ஏக்கத்தால் அத்தகைய பொருட்களை உபயோகப்படுத்தத் தொடங்குகிறோம். அப்படி நிறம் மாறிவிடுவது நிஜமென்றால் உலகில் ஒரு கறுப்பு மனிதனையும் காணவே முடியாது. ஏக்கம் கொண்டவர்களின் மனம் சமாதானம் அடைவதற்கு இந்த தயாரிப்புகள் உதவுகின்றன அவ்வளவுதான்.

சிவந்த நிறத்திற்காக ஆசைப்பட்டு ஒவ்வொரு தயாரிப்புக்காக மாறுவது, பெண் தேடும்போதும் நிறத்தைக் காரணம் காட்டி மறுத்துவிடுவது என்று காலம் நகரும்போது ஒருவித சலிப்பும், மாற்ற இயலாத காரணத்தால் ஒருவித இயலாமையும் ஏற்படும். இது மன இறுக்கத்தைக் கொண்டு வரும். நீண்டநாள் பாதிப்புகள் மனவியாதியாகப் பரிணமிக்கலாம்.

படிக்கும் பருவத்தில் அல்லது பணியாற்றும் பருவத்தில் ஏற்படும் இதுபோன்ற நிறத் தோற்ற மனபான்மை ஒருவரின் படிப்பு அல்லது முன்னேற்றத்தை பாதிப்படையச் செய்யும்.

பெற்றோர், குழந்தை பருவத்தில் இருந்தே தங்களது குழந்தையின் தோற்றம், நிறம் பற்றி விமர்சனம் செய்வதை தவிர்த்து வளர்த்து வந்தால் இளம் பருவத்தில் இதுபோன்ற பிரச்சினைகளை தவிர்க்கலாம். ஒருவரை அழகு என்று கொண்டாடுவதும், மற்றவரை அழகற்றவர் என்று ஒதுக்கி வைப்பதும் பிற்காலத்தில் பிரச்சினைகளைத் தரலாம் என்பதால், பெற்றோர் கவனமாக இருக்க வேண்டும்.

கவிதைகள்

வாழ்த்திடுவோம்!

காலைப் பதித்துநாம்வாழக்
கைகொடுத் திட்டகனடாவே!
யூலைமுதலாம் நாளிதிலே
நூறுவாழ்த்துகள் கூறுகிறோம்!!

தனித்துவம் பேணிவாழ்ந்திடவும்
தலைநிமிர்ந் துழைத்துஉயர்ந்திடவும்
கனிவுடன் எம்மைஅணைக்கின்ற
கனடியத் தாயைவாழ்த்திடுவோம்!

வாழ்த்துகள் கூறிவணங்குகிறோம்!
மனநிறைவோடுவாழ்த்துகிறோம்!!
வாழ்வளித் தெம்மைக் காத்துவரும்
வளம்மலிகனடாவாழியவே!!

பிறந்தநாளில் வாழ்கவெனப்
பிள்ளைகள் நாங்கள் வாழ்த்துகிறோம்!
சிறந்தவாழ்வைதந்தாய்நீ!
செல்வச் செழிப்புடன் வாழியநீ!!

கனடியக் கொடிமுன் தலைசாய்ப்போம்!
கண்ணியமாயதைப் போற்றிடுவோம்
அனைவரும் எழுந்துநின்றதற்கு
அன்பாய் வணக்கம் சொல்லிடுவோம்.

– சபா. அருள்சுப்பிரமணியம்

பனிக்காலம் தரும் வாழ்வியல் சித்தாந்தம்

பனிக்காலம் ஓர்நாள் ரொறன்ரோப் பூங்காவில்
தனியாகஉலாவிடத் துணிந்திட்டேன் ஆசையினால்
நனியுயர் மரங்கள் பசுமைதருகோலமிழந்தே
முனிவுற்றுபசுமைபோய் கருநிறம் கொள்மாயம்!

மாயமாய் மறைந்தபசும்புல் தரைகள்
ஆயாசம் போக்கும் நிழல்மரங்கள் எங்கே
ஆயமாய் கன்னியர் காளையர் மற்றுமுளோர்
நேயமுடன் கூடியசோலைவளம் பனிக்காடாம்!

காடுநிறைபுற்றரைபனிபடர் மேடாயிற்றே
கூடுவார் ஆடுவார் பொழுதுபோக்குவாரின்றி
தேடுவாருமின்றியேவெண்பனிக் காடாய்ப்;
பீடுமின்றிவனப்புமின்றிசோபை இழந்ததே.

நிலையாமையுணர்த்திடும் அறநிலை இலக்கியங்கள்
நிலைதளரவைத்திடும் வாழ்க்கையின் மரணங்கள்
தலைசுழலவைத்திடும்; அன்பிலார் வன்செயல்கள்
தலைமுதல் கால்வரைசெயலறவைத் திடும்பனியே.

பனிப்பருவகாலப் பூங்காமயானங்களில்
தனிமரங்கள் பனிமூடியதரைகள் மேடுகள்
நனியுறநோக்கின் திருநீறாடும் சிவனின்
தனிப்பெருஞ் சுடலைக்காட்சிநினைவில் தோன்றுமே.

– காரையூர்க் கவிஞர்

வைன் போத்தல்களை சரிவாக வைப்பது ஏன்?

- ராஜ் -

'வைன்' (Wine) என்று சொல்லப்படும், திராட்சைப் பழத்தினால் உருவாக்கப்படும் மதுவகை உலகப் பிரசித்தி வாய்ந்தது. டாக்டர்கள் கூடச் சிலசமயங்களில் ஒரு கோப்பை வைனைத் தினமும் குடித்து வருவது நல்லது என்று சொல்வதுண்டு. யேசுநாதர் கூடத் தனது கடைசி விருந்தில், சிவப்பு வைனைத் தன் சீடர்களுக்குக் கொடுத்து, தன் இரத்தத்தை பருகுவதாக உதாரணமும் சொல்லியிருந்தார். யேசுநாதர் காலத்திலேயே இந்தத் திராட்சை மது திருமண விருந்துகளில் குடிக்கப்பட்டதற்கான சான்றுகள் பைபிளில் உண்டு. ஆனால் பைபிளில் சொல்லப்பட்டது மதுவல்ல, வெறும் திராட்சை ரசம்தான் என்று மறுப்பவர்களும் உண்டு. போகட்டும், இங்கு நாம் பேசப் போவது யேசுநாதரைப் பற்றியோ அல்லது பைபிளைப் பற்றியோ அல்ல. வைனைப் பற்றித்தான். அதிலும் ஒரு சின்ன, சிறப்பான ஒரு தகவலைப் பற்றித்தான்.

திராட்சை ரசத்தைப் பிழிந்து, அதை மதுவாக மாற்றுவதற்கான சில காரணிகளுடன் சேர்த்து, ஒரு சிறப்பான இடத்தில் பாதுகாப்பாகப் பலநாட்கள் வைத்துவிடுவார்கள். அதுவே 'வைன்' என்று சொல்லப்படும் மதுவாக மாறுகிறது.

திராட்சையின் புளிப்புத்தன்மை, இனிப்புத்தன்மை, பச்சைத் திராட்சை, சிவப்புத் திராட்சை என்னும் வகைகளைக் கொண்டு, வைன், செக்ட், ஷாம்பைன் என்னும் மதுவகைகளாகப் பிரிக்கப்படுவது தனிக் கதை.

வைன் எத்தனை வருடங்கள் பாதுகாப்பாக வைக்கப் படுகின்றதோ, அதைப் பொறுத்துச் சிறந்த வைனாக மாறுகிறது. பல ஆண்டு கள் பாதுகாக்கப்பட்ட வைன்கள் சிறந்தவையாகவும், விலை மிக அதிகமானவையாகவும் இருக்கும்.

இதில் நான் சொல்ல வந்த விசேசத் தகவல் என்னவென்றால்.....

வைனைப் பாதுகாக்கும்போது, எப்போதும் அந்த வைன் இருக்கும் கண்ணாடிக் குடுவையை (Bottle), ஒரு குறிப்பிட்ட கோணத்தில் சரித்து வைத்தே பாதுகாப்பார்கள். ஏன் இப்படிச் சரிந்த நிலையில் போத்தில் களை வைத்துப் பாதுகாக்கிறார்கள் என்று பலருக்குத் தெரிவதில்லை. சிலர் அதற்கு ஒத்துவராத உண்மையல்லாத காரணங்களையும் சொல்வார்கள்.

ஒரு தரமான நட்சத்திர ஹோட்டலுக்குச் சென்று நல்லதொரு வைனையோ, ஷாம்பைனையோ நீங்கள் ஓடர் செய்தால், ஓடர் செய்யப்பட்ட பாட்டில்களை ஒரு பாத்திரத்தில் சரிந்த நிலையில் வைத்தபடி, கொண்டுவந்து உங்கள் மேசையில் பரிமாறுவதற்காக வைத்திருப்பார்கள். இப்படிப் பாட்டில்களைச் சரிந்த நிலையில் ஏன் வைத்திருக்க வேண்டும் என்பதைச் சொல்வதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கம்.

திராட்சை ரசம் புளித்து வைனாக மாறுவதற்கு, ஒரு சிறப்பான இடத்தில் பாதுகாப்பார்கள் என்று முன்னர் சொன்னேனல்லவா? அப்படிப் பாதுகாக்கப்படும் வைனுக்கு முதல் எதிரியாக இருப்பதே ஒட்சிசன் தான். வைன் போத்தில் மிகவும் இறுக்கமாக, ஒரு தக்கையினால் (Cork) அடைக்கப்பட்டிருக்கும். இந்தத் தக்கையினூடாகச் சிறிதளவு ஒட்சிசன் வாயு வைன் போத்திலுக்குள் சென்றாலே போதும், அந்த வைன் ஒட்சிசைட் என்னும் தாக்கத்துக்குள்ளாகிப் பழுதடைந்துவிடும். வைன் போத்தில்களை நிலைக்குத்து நிலையில் (Horizontal) வைத்துப் பாதுகாத்தால், உள்ளே வெளியே ஏற்படும் வெப்ப நிலை மாற்றங்களினால், தக்கையில் உருவாகும் விரிவினால், நுண்ணிய துளைகள் எற்படும். அந்தத் துளைகளினூடாக வெளியேயுள்ள காற்றிலிருந்து ஒட்சிசன், வைன் போத்திலுக்குள் நுழைந்து வைனைப் பழுதடையச் செய்யும்.

வைன் போத்தில்களைக் குறித்த கோணத்தில் சரிவாக வைத்திருக்கும் பொழுது, வைன் எப்போதும் தக்கையை நனைத்தபடி இருக்கும். அதனால் வெப்பநிலை மாற்றங்களினால் தக்கையில் நுண்ணிய துளைகள் ஏற்படுவது தடுக்கப்படும். இதனாலேயே போத்தில்களில் இருக்கும் வைன் தக்கையைத் தொட்டுக் கொண்டிருக்கும் கோணத்தில் சரிக்கப்பட்டுப் பாதுகாக்கப் படுகிறது.

அதுசரி, பாதுகாப்பதற்குத்தானே சரித்து வைக்க வேண்டும்? நட்சத்திர ஹோட்டல்களில் ஏன் சரித்தபடியே கொண்டுவந்து பரிமாறுகிறார்கள்?

ஒரு வாடிக்கையாளன் வைனையோ, ஷாம்பைனையோ ஓடர் செய்யும் போது, போத்திலைச் சரிந்த நிலையில் கொண்டுவந்து பரிமாறும்போது. அந்த ஹோட்டல் நிர்வாகம் ஒரு செய்தியை அந்த வாடிக்கையாளனுக்குச் சொல்லாமலே சொல்கிறது. "இப்பவே நாங்கள் போத்திலைச் சரித்துக் கொண்டு வருகிறோமென்றால், எப்போதும் நாங்கள் சரித்து வைத்துத் தான் பாதுகாக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அம்மா மேல் சத்தியமாய் எங்களை நம்புங்கள்" என்ற செய்திதான் அது. ஆனால் அப்படிப் பரிமாறப்படும் அந்தச் சிறிது நேரத்தில், போத்திலில் ஒட்சிசனால் எந்தப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்பதே உண்மை. வாடிக்கையாளனைக் கவரச் செய்யும் ஒரு உத்தி அது.

The Queen Palace

Banquet Hall

திருமணம், பிறந்த நாள், பூப்புனித நீராட்டு விழா,
கல்லூரி ஒன்றுகூடல், வரவேற்பு உபசாரம் மற்றும் சகல விதமான
வைபவங்களுக்கும், அவற்றிற்கான அழகிய மண்டபம், புதிய மணவறைகள்
மற்றும் அறுசுவையான உணவு வகைகளை தரமாகவும் நிறைவாகவும் பெற்றிட அழையுங்கள்.

Vasanth Vell
416 844 0000

Deepa Vasanth
416 554 6872
info@queenpalacebanquet.com

1173 Brimley Road, Scarborough, Ontario M1P 3G5. 416 439 9889
E-mail: thequeenpalace@gmail.com www.queenpalacebanquet.com

புரட்சிப் பெண் புலவர் ஔவையார்

ஔவையார் என்றதும் தமிழ் இலக்கியங்களிலும் தமிழர் பண்பாட்டிலும் முதுமை வாய்ந்த பெண் புலவர் ஒருவர் என்பதும், அறநெறியும் பக்தி நெறியும் புகட்டிய புலவர் என்பதுமே தெற்றெனப் புலப்படுகின்றன.

சங்க இலக்கியம் முதலாகப் பல பெண்பாற் புலவர்களும் கவிநர்களும் வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களில் பழமையும் பெருமையும் மிக்க பெண்பாற் புலவரே சங்க கால ஔவையார் ஆவார். சங்கப் புலவர்கள் பெரும்பாலும் சிறப்புப் பெயர்களாலே வழங்கப்பட்டனர். சங்க கால அகத்திணை இலக்கியங்களில் பாட்டுடைத் தலைவர்கள் பெயர் சூட்டப்படாமல் தலைவன் தலைவி, தோழி, நற்றாய், செவிலித்தாய் என்ற உறவுமுறை சுட்டும் பெயர்களால் வழங்கப்படலாயினர். தொடல்காப்பியர் அவற்றுக்கு வரைவிலக்கணமும் தந்தார்.

"மக்கள் முதலிய அகனைந் திணையில்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்.. "
(தொல். பொருள். அகம்:54)

சங்க இலக்கியப் புலவர்களும் அம் மரபைப் பெரிதும் பின்பற்றி சங்க அகத்திணைப்பாடல்களைப் படைத்தனர். சங்க இலக்கியங்கள் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 552 எனவும், அவர்களிற் பெண்பாற் புலவர் 33 பேர் என்பதும் அறியப்படுகின்றன. இப்பெண் புலவர்களது பெயர்கள் சிறப்புப் பெயர்களால் ஆனவையாகும். இவ்வரிசையில் ஆதிமந்திழியார், ஓரம்போகியார், பொன்முடியார், காவற்பெண்டு,

- இலக்கியப் பிரியன் -

நக்கண்ணையார், பேயார், மாரிப்பித்தியார், வெள்ளி வீதியார், வெண்மணிப்பூதியார் என்ற பெயர்களைச் சான்றாகக் காட்டலாம். ஓரம்போகியார் என்ற பெயரை எடுத்துக்கொண்டால் ஓரம்போகி + ஆர் ஸ்ரீ ஓரம்போகியார். இதில் ஓரம்போகி என்பது ஊர்ப் பெயர் என்றும், அது அப்புலவரின் காரணப் பெயரென்றும் அறிஞர் வாதிடுவர். வேறு வகையிலும் விளக்கம் தரப்படுகிறது: ஓர் + அம்பு + போக்கி என்னும் வில்லாண்மை குறித்த புகழ்ச் சொல்லானது, ஓர் – அம்பு – போக்கி என மாற்றம்பெற்று, "ஓரம்போகி" என்றாயிற்று எனவும்., ஓர்– அம்பு – ஏவி என்பது "ஓரம்பேவி" யாகிப், பின் "ஓரம்போகி" என்றாயிற்று எனவும், அத்துடன் "ஆர்" விகுதி சேர்ந்து ஓரம்போகியார் என்று பெண்பாற் புலவர் பெயராக வழங்குவதாயிற்று எனவும் விளக்கம் கூறப்படுவதுமுண்டு. ஓரம் என்பது உண்மைக்கு மாறாக நீதியை வளைத்துக் கூறல். அங்ஙனம் கூறாத மனத் திண்மையாளர் இவராதலால் "ஓரம்போகியார்" என்ற காரணப்பெயர் வழங்கிற்று எனவும் ஐங்குநூறாறு உரையில் புலிகேசிகன் விளக்கம் கூறுவர்.

"ஔவையார் என்பது ஒரு பொதுச்சொல் என்பர். சங்க காலமாகிய மூவேந்தர் ஆட்சிக் காலத்தில் புலவராக இருந்த பெண்கள் அனைவரும் "ஔவையார்" என்றே அழைக்கப்பட்டனர் என்ற ஒரு கருத்தும் உண்டு" என பைம்பொழில் மீரான் "தலைநிமிர்ந்த தமிழிச்சிகள்"

(2007:4) என்ற நூலில் கூறுவதும் நோக்கத்தக்கது. அப்புலவர்கள் கல்வி கேள்விகளிற் சிறந்தும், மானுடத்தைப் போற்றுவதில் மேம்பட்டும் காணப்படுகின்றனர்.

சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையார் கல்வி கேள்விகளிற் சிறந்தவராகவும், அரசசபைப் புலவராகவும், அரசர் முன்னிலையில் துணிச்சலுடன் நல்ல கருத்துக்களை எடுத்துரைக்கத் தக்கவராகவும், சொல்வன்மை கைவரப் பெற்றிருந்தார் என்பதும், சமூகக் கண்ணோட்டம் பற்றிய அவரது பாடல்கள் இன்றைய சமூக வியலாளரது கருத்தை ஈர்ப்பதாகவும் அமைந்துள்ளன.

ஔவையார் சங்க காலத்தில் வாழ்ந்த பெண்பாற் புலவர்களிலே தலைமைத்துவமும், சிறப்பும் செல்வாக்கும் பெற்றவராக வாழ்ந் திருக்கிறார். இவர் பாடிய சங்க இலக்கியப் பாடல்களாக ஐங்குறுநூறு நூலிலே மருதத்திணை பற்றி 100 பாடல்கள், குறுந்தொகையில் மூன்று பாடல்கள், அகநானூற்றில் இரு பாடல்கள், நற்றிணையில் இரு பாடல்கள், புறநானூற்றில் 13 பாடல்கள் எனப் பல பாடல்கள் சங்க இலக்கியங்களுக்குச் சிறப்புச் சேர்க்கின்றன.சங்க இலக்கிஙகளிலுள்ள ஔவையாரின் பாடல்களிருந்து ஔவையார் பெரும்பாலும் எந்த மன்னருடன் பெரிதும் தொடர்பு கொண்டிருந்தார் என்ற தகவல்கள் ஔவையார் எந்த நாட்டிற்கு உரியவர் என்பதைத் தீர்மானிக்க உதவியாக அமையலாம

அதியமான் தகடூர் என்ற பகுதியை ஆண்டு வந்தான். இப்பகுதியே தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தது எனக் கருதப்படுகிறது. அதியமானின் வீரத் திறனையும், அவனது வள்ளல் சிறப்பையும் அறிந்து அவனைப் பாடிப் பெருமைப்படுத்திப்,பரிசில் பெறும் நோக்குடன் ஔளையார் அவனது அரண்மனைக்கு வந்தார். ஔவையார் வந்த செய்தி அரச னுக்கு அறிவிக்கப்பட்டது. ஆயினும் அரசன் ஔவையாரைச் சந்திக்கத் தாமதமாகிவிட்டது.ஆதனால்,மன்னன் தன்னை அவமதித்தான் என எண்ணிய ஔவையார், கோபம் அடைந்து அரன்மனையை விட்டு கன்றார். அதனை அறிந்த அதியமான் ஔவையார் சென்ற வழியே சென்று, அவரை வழியிற் சந்தித்து. மன்னிப்புக்கோரி அவரைத் தன் அரண்மனைக்கு அழைத்து வந்து, அவரைத் தக்கவாறு உபசரித்து தன் அரண்மனையிற் சிறிது காலம் தங்க வைத்து, அவைக்களப் புலவராக மதிப்பளித்தான் எனவும் கூறப்படுகிறது.எனவே அதியமானின் ஆட்சி நிலப்பரப்பில் ஔவையார் வாழ்ந்தார் எனத் துணியலாம்.

ஔவையார்மீதும் அவரது கவித்திறனிலும் பெரும் மதிப்புக் கொண்டிருந்த அதியமான், ஔவையைக் கௌரவிப்பதற்குரிய வாய்ப்பை எதிர்பார்த்திருந்தான். சிரஞ்சீவியான வாழ்வளிக்கும் நெல்லிக்கனி ஒன்று அதியமானுக்கு அன்பளிப்பாகக் கிடைத்தது. அக்கனியை உண்டால் நீண்ட காலம் வாழலாம் என்பதை அரசன் நன்கு அறிவான். ஆனால்,ஔவையார் இக்கனியை உண்டு நீண்ட காலம் வாழ்ந்தால் நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லன வற்றைப் போதிப்பார் என்றுணர்ந்த அதியமான் அக்கனியை ஔவையாருக்கு வழங்கிப் பெரும்புகழ் எய்தினான் என்பதும் மரபு வழிக்கதையாகும். ஔவையார், அதியமானிடம் நட்பும் மதிப்பும் கொண்டிருந்ததோடு, அதியமானின் அரண்மனையிலும் நெடுங்காலம் வாழ்ந்திருந்தார். அத்துடன் அம்மன்னனைப் பற்றிப் பல பாடல்களும் பாடியுள்ளார்.

அதியமான் பொருட்டு ஔவையார் தொண்டைமானிடம் தூதும் சென்றார். சங்க காலப் புலவர்கள் மன்னர்களுக்கு நல்லறிவு புகட்டுவோராகவும் செயற்பட்டிருக்கிறார்கள் என்பதற்குப் புறநானூற்றில் பல பாடல்கள் சான்றாக உள்ளன. கல்வியிலும் புலமையிலும் சிறந்து விளங்கிய ஔவையாரும் அவ்வகையிற் செயற்பட்ட சிறந்த பெண்மணிப் புலவராவார். வீரயுகம் எனப் போற்றப்பட்ட சங்க காலத்தில் போர் என்பது சாதனைக் களமாகவே கருதப்பட்டது. வீரத்தின் விளைநிலமாக சங்ககாலம் காணப்பட்டது. வீரத் தாய்மார் மலிந்த காலமாக அக்காலம் போற்றப்பட்டது. அக்காலத்தில் மூவேந்தரிடையே இடம்பெற்ற தொடர்ச்சியான போர்களினால் தமிழினம் அழிந்துகொண்டேயிருந்தது. அவ் வேளையில் ஔவையார் குரல் கொடுத்தார். போரை நிறுத்தி மக்கள் உயிரைக் காக்கும் முயற்சியில் ஔவையார் ஈடுபட்டார். அதிய மானுக்கும் தொண்டைமானுக்கும் போர் மூளப்போகிறது என்ற செய்தியை ஔவையார் அறிந்தார். இப்போரை எவ்வாறாயினும் நிறுத்த வேண்டும் என நினைத்து, அதியமானிடம் சென்றார்.

..உன் ஆட்சியில் மக்கள் நலமாகவும் அமைதியாகவும் வாழ்கிறார்கள். போரிடும்போது உயிர்ப் பலிகள் ஏற்படுவது நிச்சயமே. எனவே போர் ஆயத்தங்களைநிறுத்துங்கள் என வேண்டினார். அரசன் ஔவையே தொண்டைமான் படைஎடுத்து வந்து விட்டான் . அவனை எதிர்த்துப் போரிடாவிட்டால் என் வீரத்திற்கு இழுக்காகும். எனவே அவனைத் தடுத்து நிறுத்துவது யார்?என்ற வினா எழுப்பினான் அதியமான். ஔவையார் உடனே தானே தொண்டைமானிடம் சென்று சமாதானம் செய்விக்கிறேன் எனப் புறப்பட்டு அதில் வெற்றியுங்கண்டார்.

அதியமான் இறந்தபோது அவர் துயருற்றுப் பாடிய பாடல் நெஞ்சை உருக்கும் தன்மை வாய்ந்தது. அதியமான் நெடுமான் அஞ்சி இறந்தபின் அவன் உடலை அடக்கம் செய்த சான்றோர் நன்னாளில் அவனுக்கு நடுகல் நாட்டினர். அதில் அதியமானின் பீடும் பெயரும் எழுதி, மயிற்பீலி சூட்டி, நடுகல் விழா எடுத்தனர். அவ்விடத்தே சான்றோர் பலரும் கூடியிருந்தனர். ஆங்கு அவர்களிடையே ஔவையாரும் இருந்தார். அதியமானின் நடுகல்லுக்குச் சில கலங்களில் நறுந்தேறல் படைத்து வழிபட்டனர். அதுகண்ட ஔவையார் துயர்கொண்டு அழுத கண்ணீருடன் பாடல் ஒன்றைப் பாடினார். 'பகைவர் தம் நாடு முழுவதையும் கொடுப்பினும் கொள்ளாத மற மாண்புடைய இந்த அதியமான் இச்சிறு கலங்களில் பெய்து வைத்துள்ள தேறலைக் கொள்வானோ? எனப் பின்வரும் பாடலைப் பாடலானார்:

இல்லா கியரோ காலை மாலை

அல்லா கியர்யான் வாழு நாளே

நடுகற் பீலி சூட்டி நாரரி

சிறுகலத் துகுப்பவும் கொள்வன் கொலோ

கோடுயர் பிறங்குமலை கெழீஇய

நாடுடன் கொடுப்பவுங் கொள்ளாதோனே. (புறம் 232)

அதியமான் நெடுமான் அஞ்சி போரில் ஏழு மன்னர்களை வென்றவன். அவனது வெற்றியை ஔவையார் புகழ்ந்து பாடியுள்ளார். அவ்வாறு பாடும்போது, மன்னா உன் புகழை பெரும்புலவர் பரணர் புகழ்ந்து பாடியதையும் குறிப்பிட்டுள்ளார்.

இப்பாடலிலே ஔவையார் அதிய மானை மட்டுமன்றித் தன் காலத்தில் வாழ்ந்த புலவர் பாணரையும் பாராட்டும் பண்பும் அறியப்படுகிறது. கற்றோரைக் கற்றோரே காமுறுவர் என்பதற்கமைவாக தகுதியான புலவர்களைத் தரமறிந்து, புலவர்கள் பாராட்டினர் என்பதும் அறியப்படுகிறது.

..இமிழ்குரல் முரசின் எழுவரோடு முர சென்று

அமர் கடத்துநின் ஆற்றல் தோற்றிய

அன்றும் பாடுநர்க்கு அரியை இன்றும்

பரணன் பாடினான். (புறம் 99) ..

அதியமான் மட்டுமன்றி, அதியமானின் மகன் பொகுட்டெழினி, நாஞ்சில் வளவன், மற்றும் சேரன், சோழன் ஆகிய மன்னர்களையும் ஔவையார் பாடியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட மன்னர்களின் அரசியல் வாழ்க்கையுடன் ஔவையார் இணைந்தவராகக் காணப்படுவதோடு, அம்மன்னர்கள் பற்றியும் பாடியுள்ளார்.

இவ்வாறு மன்னர்கள் பற்றியும் மக்களின் வாழ்க்கை நெறிபற்றியும் பாடியனவாக 59 பாடல்கள் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. இவரது பாடல்களில் பெண்ணியம் பற்றிய பாடல் மிக முக்கியமானது.

பெண்ணியக் குரல் எழுப்பிய முதற் பெண் புலவர் ஔவையாரே ஆவார். சங்க காலத்தில் ஆண்களின் ஆதிக்கம் மேலோங்கி இருந்தமையை அகத்திணை இலக்கியங்கள் மிக விரிவாகக் குறிப்பிடுகின்றன.

குடும்பத் தலைவர்களால் மனைவியர் ஏமாற்றப்பட்டிருக்கின்றனர். தனக்கு மனைவி இருக்கத்தக்கதாகப் பிற பெண்களை நாடிய கணவன்மார் பற்றிய செய்திகள் சங்கப் பாடல்களில் பரவலாகப் பேசப் படுகின்றன. இச்சமூகக் குறைபாட்டைப் பொறுக்காத ஔவையார் பொதுவாகவே அனைத்து ஆண்களையும் நோக்கிப் புரட்சிக் குரல் எழுப்பினார்.

ஒரு நாட்டின் எந்தப் பாகத்திலாயினும்சரி ஆண்கள் ஒழுங்கானவர்களாகவும் நல்லவர்களாகவும் நடந்துகொண்டால் அந்நாடு சீராக இருக்கும் என்ற பொருள் படப் பாடினார்.

அப்பாடற் பொருள் எல்லோராலும் கவரப்பட்ட தன்மையினாலேயே பலகாலமாக வழங்கிவந்தது என்பது உண்மையாகும். அப்பாடல் வருமாறு:



..நாடா கொன்றோ காடா கொன்றோ

அவலா கொன்றோ மிசையா கொன்றோ

எவ்வழி நல்லவ ராடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே (புறம். 187)

நாடும் காடும் பள்ளமும் மேடும் என்ற பாகுபாடு நிலத்தின்கண் காணப்படுதல் போல, நிலத்து வாழும் மக்களிடையே ஆண்களும் பெண்களும் இளையரும் முதியோரும் என்ற பாகுபாடு தோன்றக் கண்டார்.

இவருள் ஆண்மையம் இளமையும் சிறக்கும் ஆடவர் நல்லவராய வழி யாவரும் நலமுடையராதலும், அவரால் நாடுகள் நல்லிசை பெறுதலும் கண்டு, நிலமே எவ்வழி ஆடவர் நற்பண்பும் நற்செயலும் உடையவராய் விளங்குகின்றாரோ அவ்வழி நின்னை நுல்ல நாடு எனச் சான்றோர் பாராட்டுகின்றனர் – என்ற கருத்தமைய அப்பாடலைப் பாடியமை நோக்கத்தக்கது.

(தொடரும்.)

NON MEDICAL INSURANCE

AGE	45		50		55		60		65		70	
	M	F	M	F	M	F	M	F	M	F	M	F
10K	27	23	28	24	35	30	44	36	60	46	83	62
20K	50	40	52	41	64	54	83	67	115	87	160	118
30K	72	57	74	59	93	78	122	98	169	128	237	174
40K	94	74	98	77	123	101	160	129	223	169	315	230
50K	116	91	120	95	152	125	199	159	278	210	392	287
100K	227	177	235	185	399	245	392	354	550	415	768	569

20 YEARS TERM NON MEDICAL INSURANCE

AGE	45		50		55		60		65		70	
	M	F	M	F	M	F	M	F	M	F	M	F
100K	39	33	63	47	99	79	164	111	267	173	452	297
150K	55	46	91	66	147	103	243	163	397	256	675	442

No Mediacl Exam, No Doctor's Report, No Needles, Fast Approval within 48hrs.

100% Tax FREE Money

Nobody Beats my Service & Price

Thana Manickavasagar
Broker
Cell : **416-728-5772**
Off : **416-519-3896**
Fax : **647-547-8147**

Your Referrals Will be Rewarded

E-mail : thana7@gmail.com Web : www.thana.ca
80 Nashdene Road, Unit D218, Scarborough, ON, M1V 5E4

Dr. பவுல்ராஜ்

வாலிபமும் வயோதிபமும்!

அன்பு உள்ளங்கொண்ட தளிர் வாசகர்களே!

இப்பக்கத்தில் வாலிபர்களைப் பற்றியும் – வயோதிபர்களைப் பற்றியும் ஒரு சிறு ஆராய்ச்சி செய்வது நலமென்று கருதி, தொடர்ந்து எழுத விழைகிறேன். இதைப் படிக்கின்ற நீங்கள் உங்கள் கருத்துக்களை 'தளிர்' வாசகர் பகுதிக்கு எழுதி அனுப்புங்கள்.

வாலிபம்:

பரிசுத்த வேதாகமத்தில் பிரசங்கி என்ற புத்தகத்தில் அதிகாரம் 11:9, 12:1,7 ஆகிய வசனங்களில் இவ்விதமாக எழுதப்பட்டுள்ளது. இவைகள் மனித அறிவைக் கொண்டு எழுதப்பட்டவைகளல்ல. கடவுளுடைய ஆவியானவர் பரிசுத்தமான மனிதர்களின் சிந்தனையில் நுழைந்து, அவர் மூலமாக எழுதப்பட்டவைகள். அவர் எழுதிய அந்த வார்த்தைகளைக் கீழே படியுங்கள்.

"வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்": "உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட: ஆனாலும் இவைகளிளெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி."

"நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை: தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும்...."

"இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை.'

மேலே கூறப்பட்ட வசனத்தின்படி பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அவர்கள் இஷ்டத்திற்கு விட்டு விட்டால் அதைப்போன்ற சந்தோஷம் வேறு எதுவும் நம் பிள்ளைகளுக்கு இருக்காது. ஆனால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு சில கட்டுப்பாடுகளை போடும்போது, பிள்ளைகளின் உள்ளம் பெற்றோர்கள் மேல் கோபமும், எரிச்சலும் அடைகிறது. இதினால் நிறைய குடும்பங்களில் குழப்பங்களும், சண்டைகளும் ஏற்பட்டு சமாதானம் இழந்து போகிறார்கள். இவ்விடயத்தில் கடவுளுடைய வார்த்தையில் சில முக்கியமான காரியங்களை நாம் கவனிக்க வேண்டும்.

1) உன் இளமையிலே சந்தோஷப்படு.

2) உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்.

3) உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட.

ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறிந்து கொள்.

அன்பு இளம் உள்ளங்களே!

நீங்கள் உங்கள் இஷ்டம்போல வழி நடக்கும்போது உங்கள் பெற்றோர்கள் உங்களைக் கண்டிக்காமல் அல்லது தண்டிக்காமல் விட்டாலும், கடவுள் உங்களை நியாயத்தீர்ப்பில் நிறுத்தித் தண்டிக்காமல் விடார் என்பதுதான் உண்மை. பெற்றோர்களின் தண்டனை தற்காலிகமான இவ்வுலக வாழ்க்கையுடன் முடிந்து விடும். ஆனால் கடவுளின் தண்டனை நித்திய நித்தியத்திற்கும் நிலைத்திருக்கும். நீங்கள் கடவுளின் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரே வழி அவருக்குப் பயந்து, பாவமற்ற பரிசுத்த வாழ்க்கை செய்வதுதான்.

இப்படியாக, பரிசுத்தமாகப் பிறந்து, பரிசுத்தமாய் வாழ்ந்து காட்டி, மரித்து உயிர்த்தெழுந்து பரலோகம் சென்ற இயேசு கிறிஸ்து மீண்டும் நம்மையெல்லாம் நியாயந்தீர்க்க இப்பூமிக்கு வரப்போகிறார். அவருடைய நியாயத்தீர்ப்பில் நாம் தண்டனைக்குப் பாத்திரவான்களாயிராதபடிக்கு நம்மை பரிசுத்தமாகக் காத்துக்கொள்வோம். தாய் தகப்பனுக்குக் கீழ்ப்படிந்து நடவுங்கள். வயதில் மூத்தவர்களைக் கனம் பண்ணுங்கள். ஏழை எளியவர்களுக்குத் தானதர்மங்களைச் செய்யுங்கள். சகோதர சிநேகத்தில் நிலைத்திருங்கள். உங்கள் கற்பிற்குக் களங்கம் ஏற்படாமல் நடந்து கொள்ளுங்கள். சட்டத்திற்கு விரோதமான களவு, கொள்ளை, சண்டைகள், மது அருந்துதல், போதைவஸ்துக் களை உட்கொள்ளுதல் போன்ற கொடூரமான பாவங்களை விட்டு விலகுங்கள். இதை நீங்கள் கைக்கொள்ளும் போது, கடவுளுடைய ஆசீர்வாதம் உங்களுக்கும், உங்களைச் சார்ந்தவர்களுக்கும் நிச்சயம் கிடைக்கும்.

வயோதிபம்:

பிரசங்கி 12:2-6 சொல்லுகிறது:

'சூரியனும், வெளிச்சமும், சந்திரனும், நட்சத்திரங்களும், அந்தகாரப்படாததற்குமுன்னும் இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மத்தேயு 24:29,30,31 சொல்லுகிறது:

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பு "சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் (இயேசுகிறிஸ்து) வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்."

வாலிபத்தைக் கடந்து முதுமையை எதிர்நோக்கி நடந்து கொண்டிருக்கின்ற நாம் அனைவரும் அவரைச் சந்திக்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.

எப்போது?

1) திரும்பத் திரும்ப வியாதிகள் வராததற்கு முன்பு.

2) கைகள் தளர்ச்சியடைந்து போகாததற்கு முன்பு.

3) முதுகுத் தண்டு பெலவீனமடைந்து கூனிப்போகாததற்கு முன்பு.

4) பல்களெல்லாம் விழுந்து சாப்பிட முடியாமல் போகாததற்கு முன்பு.

5) கண்கள் பார்வை இழந்து குருடாகிப்போகாததற்கு முன்பு.

6) காதுகள் செவிடாகி கேட்க முடியாமல் போகாததற்கு முன்பு.

7) தொண்டையில் அடைப்பு ஏற்பட்டு குரல் அடங்கிப் போகாததற்கு முன்பு.

8) ஒரு சிறிய மேட்டையும் கடந்து போக முடியாதபடி கால்கள் தள்ளாடிப் போகாததற்கு முன்பு.

9) வழியில் நடக்கும்போது கீழே விழுந்து விடுவேனோ? என்ற பயம் வராததற்கு முன்பு.

10) தலை முடியெல்லாம் நரைத்துப் போகாததற்கு முன்பு.

11) பசியில்லை, எனக்கு சாப்பிட முடியவில்லை என்று சொல்லும் நாள் வராததற்கு முன்பு.

12) நீங்கள் மரணப்படுக்கையிலிருப்பதனால் உங்கள் உறவுகள் துக்கத்தோடு வீதியில் திரியாததற்கு முன்பு.

13) மண்ணினால் படைக்கப்பட்ட இந்த சரீரம் மீண்டும் மண்ணுக்குத் திரும்பாததற்கு முன்பு.

நாம் ஒவ்வொருவரும் மிகவும் விழிப்புடனிருந்து, பரலோகத்தில் (முக்தி) பிரவேசிப்பதற்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வோமாக.

ஈழவேந்தன்

சிந்தனை செய் தமிழா!

"கங்கைகொண்டவன் தமிழன் - கடாரம் வென்றவன் தமிழன் தலைகள்மீது கல்லேற்றியவன் - கனக விசயன் தமிழன் - கற்புக்கரசி கண்ணகிக்குக் கற்சிலை எழுப்பியவன் தமிழன் - கற்கோயில் கலைக்கோயில்களைக் கட்டியவன் தமிழன் - காவிரிக்கு அணை கட்டியவன் தமிழன் - கப்பல் ஓட்டியவன் தமிழன் - கடல் கடந்த நாடுகளுடன் கடல் வாணிபம் செய்தவன் தமிழன் - கடவுளையே அழைத்து கழகத்தில் அமர்த்தித் தமிழை ஆய்ந்தவன் தமிழன் - முத்தமிழ் வளர்ந்த மும்முடி தாங்கியே மூவேந்தரால் ஆளப்பட்டு, வாழ்வீலேயே முழுமை கண்டவன் தமிழன் - இத்தகைய தமிழன் இன்று ஏன் இழிந்லையில் இருக்கிறான்?" என்று கேட்ட ஈழ வேந்தன் அவர்கள், மேலும் தொடர்ந்து பேசுகையில், "கங்கை கொண்ட தமிழன் இன்று ஏன் கஞ்சிக்கும், கந்தைக்கும் கண்ணீர் வடிக்கிறான்? கடாரம் வென்ற தமிழன் இன்று ஏன் தன் இனத்தின் மீது படார் படார் என்று அடிகளைத் தாங்கிக்கொண்டு பச்சோந்தியாக வாழ்கிறான்? கனகவிசயன் ஆகியோர் தலைகள் மீது கல்லேற்றி தன் இனத்தின் மானம் காத்த தமிழன் இன்று ஏன் தன்மானம் என்ற சொல்லின் பொருளை உணராது தத்தளிக்கிறான்?

இலங்கைப் பல்கலைக்கழக
கொழும்பு வளாகத்தில் 30-6-73ல்
ஈழவேந்தன் நிகழ்த்திய உரையின் சுருக்கம்

கற்புக்கரசி கண்ணகிக்குக் கற்சிலை எழுப்பிய தமிழன், இன்று ஏன் தன் இனத்தின் – மொழியின் கற்புச் சூறையாடப்படும்போது, தன் வாழ்வகத்தின் புனிதத்தன்மை புதைக்கப்படும்போது பார்த்துக்கொண்டு வாளாயிருகிறான்?

கலைக்கோயில், கற்கோயில் கட்டிய தமிழன், இன்று தான் கட்டிய கோயிலுக்கு நேற்றுவந்த இனத்தவன் – வேற்றுமொழி பேசுபவன் – வரலாற்றைத் திரித்தும் மறைத்தும் உரிமை கொண்டாட முனைகின்றபோது, ஏன் துடித்தெழுந்து தன் உரிமையை நிலைநாட்டத் தயங்குகின்றான்?

தமிழனுக்கு அனைத்துலகமொழியென்றால் ஆங்கிலம். தேசிய மொழியென்றால் சிங்களம். இசையென்றால் தெலுங்கு. வழிபாட்டு மொழியென்றால் வடமொழி. இந்நிலையில் தமிழுக்கு எங்கே இடமுண்டு? தமிழனுக்கு எங்கே வாழ்வுண்டு? சிந்தனை செய் தமிழா!

பெருக்கெடுத்தோடும் பெரும் காவிரிக்கு அணைகட்டித் தன் தமிழகத்தை வளம்படுத்திய தமிழன் தன்னைத் – தன் வாழ்வகத்தை – முற்றாக மூழ்கடிக்கச் சீறிவரும் சிங்களப் பெருவெள்ளத்தைத் தடுத்து நிறுத்த ஏன் கூசுகின்றான்? தமிழனின் வீரம் எல்லாம் பொய்யாய் – பழங்கதையாய், கனவாய்ப் போய்விட்டனவா?

கப்பல் ஓட்டிய தமிழன் கதறியழும் நிலையில், ஏன் 1958ல் கப்பலில் ஓட்டப்பட்டான்? உழைத்து, உழைத்து உருக்குலைந்த மலையகத் தமிழன் இன்று ஏன் கப்பலில் ஏற்றப்பட்டு இந்தியா அனுப்பப்படுகின்றான்? அதற்கு சாறு பிழிந்தாகிவிட்டது, சக்கை அனுப்பப்படுகிறது என்பதுதான் பொருளா?

கடவுள் வளர்த்த கன்னித்தமிழை – காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கத் துணை நிற்கும் தூய தமிழை – இன்பத் தமிழை – இறைவழிபாட்டுக்கும் பயன்படுத்தத் தமிழன் ஏன் இன்று தயங்குகின்றான்? கடவுளுக்குத் தமிழ் தெரியாது என்பது பொருளா? அல்லது கொள்கை என்பது பொருளா?

ஆரியர் இந்நாட்டிற்கு வருகை தருமுன், தமிழன் எந்த மொழியிற் கடவுளை வழிபட்டான்? வீடு பேற்றினை அடைந்தான்? "போதொடு நீர்சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்" என்ற அப்பரின் அருள் மொழியின் உட்பொருள் என்ன? தமிழன் இறைவனை எவர் துணையும் இன்றி நேரில் வழிபட்டதை இது காட்டவில்லையா?

ஆகவேதான் தமிழன் வாழ்வு தலையெடுக்க, தமிழன் வாழ்வின் துறைகள் அனைத்தும் துலங்க, தமிழன் வாழ்வில் நிறைவு காண – பூரிப்பு மல்க – "சிந்தனை செய் தமிழா! சிந்தனை செய் தமிழா!" என்று வேண்டித் தன் உரையினை ஈழவேந்தன் முடித்தார்.

KAMALI SHANMUGALINGAM
Sales Representative

Cell. **647-864-1051**
Off Phone. **905-201-9977**
Off Fax. 905-201-9229
realtor.kamalishan@gmail.com
Independently owned & operated

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive,Suite 205
Markham, ON. L3S 4N8
www.homelifefuture.ca
Independently owned & operated

எனக்கும் இருக்கிறது நிறைவேறாத ஆசைகள்...!

தளிர் வாசகர்களுக்காக சிவந்தன்

வானத்தை அண்ணாந்து பார்த்தால் அனேக நட்சத்திரங்கள். அவற்றில் சில புகழ்பெற்றிருக்கின்றன. பல பெயரே தெரியாது மறைந்திருக்கின்றன. அதற்காக அவை மின்னவில்லை என்று அர்த்தமில்லை. அதுபோலத்தான் மனிதனும். பெயர்பெற்றவர்கள் சிலர், பெயர் பெறாதவர் பலர்... ஆனால் திறமை இருவருக்கும் பொது. இதை எண்ணிப் பார்த்து மறைந்து வாழும் அறிஞர்களை ஏன் வெளிக்கொணரக் கூடாது என்று நாம் யோசித்தோம். இது தளிரின் புது முயற்சி... சிரமமான முயற்சியும் கூட. அந்தத் தேடுதல், வேட்டையில் முதலில் சிக்கிக்கொண்டவர் திரு. ஆறுமுகம் பாலசிங்கம் அவர்கள். எதேச்சையாக அவரைச் சந்தித்த நம் தளிர் குழு, அவரிடம் பேட்டி தரக் கோரியது. முதலில் சற்றுத் தயங்கினாலும், பின்பு முழு மனதாக சம்மதித்த அவரை, அவர் இல்லத்திலேயே நாம் சந்தித்தோம்.

எளிமையான தோற்றம், சீரான பேச்சு. நண்பர்களாலும், உறவினர்களாலும், செல்லமாக பாலா என அழைக்கப்படும் இவர், இடையே தன் தந்தையைப் பற்றிப் பேசியபோது, அவர் பேச்சில் தெரிந்த வலி, வேதனை, துன்பம், அவரை மட்டுமல்ல, நம் இதயத்தையும், விழிகளையும் கனக்கச் செய்தன. ஆரம்பத்தில், அவரைப் பற்றிக் கூறுமாறு கேட்டோம். மடைதிறந்த வெள்ளமாகக் கொட்டத்தொடங்கினார்.

பாலா: மலேஷியாவில் உள்ள பினாங் என்னும் நகரத்தில் ஆறு சகோதரர்களில் ஒருவராக நான் மூன்றாவதாகப் பிறந்தேன். அங்கே ஆரம்பக் கல்வியைக் கற்றுக்கொண்டிருந்தபோது, இரண்டாம் உலகப்போர் தொடங்கியது. யப்பானியர்களால் மலேஷியா கைப்பற்றப்பட்டது. அப்போது, பிரித்தானியரின் கீழ் வேலைசெய்தவர்களை யப்பானியர் மிகக் கடுமையாக நடத்தினார்கள். அவர்களில் என் தந்தையும் ஒருவர். காரணம் அப்போது, என் தந்தை வைத்தியராகப் பிரித்தானியரின் கீழ் கடமையாற்றிக்கொண்டிருந்தார். அதனால், என் தந்தையும் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதனால் எமது வாழ்க்கையில் பாரிய மாற்றம் ஏற்பட்டது.

எனது தந்தை விடுவிக்கப்பட்டபின், பினாங்கில் இருக்க முடியாமல், 1946ஆம் ஆண்டு கோலாலம்பூருக்குச் சென்றோம். அங்கிருந்து, எமது தந்தையின் விருப்பத்திற்கிணங்க, அதே ஆண்டு இலங்கையில் என் தந்தையின் தாயகமான காரைநகருக்கு சென்றோம். மீண்டும் எனது கல்வி தொடங்கியது. எனது இடைநிலைக் கல்வியை காரைநகர் இந்துக்கல்லூரியிலும், உயர்நிலைக் கல்வியை யாழ் இந்துக்கல்லூரியிலும். யாழ் மத்திய கல்லூரியிலும் கற்றேன். யாழ் மத்தியகல்லூரியே என்னைப் புடம்போட்டது.

அதன் பின் இலண்டன் உயர்நிலைப் பரீட்சை எடுத்த கையோடு, எனது நன்னடத்தை, கல்வித்தகமை, நற்பெயர் என்பவற்றால் யாழ் மத்திய கல்லூரியில் கற்பிக்கும் வாய்ப்பு எனக்கு இலகுவாகக் கிடைத்தது. அங்கே 16 வருடங்கள் ஆசிரியராகப் பணிபுரிந்தேன். இதற்குப் பின் என் கற்பிக்கும் தகமையை வளர்க்கும் நோக்கில், 'Palali English Specialist Teacher's College' இல் இணைந்தேன். அங்கேயும் எனது திறமையை வெளிக்காட்டும் வாய்ப்புக் கிடைத்ததால், ஆசிரிய மாணவர் தலைவராகவும், கல்லூரி கழகத்தின் கல்வி அமைச்சராகவும் தெரிவுசெய்யப்பட்டேன். அத்துடன், கலாவதி என்கின்ற வருடாந்த சஞ்சிகைக்கு தலைமை ஆசிரியராகவும் நியமிக்கப்பட்டேன்.

அதன் பின்பு நுவரேலியாவிற்கு வேலைமாற்றம் செய்யப்பட்டு, 1976இல் கந்தப்பளை மகா வித்தியாலயத்திலும், பின்பு St. Xavier's College இலும், ஆசிரியராகப் பணியாற்றினேன். அத்தோடு, 1982இல் அம்மாவட்டத்தில் கல்விப் பாடத்திட்ட அபிவிருத்தி மையத்தின் ஆங்கில சேவை ஆலோசகராக நியமிக்கப்பட்டேன். 1983 இல் புலமைப்பரிசு பெற்று, சிங்கப்பூரில் உள்ள பிராந்திய மொழி மைய பயிற்சிக் கல்லூரிக்கு (RELC) அனுப்பப்பட்டேன்.

இக் காலகட்டத்தில் மீண்டும் இலங்கைக்கு வந்து, கல்விப் பொதுத்தராதர சாதாரண ஆங்கிலப் பாடத்திற்கு, பிரதம பரீட்சகராக மூன்று வருடங்கள் கடமையாற்றினேன். பின்பு DELC இல் வருகின்ற புதிய ஆங்கில ஆசிரியர்களுக்கு பயிற்சியாளராக் கடமையாற்றினேன்.

எனது கல்வித்தகமை, மற்றும் திறமை அடிப்படையிலும், சிங்கப்பூரில் இருந்து RELC இனது, பரிந்துரையாலும், இங்கிலாந்து செல்வதற்காகத் தெரிவுசெய்யப்பட்டேன். ஆனால், அங்கு, தமிழன் என்கின்ற ஒரே காரணத்தால், எனது வாய்ப்புத் தட்டிப்பறிக்கப்பட்டதோடு, நான் ஒரு விடுதலைப் புலி என்று முத்திரைகுத்தப்பட்டு, இரண்டு வாரகாலம் சிறையில் அடைக்கப்பட்டேன். ஆனால் அவர்களால் நான் ஒரு குற்றவாளி என்று நிருபிக்க முடியாததால், என்னை விடுதலை செய்தார்கள்.

1987-2006 வரை பல்கலைக்கழக மானியக் குழுவினால் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்குரிய ஆங்கில ஆசிரியராகவும், கல்வித் தொடர்பாளராகவும் கடமையாற்றினேன். 1990இல் ஓய்வுபெறத் தீர்மானித்து, அதற்குரிய ஆவணங்களை சமர்ப்பித்தேன்.

இருந்தாலும், மழை விட்டாலும், தூறல் விடாததுபோல, எனது கற்பித்தல் சேவையைத் தொடர்ந்துகொண்டே இருந்தேன். 1996 ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு வருகைப் பயிற்றுவிப்பாளராகக் கடமையாற்றினேன். வெள்ளவத்தையில் உள்ள "Harrow International College" இல் பணியாற்றும் வாய்ப்பு, அங்கு நேர்காணலுக்குச் சென்ற அன்றே கிடைத்தது. அங்கே ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றி, துணை அதிபராகப் பதவி உயர்வு பெற்றுப் பணிபுரிந்தேன். கனடாவில் வாழ்ந்த என் மகன் எங்களைப் ஸ்பொன்சரில் அழைத்தார். நானும் மனைவியுமாக 2007இல் கனடாவிற்கு வந்தோம். இளமைக் காலத்தில் கிடைக்காத மகிழ்ச்சியை இப்போது நான் அனுபவிக்கிறேன். என் இரண்டு பேரப்பிள்ளைகளும் எனது முதுமையை ஓரம்கட்டிவிட்டனர். என்று அவர் சிரித்தபோது, அது நம்மையும் பற்றிக்கொண்டது.

? தளிர்: ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கனவு இருக்கும். உங்கள் கனவைப் பற்றிச் சொல்லுங்கள்

பாலா: கனவு... அவை நிறைவேறாத ஆசைகள் என்றும் சொல்லலாம். என் பதினாறாவது வயதில் என் தந்தையை இழந்தேன்... என்றபோது அவர் உடைந்து அழுதது எம்மையும் கலங்கச் செய்தது. அவர் இருந்திருந்தால் என் வாழ்க்கையே வேறாக இருந்திருக்கும். நான் எங்கோ போயிருப்பேன். நாங்கள் ஏழு பேர். அம்மா தன்னால் முடிந்த வரைக்கும் எங்களை சிறப்பாகத்தான் வளர்த்தார்.

எனக்குப் புகைப்படக் கலையில் பெரும் ஆர்வம் இருந்ததால்,



அத்தனை சிரமத்திலும், என் அம்மா 36 ரூபாய்க்கு "கொடக் கமரா" ஒன்றை வாங்கிக் கொடுத்தார். அப்போது 36 ரூபாய் என்பது பெரிய தொகை. அதை வைத்து நான் எடுத்த பல படங்கள் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்தன. அதை விட, ஆர்கிரெக்சராக வரவேண்டும் என்று எனக்கு ஆசை இருந்தது. ஆசை என்பதை விட வெறி என்றே சொல்லலாம். என் குடும்பச் சூழ்நிலை, அதற்கு இடம்கொடுக்கவில்லை. குடும்பத்தைச் சுமக்கவேண்டிய கட்டாயம்... அதனால், என் ஆசையும் நிராசையாகிவிட்டது.

? தளிர்: உங்களது கைவினைப் பொருட்கள் எங்கள் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துள்ளன. இக்கைவினைப் பொருட்களைச் செய்யவேண்டும் என்கின்ற ஆர்வம் எதனால் வந்தது? இக்கலையை எங்கே கற்றீர்கள்?

பாலா: இந்தக் கைவினைப் பொருட்கள் செய்ய வேண்டுமென்கின்ற ஆர்வமும் என் சிறு பிராயத்தில் இருந்தே வந்தது என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் அதனை வெளிப்படுத்த சந்தர்ப்ப சூழ்நிலை எனக்குக் கிட்டவில்லை. அப்படி இருந்தும் கிடைத்தவற்றை வைத்துக் கொண்டு சில மரத்திலான பொருட்கள் செய்திருக்கிறேன். ஆனால் கனடாவுக்கு வந்த பின், ஒரு நாள் என் மகனும் மருமகளும் சில சஞ்சிகைகளைக் கொண்டுவந்திருந்தார்கள். அதை எடுத்துப் படித்தபோது, பொழுதுபோக்கிற்காக சில கைவேலைகள் செய்வது பற்றிப் படித்தேன். அச்சஞ்சிகைகளில் உள்ளதைச் செய்துபார்க்கும் ஆர்வம் எனக்குத் தோன்றியது.

ஆனால் கண்ணாடியில் நிறந்தீட்டுதல் ('stain glass') பற்றிய எந்த அனுபவமும் எனக்கில்லை. கத்தோலிக்கக் கோவில்களின் பின்னால் 'stain glass' இல் ஜன்னல்கள் செய்திருப்பார்கள். அதை எப்படிச் செய்தார்கள் என்று நான் வியந்திருக்கிறேனே தவிர, அதை இப்படித்தான் செய்யவேண்டும் என்கின்ற சிறு விடயம் கூட எனக்குத் தெரியாது. இருந்தாலும் கற்கவேண்டும் என்கின்ற ஆர்வம், என்னைப் பெரிதும் தூண்டியதால், உடனே இதைக் கற்கும் வகுப்பிற்குப் பதிந்து சேர்ந்துவிட்டேன். அதன் பின் கற்பதில் எனக்கு எந்த சிரமமும் இருக்கவில்லை. நான் செய்த கைவினைப் பொருட்களைக் கண்ட எனது ஆசிரியை திருமதி. Georgia Christofides அவர்கள் வியந்து என்னால் செய்யப்பட்டவற்றை ஐக்கிய அமரிக்காவில் உள்ள stained Glass News (SGN) இற்கு அனுப்பி வைத்தார்கள். அடுத்த சஞ்சிகை வெளியீட்டில் என்னுடைய கைவினைப் பொருட்களின் படங்களுடன் எனது படமும் வெளிவந்தன. இவை பலரது பாராட்டினையும், எனக்கென்ற ஒரு முகவரியையும் அன்னிய மண்ணில் ஈட்டித் தந்தன. அதுவே எனக்குப் பெரும் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் அளித்தன.

? தளிர்: ஐக்கிய அமரிக்காவில் சஞ்சிகைகளில் வெளிவரும் அளவிற்குப் பிரபலமாக இருக்கின்ற நீங்கள், இங்கே இலை மறைகாயாக இருப்பதற்குக் காரணம் என்ன?

பாலா: ஐக்கிய அமரிக்காவில் நானாகப் பிரபலமாகவில்லை. எனது ஆசிரியை திருமதி. Georgia Christofides அவர்களால் ஆக்கப்பட்டேன். தவிர, என்னைப் பிரபலப்படுத்தவேண்டும் என்கின்ற ஆர்வம் எதுவும் எனக்கு இருந்ததில்லை. எனது ஆத்ம திருப்திக்காகத்தான் இவற்றைச்



செய்கிறேன். இவற்றைச் செய்யும் போது என்னை மறக்கிறேன். இந்த உலகை மறக்கிறேன். இதை விட வேறு என்ன வேண்டும் சொல்லுங்கள். கூடவே சந்தர்ப்பமும் சூழ்நிலையும் ஏதுவாக அமைய வேண்டும் அல்லவா. இங்கே வருபவர்கள் நான் செய்யும் கலைப் பொருட்களைக் கண்டு, மகிழ்ந்து, பெருமையாகப் பேசும்போது பெருமிதமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும். அதுவே போதும் என்ற திருப்தியுடன் வாழ்கிறேன்.

தளிர்: கண்ணாடியிலும், மரத்திலும் பல கலைப்பொருட்கள் செய்து குவிக்கிறீர்கள்... இவற்றில் உங்களை மறந்து செய்த வடிவம் எது?

பாலா: எதுவும் இல்லை. சிறிய பறவையாக இருந்தாலும் என்னுடைய முழு ஈடுபாடும் அதில் இருக்கும். அதனால் இதைத்தான் நான் விரும்பிச் செய்தேன் என்று சொல்லமுடியாது. எல்லாமே நான் என்னை மறந்து செய்தவைதான்.

தளிர்: இதை நீங்கள் தொழில் ரீதியாகச் செய்யவேண்டும் என்று எண்ணியதுண்டா?

பாலா: நிச்சயமாக இல்லை. இதைத் தொழில் ரீதியாக செய்ய எண்ணினேனென்றால், இதற்குச் சொல்லப்படுகின்ற விலைக்கு பொதுவாங்குவதற்கு முன்வரமாட்டார்கள். இந்தப் பொழுதுபோக்கு மிக விலைமிக்க பொழுதுபோக்கு. தவிர இதைப் பற்றி எடுத்துச் சொன்னாலும் அவர்கள் புரிந்துகொள்வார்களா என்பது கேள்விதான். குறிப்பாக இதில் உள்ள கப்பலைச் செய்வதற்கு எனக்குக் கிட்டத்தட்ட இரண்டு கிழமைகளுக்கும் மேல் எடுத்திருந்தது. அந்தக் கப்பலைச் செய்வதற்கான பொருட்களின் செலவு மிக அதிகம். எனது நேரம், பொருட்களின் செலவு அனைத்தையும் எண்ணி ஒரு விலையைச் சொன்னால் அதைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார்கள். தவிர இதைத் தொழில் ரீதியாகச் செய்யத் தொடங்கினால் அதில் ஆத்மதிருப்தி இருக்காது என்பது என் எண்ணம்.

தளிர்: என்னதான் சீறப்பாகச் செய்தாலும் அதற்கொரு தூண்டுகோல் வேண்டுமல்லவா. அந்த வகையில் உங்களை ஊக்கப்படுத்துபவர்கள் யார்?

பாலா: நிச்சயமாக... சிறுவயதில் எனக்கு ஆர்வம் இருந்தபோதும், அதற்குச் சந்தர்ப்பமும் சூழ்நிலையும் ஏதுவாக அமையவில்லை. கனடாவிற்கு வந்த பின்னர், ஒரு வாளும், சுத்தியலுடனும் ஒரு 'shoe rack' செய்தேன். அதைக் கண்ட என் மகன் மறுநாளில் இருந்தே எனக்கு வேண்டிய அனைத்துப் பொருட்களையும் வாங்கிவரத் தொடங்கிவிட்டார். வெறும் வாளும் சுத்தியலுடனும் தொடங்கிய என் பொழுதுபோக்கு இப்போது நவீன இயந்திரங்களுடன் நடந்துகொண்டிருக்கிறதென்றால் அது என் மகன் சாயிஸ்கந்தன், மருமகள் தர்ஷினியாலும்தான். அவர்கள்தான் எனக்குப் பல வகையாலும் தூண்டுகோலாக இருக்கிறார்கள். அவர்கள் எனக்கு மகன், மருமகளாகக் கிடைத்தது நான் செய்த பாக்கியம் என்றே எண்ணத் தோன்றுகிறது.

தளிர்: எப்போதாவது, இதை ஏன் தொடங்கினோம் என்று சலிப்புற்று இடையில் உங்கள் கைவேலையை நிறுத்தியிருக்கிறீர்களா?

பாலா: இல்லை. ஒரு போதும் நினைத்தது கிடையாது. நான் எது செய்தாலும் அதில் என் முழு ஈடுபாடும் இருக்கும். ஒன்றைத் தொடங்கினேனென்றால் அதை முடிக்கும் வரை எனக்கு நிம்மதியிருக்காது. எத்தனை தரம் வேண்டுமானாலும் பிழையைத் திருத்த நான் தயங்கியதுமில்லை, சலித்ததுமில்லை.

தளிர்: மூன்று தலைமுறைகளைக் கண்டுவிட்டீர்கள். இன்றைய புதிய தலைமுறைக்கு உங்களைப் போல இத்தகைய கைவினைப் பொருட்களைக் கற்கவேண்டும் என்கின்ற ஆர்வம் இருக்கிறதா? அப்படி இருந்தால் கற்பிப்பீர்களா?

பாலா: அந்த அளவுக்கு இன்றைய இளம் சந்ததிகளிடம் ஆர்வம் இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. இன்று வேகமாக இயங்கிக் கொண்டிருக்கும் உலகில் அவர்களும் வேமாக இயங்கவேண்டி இருக்கிறது. அவர்களின் வேகத்திற்கு நம்மால் ஈடு கொடுக்க முடியுமா என்பது தெரியாது. தவிர அவர்களின் ஆர்வம் எல்லாம் இப்படியான கைவினைப் பொருட்கள் செய்வதில் இல்லை. தவிர நம் தமிழ் இனத்தவர்களுக்குப் பிள்ளைகளின் கட்டாயக் கல்வி மீதுதான் ஆர்வம் இருக்கிறதே தவிர இப்படியானவற்றில் ஆர்வம் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி ஆர்வத்துடன் ஒரு மாணவன் வருவானேயானால் கற்பிக்க எந்தத் தடங்கலும் எனக்கில்லை.

தளிர்: தளிர் வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

பாலா: அதற்கு முன் தளிர் சஞ்சிகைக்கு நான் என் நன்றியை மனதாரக் கூறிக்கொள்கிறேன். என்னைப் போல மறைந்து வாழும் கலைஞர்களை இனம் கண்டு, அவர்களையும் இந்த உலகம் திரும்பிப் பார்க்க வைப்பதற்கு முயல்வது என்பது சாதாரணமானதல்ல. மிகவும் சிரமமானது. இது ஒரு புது முயற்சியும் கூட. அந்த வகையில் நான் உங்களுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்.

வாசிப்பு ஒரு மனிதனைப் பூரண மனிதனாக்குகிறது என்பது சீனப் பழமொழி. அதற்கிணங்க தளிரைப் பெற்று வாசியுங்கள். குழந்தைகளுக்கும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். நன்றி.

வாசகர்களே... உங்களுக்குத் தெரிந்து, உங்களுக்கு அருகாமையில் கூட, இவ்வாறான திறமையாளர்கள் இயங்கிக் கொண்டிருக்கக்கூடும். அவர்களைப் பற்றி எமக்கு அறியத் தாருங்கள். அவர்களுக்கு ஒரு மேடை அமைத்துத் தர, தளிர் காத்திருக்கிறது. உங்கள் தகவல்களை,

thalir.thalir@yahoo.com

என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.

பகுதி - 2

நிலவுக்குப் போன கதை நிஜமா?

"மனிதன் எடுத்து வைத்த சிறிய காலடி, மனித இனத்தின் ஒரு பெரிய பாய்ச்சல்" (That's one small step for man, one giant leap for mankind). 1969 களில் உலகம் முழுவதையும் பரவசமாகப் பேசவைத்த, மிகப்பிரபலமான வசனம் இது. சந்திரனில் காலடியெடுத்து வைத்த, முதல் மனிதனான 'நீல் ஆம்ஸ்ட்ரோங்க்' தனது காலடியைச் சந்திரனின் மேற்பரப்பில் வைத்த கணத்தில் சொன்ன அற்புதமான வசனம்தான் இது.

1969ம் ஆண்டு யூலை மாதம் 20ம் தேதி சந்திரனில் மனிதன் காலடி எடுத்து வைத்த நிகழ்வு மிகச் சாதாரணமான ஒன்றல்ல. இன்று நாம் வாழ்ந்து வரும் சூழலில், கணணியின் வளர்ச்சி பிரமிக்கத்தக்க வகையில் உச்சத்தை அடைந்த நிலையில், மிகச் சாதரணமான ஒரு நிகழ்வாகத் தோன்றலாம். ஆனால், நாற்பத்தி மூன்று வருடங்களுக்கு முன்னர், 1969ம் ஆண்டு நிலவுப் பயணம் என்பது நினைத்தே பார்க்க முடியாதது.

1969ம் ஆண்டு யூலை மாதம் 16ம் தேதி, அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் அமைந்த, நாஸாவின் 'கென்னடி விண்வெளி மையத்தில்' (Kennedy Space Center) இருந்து, நீல் ஆம்ஸ்ட்ரோங்க் (Neil Amstrong), எட்வின் அல்ட்ரின் (Edwin Aldrin), மைக்கேல் காலின்ஸ் (Michael Collins) ஆகிய மூன்று விண்வெளி விற்பன்னர்களையும், சந்திரனை நோக்கி அமெரிக்கா அனுப்பி வைத்தது.

'அப்போலோ 11' என்று பெயரிடப்பட்ட நிலவுப் பயணத்திற்கு 'சாட்டர்ன் V' ரக ராக்கெட் பயன்படுத்தப்பட்டது. மூன்று நாட்களின் பின்னர், 19ம் தேதி சந்திரனை அடைந்த அப்போலோ 11, சந்திரனை வலம் வந்தது. நான்காம் நாளான 20 தேதி அப்போலோ 11 இலிருந்து பிரிந்த ஒரு சிறிய விண்கலம் சந்திரனில் இறங்கியது. சிலந்தி போன்ற வடிவமைப்பைக் கொண்ட அந்தச் சிறிய விண்கலத்துக்கு 'ஈகிள்' (Eagle) என்று பெயரிட்டிருந்தனர்.

அமெரிக்காவின் இலட்சனையான கழுகின் பெயரையே அந்த விண்கலத்துக்கும் வைத்திருந்தனர். 'ஈகிள்' சந்திரனில் இறங்கியது, அமெரிக்காவே இறங்கியதாக அடையாளப்படுத்தப்பட்டது ('The Eagle has landed'). அதிலிருந்து வரலாறே வியக்கப் போகும் சாதனை மனிதனாக, நீல் ஆம்ஸ்ட்ரோங் சந்திரனில் காலடியெடுத்து வைக்கும் முதல்வனாக இறங்கினார். அவர் தனது காலடியைச் சந்திரனில் பதிக்கும் போது கூறிய வசனம்தான் ஆரம்பத்தில் இருப்பது. ஆம்ஸ்ட்ரோங்கிற்கு அடுத்ததாக, எட்வின் அல்ட்ரின் சந்திரனில் காலடி வைத்த இரண்டாவது மனிதரானார்.

கேட்கும்போது மிகவும் சுவாரஷ்யமாக இருக்கும் இந்த வரலாற்று முக்கியம் வாய்ந்த சம்பவங்கள் அனைத்துமே, 'அமெரிக்கா செய்து காட்டிய மிகமலினமான ஒரு நாடகம்' என்று உரத்துச் சொல்கின்றனர் பலர். "சந்திரனில் மனிதன் காலடியெடுத்தே வைக்கவில்லை. எல்லாமே நாஸா மூலமாக அமெரிக்கா செய்த பித்தலாட்டம். அப்போலோ மிசன் என்பதே ஒரு நாடகம். மனிதன் ஒருபோதும் சந்திரனுக்குச் செல்லவில்லை. அப்போலோ 11 மட்டுமில்லை அப்போலோ 12, 14, 15, 16, 17 களில் கூட மனிதன் சந்திரனைச் சென்று அடையவில்லை.

மனிதன் சந்திரனுக்குப் போவதற்குச் சாத்தியப்படாத ஒரு காலகட்டத்தில், மனிதனை அங்கு அமெரிக்கா அனுப்பி வைத்திருக்கிறது. இதற்குக் காரணம் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட ஒரு நிர்ப்பந்தம்தான். அந்த நிர்ப்பந்தம் இல்லாமல் இருந்திருந்தால், மனிதனைச் சந்திரனுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்னும் அவசர நிலையை அமெரிக்கா ஒரு போதும் எடுத்திருக்காது.

இவையெல்லாம் பூமியிலே சந்திரனைப் போன்று ஒரு இடத்தை உருவாக்கி, அதில் உருவாக்கப்பட்ட சினிமா போன்ற காட்சிகள்." என்று பலமான குரலில் மறுக்கிறார்கள் அவர்கள். 'எடுத்தோம் கவிழ்த்தோம்' என்ற நிலையில் இதை அவர்கள் சொல்லவில்லை. விதவிதமான ஆதாரங்களை முன்வைத்து நம்மைத் திகைக்க வைக்கிறார்கள். தர்க்க ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் அவர்கள் சொல்வது சர்வநிச்சயம் என்றே நம்மையும் யோசிக்க வைக்கிறது. இதை ஒரு சூழ்ச்சிக் கோட்பாடாகவே உலகிற்கு வெளிக்கொண்டு வந்திருக்கிறார்கள்.

'சூழ்ச்சிக் கோட்பாடு' (Conspiracy Theory) என்று ஒன்று உண்டு. உலகின் ஒவ்வொரு பகுதியிலும் ஆளுமையுடையவர்களாலும், ஆளும் வர்க்கத்தினராலும் நடத்தப்பட்ட மர்மமான நிகழ்வுகளுக்கு, எப்போதும் அவர்கள் சார்பில் ஒரு காரணம் சொல்லப்பட்டிருக்கும். சில சமயங்களில் உண்மையாகவும், பல சமயங்களில் கேள்விக்குரியவையாகவுமே அந்தக் காரணங்கள் இருக்கும்.

இந்த மர்ம நிகழ்வுகளை படிப்படியாக ஆராய்ந்து, அவை வேறு விதமாக நடந்திருக்கலாம் எனப் பல கோணங்களில் ஆய்வு செய்து, அந்த நிகழ்வுகளில் இருக்கும் சதிச் செயல்களைப் பகிரங்கமாக உலகிற்குக் கொண்டுவருவதுதான் சூழ்ச்சிக் கோட்பாட்டாளர்களின் நோக்கம். நடைபெற்ற நிகழ்வுக்கெனச் சொல்லப்பட்ட காரணத்தையும், சூழ்ச்சிக் கோட்பாட்டின் மூலம் சொல்லப்பட்ட காரணத்தையும் எடுத்துக் கொள்ளும் போது, உண்மை என்பது அவை இரண்டுக்கும் இடையில் நின்றே ஊசலாடும். சூழ்ச்சிக் கோட்பாடுகளில் சொல்லப்படுபவற்றையும் கூட நாம் அப்படியே உண்மை என்றும் எடுத்துக் கொள்ள முடியாது. அதனால்தான் அவை இதுவரை 'கோட்பாடு' என்று அழைக்கப்பட்டு வருகிறது.

கோட்பாடுகள் எப்போதும் முழுமையான உண்மைகள் அல்ல. உண்மையை ஒட்டி அவை இருந்தாலும், அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாதவை. இதனாலேயே பலர், "அட! இது கான்ஸ்பிரஸித் தியரிதானே!" என்று அலட்சியமாக சொல்லிவிடுவார்கள். ஆனால், நடந்த சம்பவங்களின் உண்மைகளை வெளிக்கொண்டு வருவதற்கு, அவர்கள் தங்கள் உயிர்களையே பணயம் வைத்து உழைத்திருப்பார்கள். எப்போதும் கான்ஸ்பிரஸித் தியரிகள் ஆதிக்க வர்க்கத்துக்கு எதிரானதாகவே இருக்கும். இதனாலேயே இந்த கான்ஸ்பிரஸித் தியரிகளைப் பொய்யாக்க தங்கள் பணத்தையும், அதிகாரத்தையும் ஆதிக்க வர்க்கம் பயன்படுத்தும். இந்த வகையில், உலகிலேயே இதுவரை சொல்லப்பட்ட அனைத்துச் சூழ்ச்சிக் கோட்பாடுகளிலும் முதன்மை வகிக்கும் சூழ்ச்சிக் கோட்பாடாகவும், வலிமையான கோட்பாடாகவும் இருப்பது,

'சந்திரனில் மனிதன் காலடியெடுத்து வைக்கவே இல்லை' என்னும் சூழ்ச்சிக் கோட்பாடுதான். கடந்த நாற்பத்தி நான்கு வருடங்களாக 'சந்திரனுக்கு மனிதன் சென்றது உண்மைதானா?' என்ற கேள்வியைக் கேட்க வைத்துக் கொண்டே இருக்கும் முதன்மைக் கோட்பாடு இது. இன்றுவரை உலகில் எங்காவது ஒரு மூலையில் ஏதோ ஒரு தொலைக்காட்சியில் இது பற்றி விவாதித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

சந்திரனில் மனிதன் காலடி எடுத்து வைக்கவில்லை என்னும் சூழ்ச்சிக் கோட்பாட்டுக்கு அடித்தளம் அமைத்தவர் 'பில் கேசிங்' (Bill Kaysing) என்பவர்தான். இவர் சாதாரணமான ஒரு ஆள் கிடையாது. ராக்கெட் தயாரிக்கும் தொழில்நுட்பத்தில் தலைமைப் பதவி வகித்தவர் இவர். அமெரிக்காவின் வெற்றியடைந்த, தோல்வியடைந்த விண்கலங்கள் அனைத்தின் சரித்திரங்களையும் நன்றாகத் தெரிந்து கொண்டவர்.

'அப்போலோ 11' சந்திரனில் இறங்கியது என்று சொன்ன மறுவினாடியே, 'அது ஒரு ஏமாற்று வேலை' எனப் பகிரங்கமாகப் பேட்டி கொடுத்தவர். இவரின் கருத்துகளிலிருந்தே சந்திரனில் மனிதன் காலடி எடுத்து வைக்கவில்லை என்னும் சூழ்ச்சிக் கோட்பாடு கருப்பெற்று, படிப்படியாக வளர்ந்து வந்தது. சந்திரனில் மனிதன் இறங்கிய ஆரம்ப காலங்களில் மிகவும் பலமான எதிர்ப்பாகத் தொடங்கிய இந்தக் கோட்பாடுகள், படிப்படியாக அமைதியாகி அடங்கிப் போயிருந்தாலும், இப்போது மிகச் சமீப காலமாக மீண்டும் வலிமையான எதிர்ப்புக் குரலாக எழ ஆரம்பித்திருக்கிறது. அன்று பில் கேஸிங் எதிர்ப்பதற்குச் சொன்ன காரணங்களோடு, இன்றுள்ள அறிவியல் காரணங்களும் சேர்வதால், சந்திரனுக்கு மனிதன் நிஜமாகவே செல்லவில்லை என்ற முடிவுக்கே பலர் வருகின்றார்கள்.

உலகிலேயே வலிமைமிக்க ஒரு நாடு அமெரிக்கா. சந்திரனில் மனிதன் இறங்குவதை, உலகமே தொலைக்காட்சியின் மூலம் பார்த்துக் கொண்டும், வானொலியில் கேட்டுக் கொண்டும் இருக்கும் போது, இவர்கள் அதை இலையென்று வன்மையாக மறுக்கச் சொல்லும் காரணங்கள்தான் என்ன? அமெரிக்காவின் வெளிப்படையான சாட்சியங்களை விட, அப்படி என்னதான் பெரிய காரணங்களாக அவை இருக்கப் போகின்றன? இன்றைய நவீன உலகம் மீண்டும் இதைக் கையிலெடுத்து,

மறுப்பதற்குக் காரணங்கள்தான் என்ன? இந்தக் கேள்விகளுக்கான பதில்களை நாம் இப்போது தேடவேண்டும். விவரமான ஒரு ஆராய்ச்சி மூலம் அந்த உண்மைகளைக் கண்டுபிடிக்க வேண்டும். ஒரு கான்ஸ்பிரஸித் தியரியாக மட்டும் இதைப் பார்க்காமல், அறிவியல் சம்பவங்களைத் தெரிந்து கொள்ளும் அடிப்படையில் அவற்றை நாம் விரிவாகப் பார்க்கலாம்.....!

மனிதன் சந்திரனுக்குப் போவதற்குச் சாத்தியப்படாத ஒரு காலகட்டத்தில், மனிதனை அங்கு அமெரிக்கா அனுப்பி வைத்திருக்கிறது. இதற்குக் காரணம் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட ஒரு நிர்ப்பந்தம்தான். அந்த நிர்ப்பந்தம் இல்லாமல் இருந்திருந்தால், மனிதனைச் சந்திரனுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்னும் அவசர நிலையை அமெரிக்கா ஒரு போதும் எடுத்திருக்காது. இதனால் சந்திரனுக்கு மனிதனை அனுப்புவது என்ற முடிவை அவசர அவசரமாக எடுத்து, அதை உலகிற்கு அறிவித்தவர் அன்று அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜான்.எஃப்.கென்னடிதான்.

கென்னடி அவசரப்பட்டதற்கு ஒரு பெரிய நிர்ப்பந்தம் காரணமாக இருந்தது. அந்த நிர்ப்பந்தத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், நாம் இரண்டாம் உலகப் போருக்கு அப்புறம் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையில் நிலவிய 'பனிப்போர்' (Cold War) என்பதிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். "சந்திரனில் மனிதன் காலடி எடுத்து வைத்ததற்கும், பனிப்போருக்கும் என்னய்யா சம்மந்தம்?" என்று நீங்கள் இப்போ கேட்கலாம். 'இருக்கிறது. சம்மந்தம் நிறையவே இருக்கிறது'. அவற்றைத்தான் நாம் இப்போது பார்க்கப் போகிறோம்'.

உலகமே இரண்டாகப் பிரிந்து, ஒரு மாபெரும் யுத்தத்தை நடத்தி முடித்தது. அந்த யுத்தம்தான் 1939ம் ஆண்டிலிருந்து 1945ம் ஆண்டு வரை நடைபெற்ற 'இரண்டாம் உலகப் போர்'. கிட்டத்தட்ட எழுபது கோடிக்கும் அதிகமான உயிர்களை இந்தப் போர் பலியெடுத்தது. இந்த உயிரிழப்புகளில் இராணுவம், பொதுமக்கள் என அனைவரும் அடங்குவர்.

ஜேர்மனி, இத்தாலி, யப்பான், ஹங்கேரி, ருமேனியா போன்ற நாடுகள் உட்படப் பல நாடுகள் ஓரணியிலும், அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ், சீனா உட்பட்ட ஏனைய நாடுகள் இன்னுமொரு அணியிலுமாகப் பிரிந்து, இந்த இரண்டாம் உலகப் போரை நடத்தி வைத்தன. 'தங்கள் தலைகளில் யானைகள் மட்டும் மண்ணை அள்ளிப் போடுவதில்லை. மனிதர்களும் போடுவார்கள்' என்பதற்கு இந்தப் போர் நல்லதொரு உதாரணம். அந்தக் காலகட்டங்களில் ஜேர்மனியும், யப்பானும், இத்தாலியும் மிகவும் வலிமையுள்ள நாடுகளாக இருந்தன என்பதை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஆனாலும், அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் அணியே இரண்டாம் உலகப் போரில் வெற்றி பெற்றது. வெற்றியையும், வெற்றி பெற்ற நாடுகளையும் இந்த நாடுகள் தமக்குள்ளே பங்கும் போட்டுக் கொண்டன. இந்தப் போரில் ஒரே அணியில் இருந்து ஒன்றாகப் போரிட்ட அமெரிக்காவுக்கும், சோவியத் ரஷ்யாவுக்கும் இடையில், போருக்கு அப்புறம் ஏற்பட்ட முறுகல் நிலையே 'பனிப்போர்' என்று அழைக்கப்பட்டது.

முதலாளித்துவம், கம்யூனிசம் என்னும் இரண்டு வெவ்வேறு தத்துவங்களின் அடிப்படையில் அமெரிக்காவும், ரஷ்யாவும் தம்மைக் கட்டமைத்துக் கொண்டதால் ஏற்பட்ட முரண்பாடுகளில் ஆரம்பித்த முறுகல் நிலை, படிப்படியாக வளர்ந்து, நிஜமான ஒரு யுத்தத்தை ஏற்படுத்தும் அளவுக்கு இரு நாடுகளையும் தயார்படுத்தியது. இந்தப் பகை வளர்ந்து, உலகில் பெரியவன் நீயா? நானா? என்னும் உச்சக்கட்டப் போட்டியாக உருக்கொண்டது. ஒருபுறம் கம்யூனிசக் கொள்கைகளை முன்னிறுத்தி, தனக்கு ஆதரவாகத் தன் பக்கத்தில் பல நாடுகளை ரஷ்யா ஒன்று சேர்க்க, மறுபுறம் முதலாளித்துவத்தை முன்னிறுத்தி அமெரிக்கா தனக்கான ஆதரவு நாடுகளை ஒன்று சேர்க்கத் தொடங்கியது. மீண்டும் இரண்டு அணிகள் உருவாகின. உலக நாடுகள் அனைத்தும் இரண்டாகப் பிரிந்து ஒன்றுடன் ஒன்று முறைத்துக் கொண்டிருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டன. எந்த நேரத்திலும் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் ஏதோ ஒரு காரணத்தை முன்வைத்து, ஒரு யுத்தம் ஆரம்பிக்கப்படலாம் என்ற ஒரு பனிப்போர்த் தன்மை இருந்து கொண்டே இருந்தது. கியூபா, ஹங்கேரி, வியட்னாம் போன்ற நாடுகளில் நடைபெற்ற சிறிய யுத்தங்கள் மூலம் இந்தப் பனிப்போர், பெரும்போராக மாறக் கூடிய சந்தர்ப்பங்களும் தோன்றின. ஆனாலும், அவை புத்திசாலித்தனமாக (அல்லது உள்ளூர இருக்கும் பயத்தால்) இரண்டு பக்கத்தாலும் அடக்கப்பட்டது.

தங்கள் யுத்த தளபாடங்களை நிலம், நீர், ஆகாயத்தில் என்று அனைத்துத் தளங்களிலும் பெருக்கி, அதனடிப்படையில், 'நான் பெரியவன்.. நீ பெரியவன்..' என அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒன்றுக்கொன்று போட்டியாக மார்தட்டிக் கொண்டிருந்தன. இந்த நேரத்தில் ரஷ்யா ஒரு புதுவிதமான யுக்தியைக் கையாண்டு, பனிப்போரின் வடிவத்தை வேறு ஒரு தளத்துக்குக் கொண்டு சென்றது. ஆகாய வெளியில் போர் விமானங்கள் என்ற அளவில் நின்று கொண்ட ரஷ்யா, திடீரென 'ஸ்புட்னிக் 1' (Sputnik 1) என்ற செயற்கைக் கோளை (Satellite), 1957ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4ம் தேதி விண்வெளிக்கு அனுப்பி வைத்தது. ஸ்புட்னிக் பூமியின் மேல்பரப்பில் உள்ள விண்வெளியைச் சுற்றி வந்தது. மனித வரலாற்றிலேயே விண்வெளிக்கு மனிதனால் அனுப்பப்பட்ட முதல் செயற்கைக் கோள் என்ற பெயரை 'ஸ்புட்னிக் 1' பெற்றுக் கொண்டது. இதன் மூலம் தனது காலடித் தடத்தை விண்வெளியில் உயரத் தூக்கி எடுத்து வைத்துவிட்டதாக மறைமுகமாக மார்தட்டிக் கொண்டது ரஷ்யா. ரஷ்யாவின் இந்தச் செயல் உண்மையில் வியப்பான ஒன்றுதான். உலகம் முழுவதும் மூக்கில் விரலை வைத்து, ஆச்சரியமாகவும், பயத்துடனும் ரஷ்யாவைப் பார்க்க வைத்த நிகழ்வாக, அந்த நிகழ்வு அமைந்தது. அதனால் அமெரிக்கா பெருத்த அவமானத்தை அடைந்ததாக எண்ணிக் கொண்டது. அத்துடன் அமெரிக்காவுக்கு ஒரு பயமும் தொற்றிக் கொண்டது. விண்வெளியில் தளம் அமைத்து, அங்கு அணுகுண்டுகளைப் பொருத்தி, அமெரிக்காவுக்கு ஒரு அச்சுறுத்தலாக ரஷ்யா இனி அமைந்துவிடுமோ என்று வெளிப்படையாகவே தன் பயத்தை வெளிக்காட்டியது அமெரிக்கா. அணுகுண்டை ஏவியத்தத்தை நடத்துவார்களோ என்று இரண்டு பக்கமும் பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்த வேளை அது. இப்போது பனிப்போரின் சக்தியில் ரஷ்யாவே முன்னிலையில் இருப்பது போல ஒரு தோற்றமும் உருவாகிவிட்டதால், அமெரிக்காவின் பதட்டம் அதிகரித்தது.

ரஷ்யாவின் அதிரடி இத்துடன் நின்றுவிடவில்லை. 'ஸ்புட்னிக் 1' ஐ அனுப்பிய அடுத்த ஒரு மாதத்தில், அதாவது 1957ம் ஆண்டு நவம்பர் மாதம் 3ம் தேதி, 'ஸ்புட்னிக் 2' என்ற பெயரில் அடுத்த செயற்கைக் கோளையும் தொடர்ந்து விண்வெளிக்கு அனுப்பி வைத்தது. இந்தத் தடவை ரஷ்யா செயற்கைக் கோளை வெறுமையாக அனுப்பி வைக்கவில்லை. அதனுள் 'லைக்கா' (Laika) என்னும் பெண் நாய் ஒன்றையும் வைத்து அனுப்பியது. இதன் மூலம் விண்வெளிக்கு பிரயாணம் செய்த முதல் உயிரினம் என்ற பெயரை லைக்கா தட்டிக் கொண்டது. விண்வெளிக்குச் சென்ற லைக்கா, வெப்பக் கதிர்களின் தாக்கத்தால் சில மணி நேரமே உயிருடன் இருந்தாலும், உலக வரலாற்றில் தனக்கென ஒரு இடத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. லைக்காவைப் பெருமைப்படுத்தவென ரஷ்ய அரசும், அதன் ஆதரவு நாடுகளும் லைக்காவின் படத்துடன் கூடிய தபால் தலைகளை வெளியிட்டன. லைக்காவை விண்வெளிக்கு ரஷ்யா அனுப்பியது, அமெரிக்காவின் தலையில் இறங்கிய இரண்டாவது பேரிடியாகும். அமெரிக்கா மிகவும் கூசிப்போனது. சொல்லப் போனால், அமெரிக்காதான் விண்வெளிக்கு செயற்கைக் கோள் ஒன்றை அனுப்புவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தது. ஆனால் ரஷ்யா மிகவும் ரகசியமாக தன் திட்டத்தை நிறைவேற்றிவிட்டது. இவர்கள் இருவருக்கும் ஒரே சமயத்தில் விண்வெளிக்கு ராக்கெட் அனுப்பும் எண்ணம் தோன்றியதற்கும் ஒரு காரணமும் இருந்தது. விண்வெளிக்கு ராக்கெட் அனுப்பும் தொழில்நுட்பத்தை இவர்கள் இருவரும் பெற்றுக் கொண்டது ஜேர்மன் விஞ்ஞானிகள் மூலம்தான். இரண்டாம் உலகப் போரின் வெற்றியின் பின்னால் ஜேர்மனியை ரஷ்யாவும், அமெரிக்காவும் பங்கு போட்ட போது, ஜேர்மனியின் முதன்மை விஞ்ஞானிகளையும் பங்கு போட்டுக் கடத்திக் கொண்டு சென்றனர். அவர்கள் மூலம் இரு நாடுகளும் ராக்கெட் தொழில்நுட்பங்களைப் பெற்றுக் கொண்டன.

இதன் பின்னர் 1958ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் தேதி, அமெரிக்கா 'எக்ஸ்ப்ளோரர் 1' (Explorer 1) என்ற செயற்கைக் கோளை விண்ணுக்கு அனுப்பி வைத்தது. பூமியைச் சுற்றி மின்காந்த ஏற்றங்களையுடைய, கதிர்வீச்சுள்ள மிகப்பெரிய இரண்டு பட்டிகள் (Belts) அமைந்திருக்கின்றன என்பதை எக்ஸ்ப்ளோரர் 1 செயற்கைக் கோள்தான் கண்டுபிடித்தது. 'வான் அலன் கதிர்வீச்சுப் பட்டி' (Van Allen Radiation Belt) என்று இதை அழைக்கிறார்கள். மனிதன் சந்திரனுக்குச் செல்லவில்லை என்பதற்கு இந்தப் பட்டியும் ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. இது பற்றி விளக்கமாக பின்னர் பார்க்கலாம். 'எக்ஸ்ப்ளோரர் 1' ஐ விண்வெளிக்கு அமெரிக்கா அனுப்பி வைத்ததன் மூலம், தானும் ரஷ்யாவுக்கு சமமானவன் என்று காட்டிக் கொண்டது. அதன் பின்னர் இந்த இரண்டு நாடுகளும், தங்களில் யார் விண்வெளியில் உயர்ந்தவர் என்று காட்டிக் கொள்ளும் போட்டியில் இறங்கினர். பில்லியன் பில்லியன் டாலர்கள் இதனால் விண்வெளியில் கொட்டப்பட்டது. எத்தனையோ தோல்விகள், ஏதோ சில வெற்றிகள் என நடந்த இந்த விண்வெளித் தொடர் ஓட்டத்தில் வெடித்துச் சிதறியதும், விழுந்து மோதியதுமான விண்கலங்கள் அதிகமாக இருந்தன. இவர்களின் இந்தப் போட்டி, 'விண்வெளிப் பந்தயம்' (Space Race) என்று அழைக்கப்பட்டது. இந்த ஓட்டப் பந்தயத்தில் ரஷ்யாவே பலசமயங்களில் முன்னிலையில் இருந்தது. ஒரு கட்டத்தில் ரஷ்யா யாருமே நம்பமுடியாத ஒரு காரியத்தைச் செய்து முடித்தது. அமெரிக்கா என்ன செய்வதென்றே தெரியாமல் கைகளைப் பிசைந்தபடி நின்ற சம்பவமாக அது அமைந்தது. மனித வரலாற்றின் மிகப்பெரிய மைல்கல்லாக அந்தச் சம்பவம் பதியப்பட்டது.

பாலுறவு சிக்கல்களைக் கண்டறிவது எப்படி?

– டாக்டர்.ஜீ.ராஜமோகன் Ph.d.,M.A(Phy)

பெரும்பாலான பாலியல் பிரச்சனைகள் மனம் சார்ந்தவையாகவே இருக்கின்றன. இதனால் உடல் ரீதியான காரணங்கள் இல்லை என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. தீருமணமான தம்பதியர் என்னிடம் ஆலோசனைக்கு வந்தனர். கணவனால் பூரணமாக பாலின்பச் செயலில் ஈடுபட முடியவில்லை என்றும், இதன் காரணமாக தமக்கு மிகுந்த துன்பம் உள்ளதாக அந்த பெண்மணி கூறினார். காரணத்தை ஆராய்ந்த போது, அவன் மீது ஒரு வகை தூர்நாற்றம் வீசுவதாகவும், அந்த நாற்றம் உடல் உறவின் போது அதிகமாக இருப்பதாகவும், அதன் காரணமாக தன்னுடைய உறுப்பு விறைப்பினை பெறுவதில்லை என்றும் காரணம் சொன்னார் அந்த வாலிப வனப்பு மிக்க இளைஞன். வேறு ஒரு ரகசியத்தையும் அவர் கூறினார். வேறு பெண்களோடு மிகவும் தீருப்தியான உறவைக் கொள்ள முடிவதையும் சொன்னார்.

இதைப்போலவே மனம் சார்ந்த பிரச்சனைகளில், பாலியல் சிக்கல்களும் ஒரு வெளிப்பாடாக அமைகிறது. பாலியல் பிரச்சனைகள் பற்றி முக்கியமாக அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டியது இரண்டு அம்சங்கள். ஒன்று இந்தப் பிரச்சனைகள் பொதுவானவை. மற்றொன்று தற்காலிகமானவை. எல்லோருடைய வாழ்விலும் பாலினப் பிரச்சனைகள், சிக்கல்கள் வந்து பின்பு மறைந்து போய் இருக்கும்.

பாலுறவு சிக்கல்கள் – இரு பாலினரிடமும் தோன்றுவதாக இருந்தாலும், ஆண்களே இதனை வெளியில் காட்டிக் கொள்கின்றனர். பெண்கள் தங்களின் பிரச்சனைகளை தங்களுக்குள்ளேயே வைத்து சுமக்கின்றனர். சிலர் தங்களின் நம்பகமான ஒரு சிலரிடம் பேசுவது உண்டு. இன்றுள்ள சமூக அமைப்பு உளநோய்கள் பற்றி பிறரிடம் பேசுவதைக் கூட களங்கமாக எண்ணுகிறது.

தயக்கம் காட்டுவதற்கு இது ஒரு காரணம். எனவே மன நல ஆலோசகர்கள் எப்படி இப்பிரச்சனையை அணுகுவது என்பதில் நுட்பம் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு கேட்காத, இடையூறு இல்லாத தனிமையான இடமாக இருப்பது அவசியம். குடும்ப பிரச்சனைகளுக்கு பின்னணியில் பாலின்பச் சிக்கல் இருக்கிறதா என அறிவது அவசியம்.

உடல் உறவு திருப்தியாக உள்ளதா என்பதை அறிய குடும்ப வாழ்க்கை எப்படி உள்ளது? கடைசியாக உறவு கொண்டது எப்போது என்பது போன்ற விபரங்களைக் கேட்பது அவசியம். கேள்விகள் கேட்கும் போது ஏனோ தானோ எனக் கேட்காமல் ஈடுபாட்டுடன், உண்மையான அக்கறையுடன் கேட்பது நல்லது. பாலியல் விழிப்புணர்வு உள்ளவர்களிடம் நேரடியாக கேட்கலாம்.

என்னிடம் ஆலோசனைக்கு வந்த ஒரு பெண்மணி, தனது வயதுக்கு வந்த இரண்டு மகள்களின் முன்பாகவே, தனது கணவர் தினந்தோறும் உடல் உறவு கொள்ள முயற்சிக்கிறார் என்றும், பிள்ளைகள் திருமணமாகாமல் வீட்டில் இருக்கும்போது, இப்படி அநாகரிகமாக நடந்து கொள்ளும்போது, முடியாது என்றால் அன்று ஒரு ரணகளமாகவே வீடு மாறி விடுகிறது என்றும் கூறினார்.

இப்படி கேட்டது அவரது மகள்களிடமிருந்த ஆதங்கத்தை சமனப்படுத்த பயன்பட்டது.

அவர் தான் அப்படி என்றால் "ஏன் எங்களது அம்மா அதற்கு சம்மதிக்க வேண்டும்?" என்று அவர்கள் கேட்டனர்.

அதற்கு பதிலாக அமைந்தது தான் அந்த தன்னிலை விளக்கம், பாலுறவு சிக்கல் பற்றி, முழுமையாக, அதன் வகை, தன்மை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். பிரச்சனை எப்போது ஏற்பட்டது? எல்லா நாட்களிலும் உள்ளதா? எப்போது கூடுதலாக உள்ளது? முன்பு எப்படி இருந்தது? இது பற்றி துணைவியின் அபிப்ராயம் என்ன? என்பது பற்றி அறிவது அவசியம்.

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high with your thoughts
PROMAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

வங்கி ஒன்றில் பணிபுரியும் கணேஷ் தன்னால் முன்பு போல உடல் உறவில் முழுமையாக ஈடுபட முடியவில்லை என்றும், விறைப்பில்லாமையுடன், பெண் உறுப்புக்குள் செலுத்த இயலாமையும் உள்ளது என்றும் வேதனைப்பட்டார். இதற்கான காரணத்தை அறிய அவரது மனைவியிடம் கலந்து ஆலோசித்த போதும் சரியான தெளிவு கிடைத்தது.

வீட்டில் ஒரு பிரச்சனை காரணமாக அவர்கள் வெளியேறி, வேறு ஒரு வீட்டிற்கு சென்றனர். அங்கு பூரணமான தனிமையான இடவசதி இல்லை.

பல குடித்தனங்கள் உள்ள வீடு. அங்கே உடல் உறவு கொள்ள போதுமான பாதுகாப்பு இல்லை என்கிற ஒரு பயம் கணேஷ்க்கு ஏற்பட்டது.

யாராவது பார்ப்பார்களோ, வந்து விடுவார்களோ என்கிற பயம் வாட்டியது. பக்கத்து வீட்டுக்காரர்கள் வெளியே சென்றிருந்தாலும் கூட, அவர்கள் எப்போது திரும்பி வந்து கதவைத் தட்டுவார்களோ... என்கிற பதைபதைப்பு வாட்டும். இதனால் ஏற்பட்ட மனத்தடை, திரும்பவும் தனது சொந்த வீட்டிற்கு சென்ற பிறகும் தொடர்ந்தது. மன அமைதிப் பயிற்சியை அளித்து அவரை பழைய நிலைக்குத் திருப்பினேன்.

ஓரினச்சேர்க்கை, சுய பாலின்பச் செயல். இரவில் விந்து வெளியேறுவது போன்ற பிரச்சனைகளுக்கு ஆலோசனைகளுக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. இச்செயல்களால் ஏற்படும் மனப் போராட்டங்கள், குற்ற உணர்வுகள் களையப்பட முறையான சைக்கோ தெரபி தேவைப்படுகிறது.

எனவே, எந்தவொரு பாலியல் சிக்கலையும் தத்தமது மனங்களுக்குள் வைத்துப் பூட்டிக்கொண்டு, வாழ்க்கை கசக்கிறதே என்று அதன் போக்கில் விட்டுவிடக் கூடாது. பிரச்சினைகளை, அதற்குத் தீர்வு தரக்கூடியவர்களிடம் கூறி, பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதன் மூலமே, எதிர்கால வாழ்க்கையை இனிப்பாக மாற்றிக்கொள்ள முடியும்.

கண்ணூறு

சிறுகதை

தொகுத்தளிப்பவர்:
வித்துவான் க.ஞானரெத்தினம்

சமீபத்தில் இறைவனடி சேர்ந்த வித்துவான் கனகரெத்தினம் செபரெத்தினம் அவர்களுக்கு, நயனங்கள் பேசுகின்றன என்னும் அவர் எழுதிய கதைக் களஞ்சிய நூலிலிருந்து எனக்கு மிகவும் பிடித்தமான கண்ணூறு என்னும் தலைப்பிலமைந்த சிறுகதையைத் தளிர் மூலம் சமர்ப்பிப்பதில் திருப்தியடைகிறேன்.

கிராமத்து இங்கிலிஸ் பள்ளிக்கு என்னை மாற்றியிருப்பதாகக் கட்டளை வந்தது. இடிந்து போனேன். எஸ்.எஸ்.சியுடன் படிப்பித்ததை விட்டு விஞ்ஞானப் பயிற்சி பெற்றதற்குப் பயன்! எம்.பி.மார் பழக்கமில்லை. என்ன செய்யலாம்? உடைந்த உள்ளத்தோடு கிராமத்துக்குப் போனேன்.

கிராமம்... கிராமத்துக்குரிய சர்வ இலட்சணமும் பொருந்தியிருந்தது. முற்றிய நெற்கதிர்கள் அழகு காட்டி நிற்கும் வயல்கள் சுற்றிவர, பல்வகை மீன்களும் பரந்துகிடக்கும் வாவிகளும் இருபுறமும் காணப்பட்டு உணவுப் பஞ்சத்துக்கு இடமே தராத பட்டணப் பழக்கம் எனக்கு. என்னதான் எப்படி இருந்தாலும் கிராமம் கிராமந்தானே.

கிராமத்துக்கு வந்து சேர்ந்ததும் கண்ணைக் கட்டி அமாவாசை இருட்டிலே விட்டமாதிரி இருந்தது!

திங்கட்கிழமை. மனதைத் தேற்றிக்கொண்டு கட்டளையுடன் பாடசாலைக்குப் போனேன். இன்முக வரவேற்பு.

நேரசூசி போடுவது சரியாய் ஒரு வாரத்தை விழுங்கிவிட்டது. ஒவ்வொரு நாளும் போவதும்... வருவதும்... நேரசூசி தயார். எனக்கு எட்டாம் வகுப்பின் பொறுப்பு.

திங்கட்கிழமை... புதிய வகுப்பு. புதிய சூழல். உள்ளே போகிறேன். "குட்மோர்னிங் சேர்"

"குட்மோர்னிங்... இருங்கோ."

வாய் பிள்ளைகளின் பெயர்களைச் சம்பிரதாயமாக அறிகிறது. கண் அவர்களை எடைபோட்டு அளக்கிறது.

முதலில் ஆண்பிள்ளைகள். மூன்று நிமிடம். தொடர்ந்து பெண் பிள்ளைகள். மூன்றாம் வரிசை வலமிருந்து இரண்டாம் பிள்ளை.

"பெயர்?"

"அரசம்மா சேர்"

வைத்த கண் அசைய மறுத்தது. வகுப்பென்பதையும் மறக்க வைத்த காட்சி. காரணம், முற்றிய நெல்லதன் நிறத்தில் நீர்மையா? சுற்றிய கூந்தலின் சுந்தரத் தோற்றமா? வற்றிய உடலது வண்ணக் கோலமா? பெற்ற என் மகளது உருவச் சாயலா? இல்லை... இல்லவே இல்லை. இவையொன்றுமே காரணங்கள் அல்ல! அப்படியென்றால்... காரணம் அவளுடைய கண்கள். இலக்கியத்திலே கயல், குவளை, தாமரை, வடு, வகிர், வேல்... அப்பப்பா.... எத்தனை உவமைகள் கண்களுக்கு.

சொல்லப்பட்ட உவமைகள் ஒன்றுமே அரசம்மாவின் கண்களுக்குப் பொறுந்துவனவாயில்லை. அவளுடைய பெயரோடு தொடர்புடைய அரச இலையே என் நினைவுக்கு வந்தது. அஃது ஓரளவு பொருந்துவதாய் இருந்தது.

அவை பெரிய நீண்ட கண்கள். அசாதாரணக் கண்கள். அழகு என்பதற்கு உரிய இலக்கியம் அவை. வைத்த கண் வாங்காது பார்க்க வேண்டியவை. எத்தனை தடவை, எவ்வளவு நேரம்... ஆசை தீரப் பார்க்கலாம். ஆனால் ஆசை தான் தீராது. கொள்ளை அழகு, பேரழகு.

முன் ஒருபோதுமே எங்குமே கண்டிராத சுந்தரக் கண்களைக் கண்டதில் எனக்கு நிறைவு. அக்கண்களைப் பார்த்துக்கொண்டிருப்பதாயின் எத்தனை ஆண்டுகளுக்கு வேண்டுமானாலும் கிராமத்தில் இருக்கலாம்.

பாடசாலைக்கு வந்து ஆறு மாதங்கள் முடிந்துவிட்டன. பிள்ளைகள் அன்புடன் பழகிவிட்டார்கள். பாடசாலையும் பழகிவிட்டது. பழகப் பழகப் பானும் புளிக்கும்... பார்க்கப் பார்க்க காட்சியும் சலிக்கும். ஆனால் அரசம்மாவின் கண்களைப் பொறுத்தவரையில் புளிப்புமில்லை சலிப்புமில்ல. நாளுக்கு நாள் அவள் கண்களின் எழில் கூடிக்கொண்டு போவதாகவே எனக்குத் தெரிந்தது.

அன்றொரு திங்கட்கிழமை. அரசம்மாவின் கண்களில் இனந்தெரியாத கலக்கம். முகத்தில் வாட்டம். துயரின் சாயல். காரணத்தை அவளிடமிருந்து அறிய முயன்றேன்.

அவளுடைய அயல் வீட்டுக் குழந்தைக்குக் கடுமையான காய்ச்சல். ஒரு மாதக் குழந்தை. காய்ச்சல் வரவரக் கூடிக்கொண்டே போன தால் பெற்றோர் சோதிடர் ஒருவரிடம் வெற்றிலை வைத்துப் பார்த்தனர். வெற்றிலை வைத்துப் பார்த்தல் கிராமத்திலே சர்வ சாதாரணமான வழக்கம். பிள்ளைக்குக் "கண் பட்டிருக்கிறது" என்று சோதிடர் கூறிவிட்டார். இனி அதற்குரிய பரிகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். யாருடைய கண்களால் இந்த ஊறு ஏற்பட்டது? யாருடைய கண்கள்?

காய்ச்சல் வருவதற்கு முதல் நாளில் அந்தக் குழந்தையைத் தூக்கி விளையாட்டுக் காட்டியவள் அரசம்மாதான். அவளுடைய கண்கள் அசாதாரணமான கண்கள் என்று கிராமத்தில் கூறப்பட்டவை. ஆகவே, அரசம்மாவின் கண்களே பிள்ளை மீது பட்டிருக்க வேண்டும். பெற்றோர்களின் எண்ணத்தை உறவினர்கள் வெளிப்படையாகவே பேசிக் கொண்டார்கள்.

அரசம்மாவின் காதிலும் இப்பேச்சு விழுந்தது. அவள் துடித்துப் போனாள். இச்சம்பவத்தை அரசம்மாவின் பக்கத்திலிருந்த மலர் மூலம் அறிந்து கொண்டேன். மலர் இதனைக் கூறிமுடிப்பதற்கிடையில் அரசம்மா பல தடவைகள் விம்மிவிட்டாள்.

அறிவில்லாத சனங்கள்... போயும் போயும் இந்த அழகுக் கண்கள் பட்டுத்தானா காய்ச்சல் வரும்? என் உள்ளம் நெகிழ்ந்தது. அரசம்மாவிற்கு ஆறுதல் கூறினேன். அவள் சின்னப் பெண்தானே...? சமாதானமாகிவிட்டாள். கண்களின் கலக்கம், சந்திரனை மறைத்த மேகம் மறைந்தது போல மறைய, அழகு அழகாகக் காட்சி தந்தது.

இன்னுமொரு நாள்... இதேபோன்ற ஒரு சம்பவம். அரசம்மாவின் கண்கள் பட்டு இன்னுமொரு பிள்ளைக்குக் காய்ச்சலாம்! அவளின் கண்களுக்கு எல்லோரும் பயந்தனர். மற்றொரு நாள்... இதைப்போல பல சம்பவங்கள்.

அரசம்மாவின் கண்களைக் கிராம மக்கள் அனைவருமே வெறுத்தனர். பிசாசுக் கண், கொடிய கண், இராட்சதக் கண் என்றெல்லாம் குத்திக்காட்டி ஏசத் தொடங்கிவிட்டார்கள். அவளுடைய அம்மாவுங்கூட "கொள்ளிக் கண்ணி" என்று அவளை இழித்துரைக்கத் தொடங்கிவிட்டாள்.

இந்தக் கொடுமைகளை எல்லாம் அந்தப் பிஞ்சு மனம் எவ்வாறு தாங்கிக்கொள்ளும்? இவற்றை அவள் என்னிடம் கூறியபோது, அவளடைந்த துயரம்? நான் பட்ட வேதனை?

இறைவனின் அற்புதமான அழகுப் படைப்பு. அழகின் நிறைவான திவ்விய வடிவம் கற்பனையிலடங்கா கண்கவர் கண்கள். கோல நெடுங்கண் என்றெல்லாம் புகழப்படவேண்டிய கண்கள். அவளுடைய பொல்லாத கிராமத்திலே, பொல்லாத கண்களென வெறுக்கப்பட்டுவிட்டன.

அரசம்மா மிகுந் வேதனைப்பட்டுவிட்டாள். தகப்பனை இழந்திருந்த அவள், என்னைத் தன் தகப்பனாக மதித்து தனது மனத்துயரைக் கொட்டுவாள். மன வேதனை வார்த்தைகளாக வெளிவரும்.

"இந்தப் பாழாய்ப்போன கண்களால் எனக்கு ஒரே ஏச்சும் பேச்சும்தான் சேர். இந்த இழவுக் கண்கள் ஏன் சேர் எனக்கு அமைந்தன?"

"என்ன ஒருவரும் விரும்புறவங்க இல்ல சேர். அம்மா ஒரே திட்டாகத்

திட்டுறா. எனக்கு என்ன செய்யிற எண்டே தெரியல்ல சேர்.”

நான் சொல்லக் கூடியது கிராம மக்களைத் திருத்தவே முடியாது. அவர்களுக்குப் பழைமையிலே அப்படி ஒரு அழுங்குப் பிடி. சில கொள்கைகள், நம்பிக்கைகளில் அவர்களுக்கு அசையாத நம்பிக்கை. “கண் படுதல்” அதிலொன்று.

அரசம்மாவுக்கு ஆறுதல் கூறினேன். அன்பு காட்டினேன். உலக இயல்பு இதுதான் என்று உணர்த்தி வைத்தேன். அவள் குழந்தை மனதிலே படிந்த வேதனை தீரவில்லை. அவள் வேதனையை மறந்தாலும், வேதனை அவளை விட்டு விலக விரும்பாதது போலிருந்தது.

இரண்டு வாரங்களாக லீவில் பட்டணம் போய் நின்று, அன்று காலையிலேயே பாடசாலைக்கு வந்தேன். ஒன்றும் ஒரு திங்கட்கிழமை. வகுப்பிலே அரசம்மாவைக் காண வில்லை. சந்திரன் இல்லாத வானம் போல வகுப்பு சோபை இழந்திருந்தது. அரசம்மாவைக் காணாததால் என் மனமும் வகுப்பைப் போலவே சோபை இழக்கத் தொடங்கியது.

நான் வினவிட முன்னரே, “அரசம்மா இனிப் பள்ளிக்கு வரமாட்டாள் சேர்” என மலர் கூறினாள். மனத்துயரை வெளியில் காட்டாமல் இருக்க பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியதாயிற்று.

“ஏன் வரமாட்டாள்?”

“அவள் கண்கள் குருடாகிவிட்டன சேர்”

அவளைக் காணவில்லையே எனக் கலங்கி நின்ற எனக்கு, கூறப்பட்ட விடையானது வெந்த புண்ணிலே புகுந்த வேலாக, திறந்த புண்ணிலே பட்ட நெருப்பாக இருந்தது. என் காதுகளை நம்ப மறுத்தேன். பாட சாலைக் கட்டிடமே இடிந்து என் தலையில் விழுந்தது போலிருந்தது. அன்று முழுநாளும் நான் படிப்பிக்கவே இல்லை. பிள்ளையைச் சாகக் கொடுத்தவன் போல அன்றைய நாளைக் கழித்தேன்.

வகுப்பு முடிந்து நான் இருக்கும் வீடு நோக்கிப் புறப்பட்டபோது, மலர் என்னிடம் வந்தாள். அரசம்மாவின் நெருங்கிய சொந்தக்காரி மலர்.

“அரசம்மா தன் கண்ணில் செறிந்த அமிலத்தை கொஞ்சம் ஊத்தினாளாம் சேர். இது வேறு ஒருவருக்குமே தெரியாது. எனக்கும், அவளுக்கும் தான் தெரியும் சேர். ஒருவருக்கும் சொல்லக்கூடாதெண்டு எனக்கிட்ட சத்தியம் வாங்கிட்டாள். உங்களுக்குச் சொல்லாட்டி என் மனம் வெடிச்சிடும் போலிருக்கு சேர். இது ஊரில ஒருவருக்கும் தெரியாது சேர்.”



மலர் போய்விட்டாள். இராசையா என்னிடம் வந்தான். அவனும் அரசம்மாவின் வகுப்புத்தான். அவளின் சிறிய தாய் மகன்.

“நீங்க பட்டணம் போன வெள்ளிக்கிழமை இரவுதான் சேர் அரசம்மாவின் கண்ணில் நோவெடுத்தது. முதலில் அவங்கட அம்மா அதக் கவனிக்கல்ல சேர். சனிக்கிழம மருந்து அரைச்சிப் போட்டாங்க. சுகமாகல்ல. தெரிஞ்ச இடங்களுக்கெல்லாம் கொண்டுபோய்க் காட்டினாங்க. ஒண்டும் சரிவரல்ல. ஒரு கிழம முழுதும் ஒரே மருந்துதான் சேர். பேய்க்குச் செய்தும் கழிச்சாங்க. சரிவரவே இல்ல. திங்கட்கிழமை அவள்ற கண் குருடாய்ப் போச்சி சேர்” அவனுடைய கண்கள் கலங்கிவிட்டன. அவனுடையது சகோதர பாசம். இராசையாவும் போய்விட்டான்.

தனிமையிலே பார நெஞ்சுடன் என் அறைக்கு வந்து சேர்ந்தேன். அந்த வெள்ளிக்கிழமை பாடசாலையில் நடந்த நிகழ்ச்சி என் மனத்திரையில் விரிந்தது.

அரசம்மாவின் வகுப்பிலே எனக்குப் பொது விஞ்ஞானப் பாடம். அமிலத்தையிட்டுப் படிப்பித்தேன். அமிலத்தில் செறிந்த அமிலமே வலிமை மிக்கதென்று படிப்பிக்கப்பட்டது. பரிசோதனைகளுக்காகப் பாட சாலை அலுவலக அலுமாரியிலிருந்து, செறிந்த அமிலத்தையும், பரி சோதனைக்காக ஏனைய பொருட்களையும் அரசம்மாவே கொண்டுவந்தாள். அவள் தான் வகுப்புத் தலைவி. பாடசாலையிலே விஞ்ஞானக் கூடம் இல்லாததால், வகுப்பறைகளிலேயே பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. செறிந்த அமிலம், உடையை, உலோகத்தை எவ்வாறு பாதிக்கிறதென்பதை மாணாக்கர் அறிந்துகொண்டனர்.

“உடம்பிலே செறிந்த அமிலம் பட்டால் என்ன நடக்கும் சேர்?”

“உடம்பைச் சுட்டுவிடும்.”

“கண்ணிலே பட்டால்...?” இது அரசம்மா கேட்ட வினா. எவ்வளவு ஆழமான வினா அஃதென்பது அன்று எனக்குத் தெரியவே இல்லை.

“கண் குருடாகிவிடும்.”

அந்த வினாவுக்கு நான் கூறிய விடை. அந்த வினாவும் அந்த விடையும்! செறிந்த அமிலத்தையும் பரிசோதனைப் பொருட்களையும் அலுமாரியிலே வைக்கும்போது, செறிந்த அமிலத்தில் சிறிதளவை அரசம்மா எடுத்துச் சென்றிருக்க வேண்டும்.

கடவுளே! என்னால் நினைத்துப் பார்க்கவே முடியாதிருக்கின்றது. பிசாசுக்கண்... இராட்சதக் கண்... கொடிய நஞ்சுக் கண்... கொள்ளிக்கண் என்றெல்லாம் கூறப்பட்ட சுடுமொழிகள் அரசம்மாவின் கண்களைச் சுட்டுவிட்டன.

வசைமொழி, ஏச்சு, திட்டு எல்லாமே சேர்ந்து தனது கண்களைக் குருடாக்கிவிடும் தைரியத்தை அந்தப் பிள்ளைக்குக் கொடுத்துவிட்டன. கண்வருத்தம் வந்து கண்களைக் குருடாக்கிவிட்டதென மற்றவர்களை நம்பும்படி செய்து, ஒருவருக்கும் தெரியாமல் செறிந்த அமிலத்தால் கண்களை ஊறுபடுத்திவிடும் தைரியம் அவளுக்கு ஏற்பட்டுவிட்டது. இளங்கன்று பயமறியாது தானே!

கண்ணூறு... கண்ணூறு என்று கட்டியழும் கிராம மக்களே அரசம்மாவின் அற்புதமான, அழகான அரச இலைக் கண்களை ஊறுபடுத்திவிட்டனர். இனி, அரசம்மாவின் கண்கள் எவரையும் ஊறுபடுத்த மாட்டா. அவையே ஊறுபட்டு விட்டன.

கவலை

இந்த மூன்றெழுத்துக்குள் எவ்வளவோ பிரச்சினைகள்!

– சிந்தனைப் பூக்கள்: எஸ்.பத்மநாதன் –

தொங்கப்போட்ட முகங்களுடன், தாடியும், மீசையுமாக வாலிபர்கள்; கண்ணீர் மல்கத் தம் கதையைக் கூறும் பெரியவர்கள். வானொலியூடாகத் தம் கவலைகளை வெளிப்படுத்தி, கண்ணீர் வடிக்கும் நேயர்கள். எல்லோரும் "கவலை" என்ற இந்த மூன்றெழுத்துப் பிரச்சினைக்கு உட்பட்டவர்கள் தான். கவலை தீர்க்கும் மருந்துகள், தாயத்துக்கள், நூல்கள் கூட எம்மை ஒன்றும் செய்துவிடவில்லை! காலையிலிருந்து பருக்கைக்குப் போகும் வரையில், எத்தனை விதமான கவலைகள், துயரங்கள் எம்மை எப்படியெல்லாமோ ஆட்டிப் படைக்கின்றன! சின்னதும், பெரியதுமாக எல்லாமே கவலைதான். அவரவர் உள்ளத்திற்கு ஏற்ப, அவை பூதாகாரமாகி நிற்கின்றன. இன்று கவலையில்லாத ஒருவரைக் காண்பது உண்மையில் கடினம் தான். நம் கவலைகளை மறக்க மதுவுடம் தஞ்சம் புகுபவர்கள், போதைவஸ்துக்கு அடிமையாகுபவர்கள் தீனசரி பெருகுகின்றனர். "இந்த நூற்றாண்டு கவலைகளின் காலம்" என்று கூறிய டபிள்யு.எச்.ஆடன் என்ற அந்த அறிஞர், மிகவும் சரியாகவே கூறியுள்ளார்.

மனித குலத்திற்கு எப்போது கவலை தோன்றியது என்று தெரியவில்லை. எனினும், ஆரம்பம் முதலே மக்களினம் கவலையில் மூழ்கியிருக்கக் கூடும். ஆரம்பத்தில் இருந்த கவலை வேறாகவும், பின்பு வேறாகவும் மாறியிருக்கக் கூடும்.

மனிதரும் விலங்குகளும் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தாலும் படிப்படியாக சிந்தனை தொடங்கிய மனித இனம் கவலையில் மூழ்கியது. வாழ்க்கையை ஒரு போராட்டமாக எடுத்துக்கொண்ட காலம் முதல் மகிழ்ச்சியைத் தேடி ஓட ஆரம்பித்த காலம் இன்னும் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறோம். இன்னும இன்னும் அதனைக் கண்டதாகத் தெரியவில்லை. எங்கும் எதிலும் திருப்தியில்லாத நிலையில் வாழ்கிறோம். வாழ்க்கையின் அறத்தினை, விளக்கத்தினைப் புரிந்துகொள்ளும் நிலையில் நாம் இல்லை. கறையான் தான் அரிப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். கவலையுமா எம்மை அரித்துக் கொண்டிருக்கிறது? கவலையை மாற்றுவது, மறப்பது, நிறுத்துவது என்பதனை உளவியல் துறையினர் தொடர்ந்தும் ஆய்வு செய்கின்றனர். மனக்கவலையைத் தீர்ப்பதற்கு கடவுள் வழிபாடுதான் ஒரேவழி என்பது ஆன்மீகவாதிகளின் கருத்து. நல்ல நூல்களை வாசிப்பது தான் ஒரே வழி என்பது எழுத்தாளர்களின் கருத்து.

பௌதிகம், இரசாயனம் போன்ற பாடங்கள் போன்று, பிரச்சினை தீர்வில் இலகுவானது. விஞ்ஞான அபிவிருத்தி கூட கவலையைக் கூட்டியதே ஒழிய நிறுத்தவில்லை. எனவே, இதற்கு என்னதான் வழி? இதுதான் இன்றுள்ள வினா!

பயமும் பீதியும் தான் கவலையைக் கூட்டும் ஏனைய தன்மைகளாகும். எதிர்காலத்தில் எப்படி வாழ்வது? என் மகன் டொக்டராக வருவாரா? என் மகளுக்கு திருமணம் நிகழுமா? புதிய வீடு வாங்குவேனா? காதல் நிறைவேறுமா? என்றெல்லாம் பிரச்சினைகள் குழப்பத்தினை ஏற்படுத்துகின்றன. இத்துடன் கூடவே நீர்க்குமிழிகள் போல் துணையான கவலைகள் பல நூறாகின்றன. பழைய கவலை அகல, புதிய கவலை தோன்றுகிறது. வீட்டிற்குள் ஆரம்பித்து, சமூகத்திற்கும் நாட்டிற்கும் இக் கவலை வியாபகம் பெறுகிறது. எனவேதான் இன்று இது சர்வதேசப் பிரச்சினையாக மாறியுள்ளது.

கவலைகள் உண்மையில் தொலைவிலே உள்ளனவெனினும், நாம் மிக அருகில் இழுத்துக்கொள்கிறோம். "யாமிருக்க பயமேன்?" இப்படித்தான், முருகனின் படம் போட்ட கலண்டர் கூறும். "துயர்தீர்க்கும மருந்து" இப்படித்தான் பல தேவாரத் திருப்பதிகங்கள் கூறும். "கவலைகளை எம்மால் மாற்ற முடியும்" என்று சோதிடர்கள் பலர் கூறுவர். எனினும் தீர்க்கப்படாத பிரச்சினை இது.

கேள்வியும் நானே, பதிலும் நானே என்ற நிலையில் நாம் உள்ளோம். கவலைக்கு நாம் காரணமாகும்போது மௌனியாக இருக்கின்ற கடவுளர்

என்ன செய்ய முடியும்! உள்ளத்தினைப் புரிந்துகொண்டவர் நாம்தானே! "மல்லிகை" ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் "தூண்டில்" வினாவிடையில் ஒரு பகுதி.

"நீங்கள் இவ்வாறு உழைப்பதன் இரகசியம் என்ன?" என்ற கேள்விக்கு அவரது பதில். "நான் செருப்புக்களை வெளியே கழற்றிவிடும்போது, பிரச்சினைகளையும் அங்கேயே கழற்றி விடுகின்றேன். நிம்மதியாகத் தூங்குகின்றேன்" என்றார். அதில் பல உண்மைகள் உள்ளன.

துன்பமே, விலக்கிப் போ...! துயரமே, அகன்று போ...! இப்படி உரக்கக் கத்திப் பார்ப்போம். சொல்ல முடியும், ஆனால் செய்ய முடியாது.

இன்று யாரைப் பார்த்தாலும், "நேரம் இல்லை" என்பர். சரியான வேலை இருக்கிறது என்று அலுத்துக்கொள்வார்கள். எப்போதுதான் இந்த வேலை முடியப்போகிறதோ என்பார்கள். மனித மனத்தின் ஆழம், அகலம் புரிய முடிவதில்லை.

"கற்பனைகளை மட்டும் வளர்த்துக்கொள்ளும் நாம், காற்றில் பறக்கிறோம்." நிலத்தில் நடப்பதற்குக் கால்களுக்குப் பழக்கிக்கொடுக்க வில்லை! எதனையும் திட்டமிட முடியாத நாம், கவலைகளை மாற்ற முடியாது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு ஔவையார் கூறிய, "இடம் பட வீடெடேல்" என்ற மொழிக்கு விளக்கம் தெரிந்தவர், தெளிந்தவர் எத்தனை பேர்? எங்கள் மத்தியில் எல்லாமே அதிருப்திதான். வீட்டின் சுற்றளவில், தளபாடங்களில், சடங்குகளில், ஒப்பீடுகளில், அணிகலன்களில், வாகனங்களில் எல்லாம் தாவிச் செல்கிறது.

கவலையுள்ள மனதில் அமைதியில்லை, நிதானம் இல்லை, சிந்தனை யில்லை. குழப்பம் மட்டுமே குடியிருக்கும் வெளித்தோற்றம் தளர்ந்துபோய் நலம் இழப்போம். எதிலும் கவனம் செலுத்த முடியாது. விரக்தியே மிஞ்சு கிறது. தன்னைத்தானே நொந்துகொண்டு சிறிய விடயத்தினைப் பெரிதாக்கி, மற்றவர்கள் சந்தோஷமாக இருக்கிறார்கள், நான் இல்லையே என ஏக்கம் கொண்டு, காரணமின்றிப் பிறரைக் கோபித்துக்கொண்டு வாழ்கிறோம்.

கவலைகள் தோன்றக் காரணிகள் பல. புதியதான தோல்வி, மற்றவர் களின் பழிச்சொல், மானமிழப்பு, சாதகமற்ற சூழ்நிலை, பதில் கூற முடியாத நிலை, பழைய சம்பவங்களை இரை மீட்கும் நிலை, தனிமையில் விடப் படும் நிலை, நட்பினை இழத்தல், ஏமாற்றம், சக்திக்கு மீறிய செயலில் தோல்வி போன்ற பல. நமது கவலைகளை மற்றவர்களுக்குக் கூறிப் பிரயோ சனம் இல்லை. காரணம், எம்மைவிட அவர்களின் கவலைகள் அதிகமாக இருக்கலாம். எனவே, கவலைகளை நாம்தான் அனுபவிக்க வேண்டும்; ஜீரணிக்க வேண்டும். நமக்கு நாமே உதவி புரிந்துகொள்ளாது விட்டால், நமக்கு உதவ வேறு யாரும் இல்லை.

மனக்கவலையால் நமக்குப் பல தீமைகள் ஏற்படுகின்றன. முதலில் எமது புறத்தோற்றம் மாறுகிறது. கவர்ச்சி இழந்து, அழகு, இளமை குறைந்து விடுகின்றது. முகுத்தில் சுருக்கம் ஏற்பட, முதுமை ஏற்படுகிறது. தூக்கம் கெடுவதால், தலைவலியும் நெஞ்சுவலியும் ஏற்படுகிறது. மனக்குழப்பம் என்னும் நிலைக்குத் தள்ளப்படுவதால், குடற்புண், தொய்வு (ஆஸ்துமா), மயக்கம், மூச்சுவிட முடியாமை ஏற்படலாம். பதற்றம், நாவறட்சி, உடல் நடுக்கம் ஏற்படலாம். சில வேளைகளில் தற்கொலையும் செய்துகொள்வர்.

"அறிவாளிகள் பொதுவாக ஒரேமாதிரி இருக்கும்போது, முட்டாள்கள் வேறு வேறாகச் சிந்திக்கிறார்கள்" என்று எங்கேயோ படித்த ஞாபகம். அதாவது, கவலை என்பது எமது எண்ணத்தில் எழுவது. எண்ணத்தில் வாழ்வது ஆகும். வாழ்வின் அர்த்தங்களைப் புரிந்துகொள்ளாதவரை, கவலைகளை எம்மால் அகற்ற முடியாது. பண்புள்ள நடத்தை மூலம் பல அர்த்தங்களை அறிந்துகொள்ள முடியும். நல்ல நட்பு முறை மூலம் மகிழ்ச்சியை உறுதிப்படுத்தவும் முடியும்.

மனக் குழப்பத்தினை அறவே அகற்ற, தெளிந்த சிந்தனைகள் எமக்குள் எழ வேண்டும். இது சாதாரணமாக வராது. அனுபவம், கல்வி முறைகள், நூல் வாசிப்பு, படைப்பாற்றல் மூலம் எழ வேண்டும். எமது நேரத்தினை ஏதாவது ஒரு செயற்றிட்டத்தில் எமது புலன்களைச் செலுத்தும்போது, கவலைகள் அற்றுவிடுகின்றன.

"கன்னங்கள் அமுதூறக் குயில்கள் பாடும்" என்ற பாரத் போன்று, எமது எண்ணத்தில் அமுது ஊற வேண்டும். கண்களில் நிலவு ஊறித் ததும்ப வேண்டும்; எண்ணங்கள் பூக்கள் போல மலர வேண்டும்; இசையில் எம்மை மூழ்கடிக்க வேண்டும். திருப்தி, மகிழ்ச்சி இரண்டும் வாழ்வின் அர்த்தங்கள். இதனால் கவலை நம்மை விட்டுத் தூர விலகிச் செல்லலாம் அல்லவா!



பழமுதிர்ச்சோலை

- சிவநயனி முகுந்தன் -

ஜனவரிமாதப் பனி நிற்கமாட்டேன் என்கிற கங்கணத்துடன் பொழிந்து தள்ளிக்கொண்டிருந்தது. குளிர்வேறு எலும்புவரை ஊடுருவிக் கொண்டிருந்தாலும், ஹீட்டரின் உதவியால் வீட்டிற்குள்ளே மிதமான வெப்பம் படர்ந்துகொண்டிருந்தது. ஜன்னலின் ஓரமாக நின்றவாறு மல்லிகைப்பூக்களை வாரிக் கொட்டிக்கொண்டிந்ததுபோலப் பொழிந்து கொண்டிருந்த பனியைக் கண்வெட்டாது பார்த்துக்கொண்டிருந்த மலர், அந்த அழகிய காட்சியை ரசித்ததாகத் தெரியவில்லை.

அவள் உள்ளத்தில் நேற்று முன்தினம் அவளுக்கும், அவள் உறவினர் களுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை நினைவிற்கு வந்தது.

"என்ன மலர்... எத்தனை நாட்களுக்குத்தான் இப்படிச் சிரமப்படப் போகிறாய்...? பேசாமல் நான் சொல்வதைக் கேள்..." என்றாள் அவள் கணவன் வாகீசனின் ஒன்றுவிட்ட சகோதரியான புவனா.

"உண்மைதான் மலர்... புவனா சொல்வதிலும் அர்த்தம் இருக்கிறது. பேசாமல் அவள் சொல்வதுபோலச் செய்துவிடு. இதனால் உன் குடும்பவாழ்க்கையும் பாதிப்படையக் கூடும்" என்றாள் இன்னொரு உறவினரான நந்தினி.

"இதோ பார்...! நீ யோசிக்க யோசிக்க சிக்கல்தான் கூடுமே தவிர அதில் எந்தப் பயனும் இல்லை. நீ யாரைப் பற்றி யோசிக்காவிட்டாலும், உன் கணவரையும், பிள்ளைகளையும் பற்றி எண்ணிப் பார்க்கவேண்டும். உன் முழுநேரத்தையும் இதிலே செலவிடுவதால் அவர்களைக் கவனிக்கவில்லை என்கிற குறை வந்து சேரப்போகிறது. எப்படியென்றாலும் உன் கணவர் ஓர் அளவிற்குத்தானே பொறுத்துக்கொள்வார் அவர் சாது என்பதற்காக உண் இஷ்டப்படி எதையும் செய்துகொண்டிருக்காதே. பேசாமல் அவர்களை எங்காவது முதியோர் இல்லத்தில் சேர்த்துவிடு" என்றாள் இன்னொருத்தி.

சும்மாவே குழம்பிப்போயிருந்த மலருக்கு அடுத்து என்ன செய்வது என்று எதுவுமே புரியவில்லை. அவர்கள் பேசியது அவள் மண்டையைக் குடைந்துகொண்டிருந்ததால் நிம்மதி பறிபோனதுதான் மிச்சம். எங்கோ வெறித்துக்கொண்டிருந்த மலருக்குத் தூரத்திலே யாரோ முனங்குவது கேட்க சுய நினைவிற்கு வந்தாள். அவள் அன்னைதான்...

கிட்டத்தட்ட மூன்று மாதங்களாகப் படுத்த படுக்கையாகக் கிடப்பவர். குளித்துவிட்டு வருகிறேன் என்று குளியல் அறைக்குள் நுழைந்தவர்தான். ஈரத்தரை வழுக்கிக் கீழே விழுந்து தலையில் பலத்த அடி. வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றபோது எலும்பு முறிவு என்றார்கள். கூடவே தலையில் அடிபட்டதால் தலைக்குள்ளே இரத்தம் கசிகிறது என்றார்கள். அதற்காகச் சிகிச்சை செய்தார்கள். கிட்டத்தட்ட ஒரு மாதம் வைத்திய சாலையில் இருந்த தாயார் இரண்டு மாதங்களுக்கு முன்புதான் வீட்டிற்கு அழைத்துவரப்பட்டிருந்தார். என்னதான் நவீன முறையில் சிகிச்சை செய்தாலும், விதி தன் கையை விடுவதாக இல்லை. இந்த மூன்று மாதமாக அவள் தாய் புவனேஸ்வரியால் எழுந்து நடக்கமுடியவில்லை. இனி வயது வந்த நேரத்தில் எலும்புகள் ஒன்றோடொன்று சேருவது என்பதும் இயலாத காரியமல்லவா. இயற்கைக் கழிவுகள் அனைத்தும் கட்டிலோடுதான். சிறுவர்களுக்கு டயப்பர் மாற்றுவதுபோல அடிக்கடி அவள் அன்னைக்கும் மாற்றவேண்டியிருந்தது.

பட்ட காலிலேயே படும் என்று சும்மாவா சொல்லிவைத்தார்கள்? இந்தப் பாரிய உலகத்தில், எத்தனையோ பேர் இருக்க, அந்தப் பாழாய்ப்போன சனிக்கு இவர்கள் மீதா கண்படவேண்டும்..? மலர் இலங்கையில் இருந்து தன் தாயையும், தந்தையையும் பொறுப்பேற்றுக் கனடாவிற்கு அழைத்திருந்தாள்.

அழைத்து வந்தாள் என்றால், அன்னைமீதும், தந்தைமீதும் பிரிந்திருக்கமுடியாத அன்பு என்றெல்லாம் சொல்லிவிடமுடியாது. அவர்கள் மீது இருந்த அன்பு ஒரு புறமாக இருந்தது என்றால், அவள் வேலைக்குப் போகும்போது, பிள்ளைகளைக் குழந்தைகள் காப்பகத்தில் விட்டுவிட்டுச் செல்லவேண்டிய நிலை. அதற்கே அவளுடைய சம்பளம் முழுவதுமாகப் போய்விடுகிறது. அதை விட, அவர்கள் பழகும் பழக்கங்களும் அத்தனை ஏற்புடையதாக இருக்கிவில்லை.

இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்துக்கொண்டிருந்தபோதுதான், தாய் தந்தையைக் கூப்பிடும் எண்ணம் பிறந்தது. அதற்கு வாகீசனும் பச்சைக்கொடி காட்டிவிட, இங்கே அழைத்துவிட்டாள். அவர்களும் வந்து எட்டுவருடம் பறந்தோடிவிட்டது. போன வருடம்தான் தந்தை தயாபரன் இயற்கை எய்தினார் நல்லவேளை அவர் பெயரில் ஏற்கெனவே காப்புறுதி செய்யப்பட்டிருந்ததால், செத்தவீட்டுச் செலவு போகக் கையில் கொஞ்சம் மிஞ்சியது. அதை முதலாகப் போட்டு, மார்க்கத்தில் ஒரு சிறிய வீட்டை வாங்கியிருந்தாள் மலர்.

ஆனால் பிரச்சனை வீடு வாங்கிய பிற்பாடு அதிகரித்ததே தவிரக் குறைந்ததாக இல்லை. மோல்கேஜ், காஸ், மின்சாரம், தண்ணீர்க் கட்டணம் என்று, உழைத்த பணம் எல்லாம் காற்றோடு கரைந்ததுதான் மிச்சம். அதுவும் குளிர்காலம் வந்தால் சொல்லவே வேண்டாம். காஸ் கட்ட

NEW RANGANAS JEWEL HOUSE

நியூ ரங்கனாஸ் நகை மாடம்

அப்பொழுது இரண்டு கிளைகளில்!

எமது சேவைகள்

1. சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்
2. பழைய தங்க நகைகள் அதிகூடிய விலையில் வாங்கப்படும்.
3. தங்க நகை அடவு சேவை குறைந்த வட்டி வீதம்.
4. துரித பணமாற்று சேவை சகல நாடுகளுக்கும்.
5. பரிசு பொருட்கள், பான்சி சாமான்கள் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
6. புதிய தங்கநகை சேமிப்பு திட்டம் ஆரம்பம் ($200 இலவசம்)
7. உங்கள் தங்க நகைகள் உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.

Tel: 647-702-2159

மார்க்கம் - ஸ்ரீல்ஸ்: 6055 Steeles Ave E Unit C102, Scarborough, ON., M1X 0A7

ஸ்ரீஎ: 5215 GTA Square Mall (Finch & Middle Field சந்திப்பு அருகாமையில்)

Sooriyan

Srilankan -
South Indian Cuisine

:: Dosa :: Idli
:: Kothuroty

416.438.5333

3863 Lawrence Ave. E.
Scarborough, ON.
M1G 1R2

Restaurant takeout and catering

தரமான
சைவ, அசைவ
உணவுகள்
ஒரே இடத்தில்...



ணத்திற்கான பணம், நான் முந்தி நீ முந்தி என்று பணப்பையை விட்டு ஓடத்தொடங்கிவிடும். அதற்காக அவளும் வாகீசனும், மேலதிகநேரம் வேலைசெய்யவேண்டியிருந்தது.

பேசாமல் வீட்டை விற்றுவிட்டு அடுக்குமாடிக்கே போகலாம் என்றாலும், ஆசை விடுவதாக இல்லை. இப்போது இல்லை என்றாலும், இன்னும் நான்கு வருடத்தில், அவர்களின் வீட்டின் விலை, பன்மடங்காக உயர்ந்திருக்கும். விற்றால், மூன்றுலட்சம் டாலர் கையில் நிற்கும். அடேங்கப்பாஃ அதை யார் தருவார்கள்? இந்த வேளையில்தான் தாய் புவனேஸ்வரி கீழே விழுந்து காயப்பட்டுக்கொண்டார்.

தாயிருந்தபோது தெரியாதிருந்த சுமை, அவர் படுக்கையில் விழுந்தபின்பு, பெரும் பாரமாக மலரை அழுத்தியது. துடையை அடிக்கடி வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதும், வீட்டில் சமையல் செய்து வைப்பதும், பிள்ளைகளைப் பாராமரிப்பதும், சாப்பாடு கட்டிக் கொடுப்பதும், உறவினர்களுக்குப் பதில் கூறுவதும், தாயைப் பராமரிப்பதும் எல்லாமே நூலேணிகட்டி ஏறுவதுபோலத்தான். அவள் படும் துன்பம் யாருக்குத் தெரியப்போகிறது.

இந்த நிலையில், உறவினர்கள்வேறு எரிகிற தீயில் நெய்யை அள்ளியூற்றத் தொடங்கினார்கள். அவர்களுக்கென்ன, ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதுபோல, யார் வீட்டில் என்ன பிரச்சனை இருக்கிறது என்பதைப் பூதக்கண்ணாடி வைத்துப் பார்ப்பதிலேயே அவர்களுடைய நேரம் போகிறது.

இருந்தாலும், அவர்கள் சொல்லுவதிலும் நியாயம் இருப்பதைப்போன்று வாகீசனின் நடவடிக்கையும் தற்சமயம் அமைந்துவிட்டிருந்தது. இப்போதெல்லாம் அவன் அவளுடன் பேசுவதற்கு நேரமே கிடைப்பதில்லை. வேலை வேலை என்று எந்த நேரமும் அவன் கால்கள் சக்கரம் கட்டி ஓடிக்கொண்டபடிதான். போதாதற்கு அவன் வீட்டிற்கு வந்தாலே அவன் முகம் இறுகிப்போயிருக்கும். பிள்ளைகளோடும், அவளோடும் ஓரிரண்டு வார்த்தை பேசியதோடு அவன் வேலை முடிந்துவிட்டது என்பதுபோலப் படுக்கப்போய்விடுவான்.

திருமணம் முடித்த இந்த பன்னிரண்டு வருடத்தில் அவன் இப்போதுதான் இறுகிப்போயிருக்கிறான். பிள்ளைகள் கூட தாயைத் திரும்பிப் பார்ப்பதாக இல்லை. பாடசாலையிலிருந்து வந்தோமா, பாடத்தைப் படித்தோமா என்றிருப்பார்களே தவிர, அம்மம்மாவிடம் சென்று எப்படி இருக்கிறீர்கள் என்று அவர்கள் விசாரித்தது கிடையாது. அவர்களும் என் அம்மாவை வெறுக்கிறார்களா என்ன? அப்படியானால் அவர்கள் சொல்வதுபோல அம்மாவின் நிலையும் அவன் முக இறுக்கத்திற்கு ஒரு காரணமாக இருக்குமோஃ என்கிற எண்ணம் அவள் உள்ளத்தைக் கலங்கடித்தது.

"மலர் உன் கணவன் அமைதியாக இருக்கிறான் என்று தப்புக் கணக்குப் போடாதே. அமைதியாக இருக்கிற நெருப்புக் குழம்புதான் ஒரு நேரத்தில் ஊரையே அழிக்கும் எரிமலையாக மாறிவிடுகிறது. உன் கணவர் கொந்தளிப்பதற்குள்ளாக உன் தாயை எங்காவது நல்ல இடத்தில் சேர்க்கும் வழியைப் பார்..." என்று அவள் உறவினர் ஒருத்தி கூறியது மீண்டும் நினைவிற்கு வந்தது.

தாயின் முனங்கலைக் கேட்டு அறைக்குள் வந்தாள் மலர். புவனேஸ்வரியின் வாடியதோற்றம் மலரின் இதயத்தைக் கசக்கிப் பிழிவதாக இருந்தது. தான் ஆடாவிட்டாலும், தன் சதையாடும் என்பார்கள்.

தாயைப் பார்க்கும் போது, இவரை எப்படித் தனியாக முதியோர் இல்லத்தில் விடமுடியும்.

இத்தனை காலமாக நம்மைப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தவரை ஒரு நொடியில் உதறிவிட்டுப் போகமுடியுமா? அது முடியும் காரியமா? ஆனால் இதனால் என் குடும்ப வாழ்க்கை பாதித்துவிடுமாஃ? எனக்கு என் கணவன் குழந்தைகள் முக்கியமா, இல்லை என்னைப் பெற்றுப் பாராட்டி வளர்த்த தாய் முக்கியமா... ஒன்று வேண்டும் என்றால் இன்னொன்றை இழக்க வேண்டுமா...? கடவுளே நான் என்ன செய்யப்போகிறேன்..." என்ற ஒரு முடிவு எடுக்க முடியாது ஆப்பிழுத்த குரங்காக அவள் தவித்தாள்.

பின்னேரம் மூன்றுமணியானதும், நோக்கியோடினாள் மலர். அரக்கப் பரக்க, வீட்டைப் பூட்டிவிட்டுப்பாடசாலையை உணவைத் தயாரித்துத் தாய்க்கு ஊட்டி, உடைகளைத் துவைத்து, மீண்டும் தாயைக் கவனித்து, எல்லாம் செய்வதற்குள்ளாக நேரம் ஓடிவிட்டது. இனிப் பரக்கப் பரக்க ஓடி பிரத்தியேக வகுப்பிற்குப் போன பிள்ளைகளை வீட்டிற்கு அழைத்துவந்து, இரவு உணவைத் தயாரித்து, இரவு வேலைக்கு அவள் ஓட வேண்டும். இவை அனைத்தும் செய்வதற்குள்ளாக அவள் உடல் ஓய்ந்துவிட்டது.

பேசாமல் தாயை மற்றவர்கள் கூறுவதுபோல முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டால் என்ன? ஒவ்வொரு சனி ஞாயிரும் போய் பார்த்துவிட்டு வரலாம். என்று அவள் பலவாறாக எண்ணத் தொடங்கினாள்.

அன்று மாலை வீடுவந்த வாகீசனின் முகத்தில் பெரும் இறுக்கம் தோன்றியிருந்தது. அவன் இறுக்கத்தைப் பார்த்த மலர், எதுவும் பேசாமல், தேனீர் வார்த்துக் கொடுத்தாள். அதைப் பெற்றுப் பருகிய வாகீசன் குடித்து முடித்ததும், பிள்ளைகளைப் பற்றி விசாரித்தான். அதோடு தன் வேலை முடிந்தது என்பதாகப் படுக்கை அறைக்குள் நுழைந்தவன், அப்படியே விழுந்து படுத்தான்.

அவன் அமைதி, முகத் திருப்பல் அனைத்தும் மலரிற்குப் பெரும் வேதனையைக் கொடுக்க, மலர் மற்றய வேலைகளை முடித்துவிட்டு, இரவு வேலைக்குப் புறப்படத் தயாரானாள்.

மறுநாள் அதிகாலை ஐந்து மணிக்கு வேலை முடித்து வீட்டிற்கு வந்த

மலர், ஒரு முடிவுக்கு வந்திருந்தாள். கொஞ்ச நாட்களுக்கு இந்த இயந்திர வாழ்க்கையில் இருந்து விடுதலை வேண்டும் என்கிற எண்ணத்தில், அவள் தாயை முதியோர் இல்லத்தில் விட யோசித்தாள். அதற்கான வேலைகளிலும் இறங்கினாள்.

முதியோர் இல்லத்தில் அதற்குரிய பணத்தையும் கட்டிவிட்டு, இதயம் நிறையப் பாரத்தைச் சுமந்தவாறு வீட்டிற்கு வந்தாள் மலர். என்னதான் பாரம் இறக்கலாம் என்று தாயை விட்டுவிட்டு வந்தாலும், அந்தப் பாரம் சற்றளவும் குறைந்ததாகத் தெரியவில்லை. மாறாக அவள் உள்ளத்தில் பாரம் அதிகரித்ததுதான் மிச்சம்.

எனக்கு ஏதாவது இப்படி நடந்திருந்தால், என் அம்மா இப்படியா செய்திருப்பார்கள் என்று அடிக்கடி மனச்சாட்சி அவளைக் குத்திக் கேட்டு இம்சித்தது. இத்தனை நாட்களாகத் தாயைப் பராமரித்த கரங்கள், அவரைப் பராமரிப்பதற்காக ஏங்கின.

தாயை முதியோர் இல்லத்தில் விட்டதால், மலருக்கு அதிக வேலை இருக்கவில்லை. இருந்தாலும் தாயின் அறையைப் பார்க்கும்போது அவளுக்கு வேதனை முட்டிக்கொண்டு வந்தது. பின்னேரம், குழந்தைகளை வீட்டிற்கு அழைத்துவந்தபோது, அவர்கள் தமது அறைக்குள் நுழைந்தனர். அவர்களுக்காக மாலை உணவைத் தயாரிக்க சமயல் அறைக்குள் நுழைந்த மலரை, அவள் மூத்த மகள் பவதாரணி அழைத்தாள்.

"அம்மா... அம்மம்மா எங்கே காணவில்லையே...?" என்று கேட்டதும் வியப்பாகப் பார்த்தாள் மலர்.

இதுநாள் வரை, தன் தாயை அவர்கள் எங்கே என்று கேட்டதில்லை. இப்போது என்னடாவென்றால்...பூமி என்ன தலைகீழாகவா சுற்றுகிறது?

"என்ன... புதிதாக இன்று அம்மம்மா எங்கே என்று கேட்கிறாய்?" என்று கேட்டாள் மலர், தன் வியப்பை மறைக்காத குரலில்.

"இல்லை... ஒவ்வொரு நாளும், அதிகாலையில் நானும், பவானியும் அம்மம்மாவிற்கு காலைவணக்கம் சொல்வது வழக்கம். பின்னேரம் வீடு வந்ததும், அவர்களிடம் நாங்கள் வந்துவிட்டோம் என்று கூறுவோம். இன்று அவர்கள் அறையில் இல்லை. அதுதான் கேட்கிறேன்" என்றாள் பவதாரணி.

இதுநாள் வரை தன் குழந்தைகள் தன் தாயைக் கவனிப்பதில்லை என்று தனக்குள்ளேயே புழுங்கினாளே. ஆனால், இதுநாள்வரை தான்தான், தன் குழந்தைகளை நன்றாகக் கவனிக்கவில்லை என்கிற உண்மை தெரிந்ததும், அவளுக்கு தன்மீதே கோபம் வந்தது. ஏனோ அவர்களிடம் உண்மை கூறப் பிடிக்காமல், அந்த நேரத்திற்கு எதையோ சொல்லிச் சமாளித்த மலர், அவர்களுக்கு மாலை உணவைக் கொடுத்துவிட்டு, அவர்களைத், தனியார் கல்விச்சாலைக்கு அழைத்துச் சென்று விட்டுவிட்டு வீட்டிற்கு வந்தாள். அன்று ஏனோ வாகீசன் என்றும் இல்லாத் திருநாளாக, சற்று வேளைக்கே வேலையில் இருந்து வந்திருந்தான்.

இன்று என்ன எல்லமே தலைகீழாக நடக்கிறது?" என்று தனக்குள் வியந்தவள், தேனீரை வார்த்து அவனிடம் நீட்டினாள்.

வாங்கிப் பருகியவன், சுற்றும் முற்றும் பார்த்தான்.

"எங்கே பவானியும், பவதாரணியும்?" என்று வினாவினான். நீண்ட நாட்களின்பின் அவன் கேள்வி மலருக்கு வியப்பை மட்டுமல்லாது மனதில் இருந்த பாரத்தையும் சற்று விலக்கியது.

"அவர்களைத் தனியார் கல்வி நிலையத்திற்கு அழைத்துச் சென்று விட்டுவிட்டு இப்போதுதான் வந்தேன்" என்று பதில் கொடுத்தாள் பவதாரனி.

"ஓ..." என்றவன், தேனீரைப் பருகினான். பருகி முடித்ததும், அதைக் கழுவிக் கவிழ்த்துவிட்டுப் பேச்சு முடிந்தது என்பது போலத் தன் அறைக்குள் நுழைந்தான். ஆடையை மாற்றிவிட்டு, வெளியே வந்தவன், அவள் தாயாரின் அறையைத் திறந்து பார்த்தான். அங்கே வெறுமையாக இருந்த படுக்கையைக் கண்டதும் திகைத்தான்.

"மலர்... மலர்..." என்று அழைத்தான்.

அவன் குரல் கேட்டு மலர் ஓடி வந்தாள். வாகீசன் அவள் தாயாரின் அறைக்குள் இருந்து வருவதைக் கண்டதும், அதிர்ந்துபோய் நின்றாள்.

"மாமி எங்கே...?" என்றான் வியப்புடன்.

"அது... அது வந்து... நான்..."

"என்ன மலர்... மாமி எங்கே என்று கேட்டால் தடுமாறுகிறாய்... அவர்களுக்கு என்ன? வைத்திய சாலையில் அனுமதித்திருக்கிறாயா?" என்று கேட்டவனின் குரலில் நிச்சயமாகப் பதட்டம் இருந்தது.

"இல்லை... வந்து... நான் அவர்களை முதியோர் இல்லத்தில்..."

"முதியோர் இல்லத்தில்..."

"முதியோர் இல்லத்தில் சேர்ப்பித்து..." அவள் முடிக்கவில்லை.. அவள் கன்னத்தில் அவன் கரம் பாய்ந்து படிந்தது.

"யாரைக் கேட்டு அவர்களை முதியோர் இல்லத்தில் விட்டாய்? உனக்கு எத்தனை தைரியம் இருக்கவேண்டும். நீயெல்லாம் ஒரு பெண்... சே... இத்தனைகாலம் சீராட்டிப் பாராட்டி வளர்த்தவரை, எப்படி ஒரு நொடியில் உன்னால் தூக்கியெறிய முடிந்தது? இத்தனை நாட்களான உன்னை நினைத்துப் பெருமைப் பட்டுக்கொண்டிருந்தேன். இப்போது நான் வெட்கப் படுகிறேன். வேதனைப்படுகிறேன்..." என்று ஆக்கிரோஷமாகச் சொன்னவனை விழி விரியப் பார்த்தாள் மலர்.

அவளுக்கு அவள் காதுகளையே நம்ப முடியவில்லை. என் கணவனாஇ என் கணவனா இப்படிப் பேசுவது. இத்தனை நாட்களாக முகம் சிடுசிடுத்த தற்குத் தன் தாய் கரணமாகவில்லையா...? அவள் திகைப்பை வெறுப்புடன் கண்ட வாகீசன்,

"என்ன அப்படிப் பார்க்கிறாய்...? நாளை மதியத்திற்குள் உன் அம்மா இங்கே இருக்கவேண்டும், இல்லையேல்..." என்று அவன் இழுத்ததும், மலருக்கும் அழுகை அழுகையாக வந்தது.

"அப்படியானால்... நீங்கள் இத்தனை நாட்களாக முகம் திருப்பியதற்கு என் அம்மா காரணமில்லையா?" என்று வியப்புடன் கேட்டாள்.

"என்ன...? நான் முகம் திருப்பினேனா...? என்ன உளறுகிறாய்...?" என்று எரிச்சலுடன் கேட்டான் வாகீசன்.

அப்போதுதான் மலர் உறவினர்கள் பேசியது, தான் நினைத்தது அனைத்தையும் ஒன்றுவிடாமல் கூறினாள். அவள் கூறியதைக் கேட்கக் கேட்க வாகீசனுக்கு வியப்பாக இருந்தது.

"மலர்... நான் எப்படி உன் தாயை முதியோர் இல்லத்தில் விடுமாறு கேட்கமுடியும்? அது உன் தாய் மலர். என் தாயாக இருந்தால் இப்படி அவர்களை அநாதையாக விடச் சம்மதித்திருப்பேனா? நாளைக்கு உனக்கும் வயதாகுமில்லையா? அப்போது நம்முடைய குழந்தைகள் இதே செயலை நமக்குச் செய்தால், எப்படியிருக்கும்? யோசித்துப் பார். உறவினர்கள் ஆயிரம் பேசுவார்கள்.

எலும்பில்லாத நாக்கு எப்படி வேண்டுமானாலும் திரும்பும். அதற்குப் பயந்து வாழமுடியுமா சொல்லு? அவரவருக்கு இப்படியான ஒரு பிரச்சனை வரும்போதுதான் அதன் வலியும் வேதனையும் புரியும். அது வரை அவர்கள் பார்வையாளர்கள் மட்டும்தான். உன் தாய் வேதனையில் இருக்கிறார்கள் என்றால் அது அவர்களுக்கு ஒரு செய்திமட்டும்தான்.

ஆனால் வலி, வேதனை அனைத்தும் நமக்குத்தான்... தனக்குத் தனக்கு என்றால் தான் சுளுகு படக்குப் படக்கு என்று சொல்லும். நான் முகம் இறுகினேன் என்றால் அதற்கு உன் தாயார்தான் காரணம் என்று நீ எப்படி நினைக்கலாம்...? பைத்தியக்காரி" என்றபோது அவன் குரலில் பெரும் சீற்றம் இருந்தது.

ஆனால் கலங்கிய தன் மனைவியின் முகத்தைக் கண்டதும், அவன் சீற்றம் சற்றுத் தணிய,

"மலர்... திருமணம் முடித்த உடனே பந்தம் எதுவும் இல்லையென்றாகி விடுமா? யோசித்துப்பார்... எனக்கு உன்னை எத்தனை காலமாகத் தெரியும்? கடந்த பன்னிரண்டு வருடமாகத்தானே... உன் தாய்க்கு? நீ அவர்களின் கர்ப்பத்தில் உதித்ததில் இருந்து தெரியும். சொல்லப்போனால், என்னைவிட அவர்களுக்குத்தான் உன்மீது உரிமையதிகம். அவர்களைப் போய் யாருமில்லாத அனாதையாக விட்டுவிட்டு வா என்று நான் எப்படி சொல்வேன். இல்லை அதைச் செய்யத்தான் உனக்கு எப்படி மனம் வந்தது"

"நான் மனமிறுகியிருந்ததற்கு எத்தனையோ காரணம். வீட்டையும் பார்த்துக் குழந்தைகளையும் என்னையும் கவனித்து. உன் அம்மாவையும் பராமரித்து, இது போதாது என்று வேலைக்கும்போய், நீ எத்தனை சிரமப்படுகிறாய். பார்க்கப்போனால், நீ மகிழ்ச்சியாக இருப்பதே இல்லை என்றாகிவிட்டது. இது... இதையெல்லாம் நினைக்கும்போதுதான் எனக்கு மிகவும் வேதனையாகப் போய்விடுகிறது. நானாவது வேலைக்குப் போய் மேசையில் இருந்துவிட்டு அங்கிருக்கின்ற நண்பர்களுடன் பேசிவிட்டு வருகிறேன். ஆனால் நீ... உனக்கு அதற்குக் கூட நேரமில்லை... இதை நினைக்கும் போது, உன்னை நான் மகிழ்ச்சியாக வைத்திருக்காமல் தவறு செய்கிறேனோ என்று மனம் உறுத்துகிறது.

என்னால் உனக்கு எந்த விதத்தில் பாரத்தைக் குறைக்கமுடியும்?

இதுதான் என் மன இறுக்கத்திற்குக் காரணம். இதைப்போய் நீ தவறாக நினைத்துவிட்டாயாம் ஆனால் என் மீதும் தவறிருக்கிறது மலர். நான் என்பக்கமிருந்துதான் யோசித்தேனே தவிர, உன்னிடத்திலிருந்து சிந்திக்கவில்லை. நீ இந்த அளவிற்குப் போயிருக்கிறாய் என்றால், அதற்கு நான்தான் முழுக் காரணமும்... சாரிம்மா... இனிமேல் இதுபோலத் தவறு நடக்காது. எதுவாக இருந்தாலும், அதை மனதிற்குள் வைத்துப் புழுங்காமல், உன்னிடம் கொட்டிவிடுகிறேன் சரியா?" என்றான் அடித்த அவள் கன்னத்தை வருடியவாறு.

தொடர்ந்து,

"மலர்... உனக்கு உன் தாய் எத்தனை முக்கியமோ, அத்தனை முக்கியம் எனக்கு. நாளைக்கு முதல் வேலையாக அவர்களை இங்கே அழைத்துவரவேண்டும் புரிந்ததா?" என்றபோது, மலர் மேலும் கீழுமாகத் தலையை ஆட்ட,

"இரவில் நீ வேலைக்குப் போய்விடுவாய். தேவையென்றால் அவர்கள் என்னைத்தான் அழைப்பார்கள். அவர்களுக்கு சேவைசெய்யும்போது, என் தாய்க்கு செய்யும் உணர்வு எனக்கு. என்ன புரிந்ததா?"

என்று கேட்டவன் அவள் விழிகளில் இருந்து கண்ணீர் கொட்ட, இழுத்துத் தன் மார்போடு அணைத்துக்கொண்டான்.

"என்னை மன்னித்து விடு... மலர் உன்னை மேலும் வருத்திவிட்டேன்" என்று வேதனையுடன் சொன்னவனின் வாயைத் தன் கரத்தால் பொத்தினாள் மலர்.

"இல்லை... வாகீஸ்... உங்களை நான்தான் நன்றாகப் புரிந்துகொள்ளவில்லை..." என்றபோது அவள் குரல் மேலும் கம்ம, "ஷ்... இனி இந்தக் கண்களிலிருந்து கண்ணீர் வரக்கூடாது. புரிந்ததா?" என்று கண்டிப்பாகக் கூறியவன், "சரி சரி... நேரமாகிவிட்டது... கிழம்பு, பிள்ளைகளை அழைத்துவரவேண்டும்..." என்றவாறு, அவள் முகத்தில் கோலமிட்ட முடிக்கற்றைகளை ஒதுக்கி அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

அதுவரை இதயத்தை அழுத்தியிருந்த பாரம் மாயமாகக் கரைந்துவிட, இத்தனை நாட்களாக இறுகியிருந்த உணர்வு அவளிடமிருந்து விடை பெற்றுச் செல்ல, உற்சாகமாகக் காரைநோக்கி ஓடினாள் மலர்.

தளிரில் படர்ந்த நிகழ்வுகள்



எழுத்தாளர் அகனி சுரேஸ் அவர்களின் வெகுளாமை நூல் வெளியீட்டு விழா அண்மையில் ஸ்காபுரோவில் இடம் பெற்றபோதுஎடுக்கப்பட்ட படத்தொகுப்பு.

ஊடகவியலாளர் புதுவை ராமனுக்கு 75வது பிறந்த தினமன்று கௌரவிப்பு, வராந்த பத்திரிகை கதிரொளியும், காலாண்டு தளிர் சஞ்சிகையும் இணைந்து ஊடகவியலாளர் புதுவை ராமனின் 75வது பிறந்த தினமன்று சேவை நலன் பாராட்டும் கௌரவிப்பும் அண்மையில் மார்க்கம் யேசு மாறாதவர் திருச்சபையில் இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படத்தொகுப்பு.

தளிரில் படர்ந்த நிகழ்வுகள்

2014 சித்திரை மாத தளிர் வெளியீடு! கனடா செல்வச் சன்னிதி ஆலய மண்டபத்தில் இடம் பெற்றது. இவ் வெளியீட்டு விழா தளிர் சஞ்சிகையின் உறுப்பினரும் ஆலோசகருமான கலாநிதி பாலசுந்தரம் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக கென்சவேற்றி கட்சியை சேர்ந்த சான் தயாபரன் கலந்துகொண்டார், மற்றும் ஆலயத்தின் பிரதம குருக்கள். Tamil CNN. வீரகேசரி மூர்த்தி. வீடு விற்பனை முகவர்களான சங்கர் மாணிக்கம், நேசன் பொன்னையா, தளிர் சஞ்சிகையின் உறுப்பினர்களான சிவநயனி முகுந்தன். போல்ராஜ் பாண்டியன், புதுவை ராமன் மற்றும் ஒக்டோபர் 27 நகரசபைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களான மார்க்கம் நகரசபை வாட் இல 8 ஜோசப் மோகன் ரெமிசியர். ஸ்காபுரோ மத்திய தொகுதி வாட் இல 37 பாலச்சந்திரன் நிரஞ்சன் ஆகியோருடன் சித்திரைத்தளிர் முன் அட்டையில் இடம் பிடித்த ஈழத்து இளம் பாடகி வர்மன் கீர்திகா திருமதி வர்மன்.திருமதி பாலசுந்தரம். கனடா தமிழர் இனையத்தின் தலைவர் நாதன் வீரவாகு. எழுத்தாளர்களான த.சிவபாலு. அகனி சுரேஸ். ஆகியோரையும் படங்களில் காணலாம்.

Dr.G.Gopal, Orthodontist

பற்களை நேராக ஒழுங்குபடுத்தும் பற்சிகிச்சை

எந்தவொரு நோய்க்கும் இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, பரம்பரை இயல்பாய் வருதல் (Genetical), இரண்டாவது சுற்றாடல் சம்பந்தப்பட்டு வருதல் (Environmental Disorder).

பல் ஒழுங்காக முளைக்காமல் (Maloccusion) வருவதும் இரண்டு வகைப்படும். ஒன்று, தாடை எலும்பு சிறிதாக இருக்கலாம். இரண்டு, பற்கள் பெரிதாக இருக்கலாம்.

(Teeth Size & Bone Size) தாடை எலும்பு சிறிதாக இருந்தால் எவருக்கும் 13 வயதுக்கு இடைப்பட்ட காலம் மிகக் கூடிய அளவு (Maximum growth power) தாடை எலும்புகள் வளர்ச்சி அடையும். இதைப் பயன்படுத்தி தாடை எலும்புகளைச் சில (Apphonco) கருவி மூலம் வளர்ச்சியடையச் செய்யலாம். அல்லது வளரும் Direction ஐ மாற்றி பற்களை அதற்குள் ஒழுங்கமைக்கக்கூடியதாக வளர்க்க முடியும். பல் மட்டும் ஒழுங்கில்லாமல், தாடை எலும்பு (Jaw Bones) ஒழுங்காக இருந்தால், எந்த வயதிலும் Bracer போட்டு நேராக்க முடியும்.

ஆனபடியால், பிள்ளைகளை, ஏழு வயதிற்கும் 10 வயதிற்கும் இடையில் Dentist இடம் பரிசோதித்து, Bracer அல்லது appliance போட்டு தாடை எலும்புப் பற்களை ஒழுங்குபடுத்தும் சிகிச்சையை நல்ல முறையில் பெற்றுக்கொள்ளலாம்.

7 வயதிற்கும் 13 வயதிற்கும் இடையில், பிள்ளைகளின் ஒத்துழைப்பும் மனரீதியாக, இலகுவாக இருக்கும் Bracer போட்டு அடை நடைமுறைப்படுத்துவதற்கு. Bracer போட்டால் அதற்குரிய சாப்பாட்டு முறைகள், Bracerஐயும் பல்லையும் சுத்தமாக வைத்திருப்பதற்குரிய அறிவுரைகளையும் Dentist இடம் பெற்றுக்கொள்வது நல்லது. (அதை ஒரு Paperஇல் Print பண்ணி வைத்திருந்தால், பிள்ளைகள் தவறாமல் செயற்படுத்துவார்கள்.

12 வயதிற்கு மேல் தாடை எலும்பு வளர்ச்சி முடிந்தபின், பற்கள் ஒழுங்கில்லாமல் இருந்தால், சில பற்களை ஒவ்வொரு பக்கமும் எடுத்துத் தான் (Extraction of Teeth) Bracer போட்டு





பற்களை ஒழுங்கு படுத்த முடியும்.

ஆகவே, கூடியவரையில் பற்சுகாதாரத்தைச் சிறு வயதிலிருந்தே பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டும். ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில், தயவு செய்து, பல் பிடுங்காமல், Bracer போட வேண்டுமானால், 7 வயதிற்கும் 10 வயதிற்கும் இடையில் உள்ள பிள்ளைகளை Dentist இடம் காட்டி, சிகிச்சை பற்றி அறிந்துகொள்வது மிகவும் நல்லது.

Mechanical & Electrical Repairs For All Makes & Models

JRS AUTO TECH

COMPLETE CAR
& TRUCK CARE

2655 Lawrence Ave. East,
Unit 5
(Midland & Lawrence)

Tel: 416-759-8585
Fax: 416-759-8586

CALL SUBAS: 416-206-9489
email: jrsautotech@hotmail.ca

OPEN 7 DAYS A WEEK
HOURS: 9AM - 11PM

Licensed Mechanic Professional Service

ALL FLUIDS TOP UP
ALL BODY WORK
MUFFLER & TURBOS
FUEL INJECTION SERVICE

FREE OIL CHANGE
With The Purchase Of Rust Proofing & Under Coating For
Car: $99
SUV: $120

Castrol
REGULAR OIL CHANGE
$29.95
CASTROL OIL CHANGE
$39.95
SYNTHETIC OIL CHANGE
$49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR
$149.95

BRAKE JOB PAD & ROTOR
Replacement Guarantee for 50,000 km or 1 year
From
$159
& up

$59.95
MANAGER'S MAINTENANCE COMBO
Rotate tires
Check coolant & hoses
Inspect all brakes
Top up fluids
Inspect tires & wiper blades
FREE OIL CHANGE

TRANSMISSION FLUSH
Starting From...
Imports
$74.95
Radiator Flush
$79.95
Domestic
$149.95

TIMING BELT JOBS
Starting From..
Car $450.00
SUV $550.00
Water Pump Timing Belt All Seals Included with Parts & Labour

Insurance Work Done

*Prices Subject To Change *Above specials expire on June 30, 2014 *Valid with flyer *Cannot be combined with any other offers

விண்வெளியில் கருந்துளை

– R.சீவா –

பூமியில் இருந்துகொண்டு, தலையை உயர்த்தி மேல் நோக்கி நாம் பார்க்கும் போது, இரண்டு விதமான வானங்களைப் பார்க்கின்றோம் என்பது உங்களுக்குத் தெரியுமா? பகலில் நாம் காணும் நீல வானமும், இரவில் நாம் காணும் கருப்பு வானமும் வேறு வேறானவை என்ற உண்மையை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? பலர் இந்த வித்தியாசத்தைத் தங்கள் வாழ்நாளில் புரிந்து கொண்டதே இல்லை.

தலைக்கு மேலிருக்கும் வானம்தானே என்று, அது பற்றிக் கொஞ்சமும் சிந்திக்காமல் அலட்சியமாக விட்டுவிடுகிறோம் நாம். உண்மையைச் சொல்லப் போனால், இரவு வானத்துக்கும், பகல் வானத்துக்கும் இடையே உள்ள வித்தியாசம் மண்ணுக்கும், மலைக்கும் இடையே உள்ள வித்தியாசம்.

ஆங்கிலத்திலும், தமிழிலும் 'Sky' மற்றும் 'வானம்' ஆகிய சொற்களை இரவு, பகல் இரண்டு வானங்களையும் குறிப்பதற்கு, ஒரே சொல்லாகப் பயன்படுத்துகிறோம். ஆனாலும், நாம் பகலில் பார்க்கும் வானம் பூமியிலிருந்து வெறும் 300 கிலோமீட்டர்கள் தூரத்தில் இருக்கிறது. இரவு வானமோ பல லட்சம் ஒளிவருடங்கள் தூரம் வரை செல்கிறது. நம் பூமி, தனக்கென உருவாக்கி வைத்திருக்கும் பாதுகாப்புக் கவசமான அட்மாஸ்பியரில் (Atmosphere), சூரிய ஒளி தெறித்துச் சிதறும் பரப்பையே நாம் 'வானம்' (Sky) என்கிறோம். அந்த நீலநிற வானத்தினூடாக மேலே நம்மால் சூரியனையும், சந்திரனையும், சில கோள்களையும் தவிர வேறு எதையும் பார்க்க முடிவதில்லை. இதெல்லாம் சூரிய ஒளி இருக்கும் வரைதான். சூரிய ஒளி மறைந்து இருட்டானதும் நாம் பார்ப்பது விண்வெளியை (Space). விண்வெளியில் பல ஆயிரம் ஒளிவருடங்களுக்கு அப்பால் உள்ளவற்றைக் கூட, நம் வெற்றுக் கண்களால் பார்க்க முடிகிறது.

நம் கண்களுக்குத் தெரியும் விண்வெளி, முழுமையான அண்டத்தின் (Universe) மிகச் சிறிய ஒரு பகுதிதான். அண்டமென்பது மிகப்பெரியது. கிட்டத்தட்ட 92 பில்லியன் ஒளிவருடங்கள் பரந்து விரிந்திருப்பது. இன்னும் விரிந்து கொண்டே இருப்பது. இங்கு ஒளிவருடம் என்றால் என்ன என்ற கேள்வி சிலருக்கு வரலாம்.

ஒளியானது ஒரு செக்கனில் 3,00,000 கிலோ மீட்டர்கள் தூரத்துக்கு பயணம் செல்லக் கூடியது. அவ்வளவு வேகம். அண்டத்திலேயே மிகை வேகத்துடன் செல்லக் கூடிய ஒன்று ஒளிதான். இது வரை உள்ள அறிவியலின்படி, ஒளியை மிஞ்சி எதுவுமே வேகமாகச் செல்ல முடியாது. சரியாகக் கவனியுங்கள் இந்த ஒளியானது ஒரு நொடிக்கு மூன்று லட்சம் கிலோமீட்டர்கள் செல்லும். அப்படியாயின் இது நிமிடத்துக்கு எவ்வளவு தூரம் செல்லும், மணிக்கு எவ்வளவு தூரம் செல்லும், அப்படியே ஒரு வருடத்துக்கு எவ்வளவு தூரம் செல்லும் என்று பார்க்கும் போது கிடைக்கும் கிலோ மீட்டர்களின் அளவுதான் ஒரு ஒளி வருடம். நீங்களே ஒரு பேனாவை எடுத்துப் பெருக்கிப் பாருங்கள். அப்படி 92 பில்லியன்கள் ஒளிவருடங்கள் தூரத்துக்கு அகண்டிருக்கிறது நம் பேரண்டம். கற்பனையே செய்து பார்க்க முடியாத அளவு இது.

நாம் வாழும் பூமியோ வெறும் 12750 கிலோமீட்டர்கள் அகலமானது. அண்டத்துடன் ஒப்பிடும் போது பூமி ஒன்றுமேயில்லை. உங்கள் வலது கையை நீட்டி, சுட்டுவிரலால் வானை நோக்கி சுட்டிக்காட்டுங்கள். உங்கள் விரல் சுட்டிக்காட்டும் அந்தச் சின்னஞ் சிறிய பகுதியில் மட்டும் பில்லியன் நட்சத்திரங்கள் இருக்கின்றன என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? அண்டம் எவ்வளவு பெரிது என்பது இப்போது புரிகிறதல்லவா? இந்த அண்டத்தில் பூமியைப் போன்ற கோள்கள், சூரியனைப் போன்ற நட்சத்திரங்கள் மட்டுமில்லாமல், வேறு பலவும் இருக்கின்றன.

காலக்ஸிகள் (Galaxies), நெபுலாக்கள் (Nebulas), க்வேஸார்கள் (Quasars), பல்சார்கள் (Pulsars) என்று பல விதமானவை இருக்கின்றன. இதில் ஒன்றுதான் கருந்துளைகள் (Blackholes).

கருந்துளை என்பது பற்றிச் சொன்னபோது, 'நிகழ்வு எல்லை'

(Event Horizon) என்ற கருந்துளையின் நுழைவாயிலைப் பற்றியும் சொல்லியிருந்தேன். இதை வைத்து ஸ்டீபன் ஹாக்கிங்கும், லெனார்ட் சஸ்கிண்டும் நடத்தும் யுத்தம் பற்றியும் சொன்னேன். இனி இவற்றைப் பற்றி விரிவாக, விளக்கமாக நாம் பார்க்கலாம்.

விண்வெளி என்பது நாம் நினைப்பது போல, முப்பரிமாண வடிவத்தில் உள்ள தல்ல. தட்டையானது. அலையில்லாத ஒரு கடலில் நீரின் மேற்பரப்பு எப்படிப் பரந்து விரிந்து காணப்படுகிறதோ, அப்படித்தான் விண்வெளியும் இருக்கும். கடலின் மேற் பரப்பு நீரால் ஆனது போல, விண்வெளியும் மெல்லிய சவ்வு போல, அதாவது ஒரு பலூனின் மென்சவ்வு போலக் காணப்படும். இந்த விண்வெளியின் மேற்பரப்பில் தான், நான் மேலே சொன்ன நட்சத்திரங்கள்.

காலக்ஸிகள், நெபுலாக்கள், க்வேஸார் கள், கருந்துளைகள் என அனைத்தும் இருக்கின்றன. நீரின் மேற்பரப்பில் பூக்களைத் தூவிவிட்டால் எப்படி அந்த மேற்பரப்பில் பூக்கள் மிதந்து கொண்டிருக்குமோ, அப்படி இவையெல்லாம் விண்வெளியில் காணப்படுகின்றன. விண்வெளியில் காணப்படும் இவை சாதாரணமானவை அல்ல. மிகப் பிரமாண்டமானவை. மிகப் பெரிய எடையைக் கொண்டவை. அவற்றின் எடைக்கு ஏற்ப, விண்வெளியின் மேற் பரப்பும் கீழ் நோக்கி அமிழ்ந்திருக்கும்.

ஒரு பலூனை விரல்களால் அழுத்தும் போது ஏற்படும் வட்ட வடிவப் பள்ளம் போல அவை அமிழ்ந்திருக்கும். இப்படித்தான் கருந்துளையும்

விண்வெளியில் அமைந்திருக்கிறது. கருந்துளையானது 'நிகழ்வு எல்லை' (Event Horizon), 'ஒருமை' (Singularity) என்று இரண்டு மிக முக்கிய பகுதிகளைக் கொண்டது.

நிகழ்வு எல்லையை மேல்பகுதியிலும் சிங்குலாரிட்டி என்று சொல் லப்படும் மிகச்சிறிய மையப்பகுதியைக் கீழ்ப்பகுதியாகவும் கொண்டு, ஒரு கூம்பு (Cone) வடிவத்தில் விண்வெளியின் மேற்பரப்பை கீழ்நோக்கி அமிழ்த்திய வாறு கருந்துளை காணப்படும். கருந்துளைக்கு இந்தக் கூம்பு வடிவம் எப்படி வந்தது என்று விளக்குவது கொஞ்சம் சிரமம் என்றாலும், அதையும் நாம் பார்த்துவிட வேண் டும். அதற்கு கருந்துளையாகும் ஒரு நட்சத்திரத்தில் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

விண்வெளியில் நெபுலாக்கள் (Nebula) வாயுக்களையும் (Gas), தூசு களையும் (Dust) அடர்த்தியாகக் கொண்டிருக்கும். இது ஒரு காலக்ஸியின் அளவுக்கு பிர மாண்டமானதாகக் காணப்படும். இந்த வாயுக்களும், தூசுகளும் ஈர்ப்பு விசையினால் ஒன்று சேர்வதால், அங்கு ஒரு குழந்தை நட்சத்திரம் பிறக்கும். குழந்தை நட்சத்திரங்களை சினிமாக்களில் மட்டும் பார்த்த உங்களுக்கு, இதைக் கேட்க கொஞ்சம் ஆச்சரியமாக இருக்கும். இந்தக் குழந்தை நட்சத்திரம் படிப்படியாக வளர்ந்து ஒரு முழு நட்சத்திர மாகிறது. இப்படி லட்சக்கணக்கான நட்சத்திரங்கள் நெபுலாக்களின் மூலம் தினம் தினம் உருவாகிக்கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு நொடியும் விண்வெளியில் நட்சத்திரங்கள் பிறந்து கொண்டே இருக்கின்றன.

இயற்கை என்பது எப்போதும் தனக்குள் ஒரு வட்டத்தை வைத்திருக் கிறது. இந்த வட்டத்தின் மூலம் தான் அது தன் சமநிலையையும் பாது காத்துக் கொண்டுவருகிறது. ஒருபுறம் நட்சத்திரங்கள் பிறந்து கொண்டிருக்க, மறுபுறம் நட்சத்திரங்கள் வயதாகி இறந்து கொண்டிருப்பது நடக்கும். பிறப்பதும் இறப்பதும் மனிதனுக்கு மட்டுமில்லை,

நட்சத்திரங்களுக்கும் இருக்கிறது. அது மட்டுமில்லாமல், ஒரு நட்சத்திரம் இறக்கும்போது, ஏற்படும் பிரமாண்ட வெடிப்பின் மூலம் நெபுலாக்களும் உருவாகின்றன. நட்சத்திரங்கள் நெபுலாக்களில் பிறக்கின்றன. நட்சத்திரங் கள் இறந்து நெபுலாக்களை உருவாக்குகின்றன. இது ஒரு அழகான வட்டம் இலையா? நட்சத்திரங்கள் நெபுலாக்களில் பிறப்பது என்பது ஒரு அழகான நிகழ்வு. அதைத் தெரிந்து கொள்ளும்போது உண்மையில் மகிழ்ச்சியடைவீர்கள். ஆனால் இந்தக் கட்டுரையில் அது பற்றி நான் எழுதப் போவதில்லை. வேறு ஒரு சந்தர்ப்பத்தில் எழுதுகிறேன். ஆனால் நட்சத்திரம் ஒன்று இறப்பது பற்றி இங்கு நான் விவரித்தே ஆகவேண்டும். காரணம் ஒரு நட்சத்திரத்தின் இறப்பின் உபநிகழ்வாகத்தான் கருத்துளை ஒன்றின் பிறப்பும் நடைபெறுகிறது.

விண்வெளியில் முக்கியமாகச் சொல்லக்கூடிய இரண்டு விதமான திடப்பொருட்கள் உண்டு. ஒன்று எரிந்துகொண்டிருக்கும் திடப்பொருள். மற்றது எரியாமல் இருக்கும் திடப்பொருள். எரியாமல் இருப்பவற்றை நாம் கோள்கள் என்கிறோம்.

நம் பூமியும் ஒரு கோள்தான். இவற்றுடன் துணைக்கோள்கள் என்று சொல்லப்படும் சந்திரன்களும் உண்டு. ஆனால் எரிந்து கொண்டிருப்பவற்றை நட்சத்திரம் என்கிறோம். பூமிக்கு மிக அண்மையில் இருக்கும் நட்சத்திரம் நம் சூரியன்தான். சூரியன் ஒரு நட்சத்திரம் என்பதைப் பலர் சிந்திப்பதேயில்லை.

நம் சூரியன், பால் வெளிமண்டலம் (Milkyway Galaxy) என்னும் நட்சத்திரக் கூட்டத்தில் ஒரு நட்சத்திரமாக இருக்கிறது. இந்தப் பால்வெளி மண்டலத்தில் மட்டும் 200 முதல் 400 பில்லியன் நட்சத்திரங்கள் உள்ளன என்று குத்துமதிப்பாகக் கணித்துள்ளனர். எப்படிப் பார்த்தாலும் 300 பில்லியன்களுக்குக் குறையாது. சமீபத்தில் ஜேர்மனில் எடுக்கப்பட்ட கணிப்பின்படி மில்க்கிவே காலக்ஸியைப் போல, 500 பில்லியன் காலக்ஸிகள் அண்டத்தில் இருக்கின்றன. இப்போது சிந்தித்துப் பாருங்கள் அண்டத்தில் மொத்தமாக எத்தனை நட்சத்திரங்கள் இருக்கின்றன என்று. நட்சத்திரங்கள் அனைத்தும் அவற்றின் பருமனைப் பொறுத்து வேறு படுகின்றன.

சூரியன் நம்முடன் தொடர்புபட்டிருப்பதால், ஏனைய நட்சத்திரங்களின் பருமனை சூரியனுடன் ஒப்பிட்டே அளவிடுகின்றனர். நட்சத்திரங்கள் அனைத்துமே என்றாவது ஒருநாள் எரியும் சக்தி தீர்ந்து போகும்போது, இறந்து போகின்றன. அப்படி இறந்து போகும் நட்சத்திரங்கள், அவற்றின் பருமைனைப் பொறுத்து, 'வெள்ளைக் குள்ள நட்சத்திரமாகவோ (White Dwarf), நியூட்ரான் நட்சத்திரமாகவோ (Neutron Star), கருந்துளையாகவோ (Blackhole), பிரமாண்டக் கருந்துளையாகவோ (Supermassive Blackhole) மாறும். சூரியனைப் போல பருமனில் பத்து மடங்குக்கு இருக்கும் நட்சத் திரங்கள் இறக்கும் போது, 'சுப்பர் நோவா' என்னும் நிலையை அடைந்து வெடிப்பதன் மூலம் 'நியூட்ரான் நட்சத்திரங்கள் தோன்றுகின்றன.

ஆனால் சூரியனின் பருமனை விட நூறு மடங்களவில் இருக்கும் நட்சத்திரங்கள் இறக்கும் போது, ஹைப்பர் நோவா என்னும் நிலையை அடைந்து வெடிப்பதால் கருந்துளைகள் தோன்றுகின்றன. சூரியனைப் போல ஆயிரம் மடங்கு எடையுள்ள நட்சத்திரங்கள் வெடிக்கும் போது, பிரமாண்டக் கருந்துளைகள் உருவாகின்றன. இப்படியொரு பிரமாண்டமான கருந்துளைதான், மில்க்கிவே காலக்ஸியின் நடுவிலும் உள்ளது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். சொல்லப் போனால், ஒவ்வொரு காலக்ஸியும் ஒரு பிரமாண்டமான கருந்துளையை மையமாகக் கொண்டு இருக்கும் என் கிறார்கள்.

ஒரு நட்சத்திரம் ஏன் இறக்கிறது. அது இறக்கும்போது சுப்பர்னோவாவாகிப் பெரிதாகி, திடீரென ஏன் வெடிக்கிறது என்பது நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். அது தெரியும் பட்சத்தில்தான், ஒரு கருந்துளையின் நிகழ்வு எல்லையில் என்ன நடைபெறுகிறது என்பதையும், கருந்துளையின் ஈர்ப்பு சக்தியால் ஒளிகூடத் தப்ப முடியாமல் எப்படி உள்ளே இழுக்கப்படுகிறது என்பதையும், இந்தக் கட்டுரையின் முதலாம் பகுதியின் இறுதியில் நாம் விட்டுச் சென்ற கேள்விகளுக்கான பதில்களையும் விளங்கிக் கொள்ள முடியும்.

கருந்துளைகளைப் பற்றி ஏதோ ஒரு அறிவியல் செய்தியாக நினைத்து நாம் அறிந்து கொள்ள நினைக்கலாம். ஆனால், கருந்துளை தான் நாங்கள், நாங்கள்தான் கருந்துளை என்னும் நிலைமைக்கு நம்மை நவீன அறிவியல் கொண்டுவந்து விட்டிருக்கிறது. நம் வாழ்வுக்கும் கருந்துளைக்கும் நிறையவே சம்பந்தம் இருக்கிறது என்கிறார்கள். அது என்ன சம்பந்தம் என்பதைப் படிப்படியாக நாம் அறிந்து கொள்வோம்.

வாசகர் மடல்...

'தளிர்' வாசகர்களின் அன்பு வரிகள் ...

பிரதம ஆசிரியருக்கு ....

புலம் பெயர்ந்த நாட்டில், தனித்துவமான முறையில் தமிழ் வளர்க்கும் தளிரின் சேவை பாராட்டத்தக்கது. மற்றைய இதழ்களைப் போலல்லாது, திரைப்படச் செய்திகளைத் தவிர்த்து, ஆக்கபூர்வமான கட்டுரைகளை வழங்கும் தளிர் என்றும் தழைத்தோங்க வாழ்த்துகிறேன்.

சின்னத்துரை காண்டீபன்

பிரதம ஆசிரியருக்கு ....

நான் மொன்றியலில் வசிக்கின்றேன். எனது நன்பன் வீட்டுக்கு போனபோது தளிர் சஞ்சிகையை பார்த்து ஆச்சரியப்பட்டேன். பின்னர் அதனை கையோடு ஏடுத்து வந்துவிட்டேன் எனக்கு தொடர்ந்து தளிர் அனுப்பி வையுங்கள் எனது முகவரியும் தொலைபேசி இலக்கத்தையும் இத்துடன் அனுப்புகிறேன்.

நன்றி.

ம.பத்மநாதன் (மொன்றியல்)

தளிருக்கு...

ஜனரஞ்சகக் கட்டுரைகளுடன், வீடுகள் தோறும் வரக்கூடிய முக்கியமான பிரச்சினைகளை மேம்போக்காகவும் அதேவேளை அழுத்தமாகவும் தரும் வாழ்க்கைக்குத் தேவையான கட்டுரைகளும் தளிரில் பிரசுரமாவது வரவேற்கத்தக்கது. அடுத்த இதழுக்காகக் காத்திருக்கிறேன்.

மகிழ்தினி ராஜகோபால்

தளிர் வளர வாழ்த்துகிறேன்.

துளிர் விடும் தளிருக்கு இன்று வாழ்த்துகிறேன்.
என் ஆர்வத்தால் ஆதங்கம் ஏதுமின்றி...
அடி உரி அள்ளி வாழ்த்துகிறேன் தளிருக்கு.
பூமாலை உமக்கு வேண்டாம் .. ஆனால்
நான் உன் புகழ் பாடி வாழ்த்துகிறேன்.
பொன்னாடை உனக்கு வேண்டாம் .. ஆனால்
நான் உன்னை பொன்செல்த்தூவி இந்த வையகம்
போற்ற வாழ்த்துகிறேன்.
தரனியெங்கும் விலை கொடுத்து தளிர் பறிக்க
விலை மதிப்பேத்தி அலையாய் பாய்ந்து தளிர்
வாங்க வாழ்த்துகிறேன்.

கு.சிவப்பிரியா (றிச்மன் கில்)

தளிருக்கு ...

தடைகளின்றி தமிழில் தொடர்ந்து வரவேண்டுமென தளிரை வாழ்த்துகிறேன்.

அனு, (ஸ்காபுரோ லோறன்ஸ் அவனியு.)

பிரதம ஆசிரியருக்கு ....

தளிரில் குறிப்பிட்ட ஓரிருவரது சிறுகதைகள்தான் பிரசுரமாகின்றன. கனடாவில் தமிழ்ச் சிறுகதைகள் எழுதக்கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களது படைப்புக்களையும் தளிர் இணைத்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான், தளிர் எமக்கானது என்ற உணர்வு ஏற்படும்.

ச.வித்யாகரன்.

தளிருக்கு ...

கனடிய விழாக்கள், நிகழ்வுகள் பற்றிய பதிவுகள் தளிரில் மிகக் குறைவாகவே இருக்கின்றன. உலகில் முக்கியத்துவம் பெறும் நிகழ்வுகளை நாம் இணையதளத்திலும் காணலாம். ஆனால், கனடிய நிகழ்வுகள், கனடாவில் வசிக்கும் அனைவருக்கும் போய்ச் சேர்வதில்லை. எனவே, கனடிய நிகழ்வுகளுக்கு தளிர் முக்கியத்துவம் கொடுப்பது நல்லது.

யாழ். சுமந்திரன்

தளிருக்கு ஒருசில வரிகள்.....

தளிரின் அழகு பொன்னழகு
தமிழுக்கு அது தனியழகு
பசுமையின் பேர் அழகு
பல் சுவையின் உரியழகு
தரத்தின் நிறையழகு
தன்மானத்தின் பெருமையழகு.

(மட்டுநகர்) பி. தாரணி
பிரம்ரன்

HOMELIFE/FUTURE REALTY INC., BROKERAGE

HOMELIFE HIGHER STANDARDS

Rajkumar Rasiah
Salesperson
HOMELIFE/FUTURE REALTY INC., BROKERAGE
Dir Line: Rajkumar (416) 707-1674
Off : 905-201-9977
Fax: 905-201-9229
7 Eastvale Drive Unit 205, Markham, ON L3S4N8

OPTIMART

கண்பரிசோதனை | EYE EXAM

தமிழ் மக்களின் நன்மை கருதி தமிழர் நிர்வாகத்தில் மூன்று இடங்களில் சேவையாற்றுகிறார்கள்

(416) 266-3389
3150 Eglington Ave. E. #6
(Eglinton & Markham)
Scarborough, ON. M1J 2H2

(416) 297-9903
3351 Markham Road
(Markham & Steeles)
Toronto, ON. M1X 0A6

(416) 690-4649
294 Main St. (@ Danforth)
#2, Professional Bldg.,
Toroto, ON. M4C 4X5

பணைத் தமிழ்ப் பெண்களின் தேசப் பற்று...

- புஷ்பா கீரிஸ்ரி -

ஒரு தாய் அரும்பெரும் புதல்வனைப் பெற்றுத் தருபவள்.. அவனை தீறமையுடன், போர்க்கலைகளும் கற்றுத் தந்து வளர்ப்பது ஒரு தந்தை கடமையாகும்.. அவ்வீரப் புதல்வனுக்கு வேண்டிய ஆயுதங்களைச் செய்து தந்து நாடு காக்க வைப்பது, தாயக ஆயுதம் செய்வோரின் கடமையாகும்.. இவ்வாறு போர்க்கலைகளையும் ஆயுதங்களையும் பெற்ற வீரர், "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வாயினும் நனி சீறந்தனவே" என்று தம் கடமை எண்ணி, பிறந்த நாடு மகிழ, பெற்ற தாய் பூரிக்க, களத்தில் கருஞ்சமர் புரிந்து, எதிரிகளை வீழ்த்தி, வெற்றி வாகை சூடி, அம்மண்ணைக் காப்பது, காளையரின் கடமை..

இவ்வாறு களிறுகளை வீழ்த்தி, வெற்றி வாகை சூடி மீண்டு வரும் வீரனுக்கு பெரும் பட்டமும் பரிசிலும் கொடுத்து, புகழ்வித்து, கௌரவித்தல், அந்நாட்டு மன்னனின் தலையாய கடமையாகும்... இந்தக் கருத்தினைப் பாடி வழிகாட்டுகின்றார், பொன்முடியார்...

ஈன்று புறந்தருந தென்றலைக் கடனே
சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறம் 312)

இத்தகைய வீரனைப் பெற்ற தாய் போற்றுவாள் என்றும் அவன் பிறந்த செய்தி கேட்டதை விட தன் மகனை வீரன் எனக்கேட்ட தாய் பெரிதும் மகிழ்வாள்... என்கிறார் வள்ளுவர்

"ஈன்ற பொழுதில் பெருதுவக்கும் தன் மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்"

இக்குறள் பெண்களின் தேசப் பற்றிற்குச் சான்று கூறுகின்றது..

அன்றைய சமுதாயத்தில், குழந்தைப் பருவத்தில் இருந்தே வீரமும் தேசிய உணர்வும், தாய்ப்பாலோடு சேர்த்து ஊட்டப் பட்டுள்ளது... குழந்தைகள் வீர உணர்வுடன் வளர்க்கப் படவேண்டும் என்பதை எண்ணி. அன்றைய சமூகம், குழந்தைகட்கு வீரப் போர்முறைகளை காட்டி வளர்த்துள்ளனர்..

இன்று அறிவியல் கூற்றின் படி, ஒரு குழந்தை எதனைப் பார்த்துப் பழகிப் படிக்கின்றானோ, அதுவாகவே அவன் மாறுகின்றான் என்று கருத்துள்ளதை நாம் அறிவோம்..

அதன்படி, அன்று அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் மன்னன் தன் மகன் பிறந்த செய்தி கேட்டு அவனைப் பார்க்கச் செல்கின்றான்..

பொகுட்டெழினி, பிறந்த போது, கையில் ஆயுதத்துடன், கால்களில் வீரக்கழல் பூட்டி, வீரம் செறிந்த தன் கொண்டையிலும் கழுத்திலும் வேங்கை, வெட்சிப் பூச்சூடி, பெரிய மதங்கொண்ட யானையைப் போல, எதிரிகளை எண்ணும் போது சிவக்கும் கண்களுடன், முதல் முதலில் பொகுட்டெழினியைப் பார்க்கச் செல்கிறான்..இது தமிழர்களின் வீரப் பண்பாட்டின் பெரும் அடையாளமாகும்.

தந்தை அதியமான் நெடுமான் அஞ்சி, குழந்தைக்கு வீரமூட்டும் முகமாக அவனைக் காணச் சென்றதனை, ஔவையார், ஓர் அழகு பாடல் மூலம் பாடுகின்றார்..

" கையது வேலே காலன புனைகழல்
மெய்யது வியரே மிடற்றது பசும்புண்
வட்கர் போக்கி வளரீனம் போந்தை
உச்சிக் கொண்ட வூச் வெண்டோ கு
வெச்சி மாமலர் வேங்கையொகு வீரைஇச்
சுரிஞ்சும் பத்தை பொலியச் சூடி
வரியம் பொருத வயக்களிறு போல
இன்னு மாறாது சின்னே யன்னோ
உய்ந்தன ரல்லரிவ நுடற்றி யோரே
செறுவர் நோக்கிய கண்டன்
சீறுவனை நோக்கியுஞ் சீவப்பா னாவே (புறம் 100)

இன்னும் தொடரும்..

சிரி... சிரி... சிரி...

"அப்பா... அடிக்கடி பக்கத்து வீட்டு பையனோட படிப்ப கம்பேர் பண்ணி பேசுவியே... இப்ப பார்த்தியா அவன் 480 மார்க், நான் 490 மார்க்..."

"கெட்டவனே... அவன் 10ம் வகுப்பு... நீ 12ம் வகுப்பு!"

"உங்க மனைவி புதுசா ஒரு மத்து, கரண்டி வாங்கினதுக்கு நீங்க ஏன் பயப்படுறீங்க?"

"ஆயுத குவியல் செஞ்சா பயம் வராதா?"

"ஜெயிலேர்ந்து வந்த தலைவரிடம் குழந்தைக்குப் பேர் வைக்க சொல்லியிருக்க கூடாது!"

"ஏன் என்ன ஆச்சு?"

"புழவேந்தினு வேச்சிட்டார்!"

டாக்டர் , 100

வயசு வரைவாழனும்னா என்னசெய்யணும்?

99 வயசு வரை சாகாம இருக்கணும்

"உங்க ஒரு கிட்னியை எடுத்தாத்தான் பிழைக்கலாம்!"

"நீங்களா... நானா டாக்டர்?"

"டாக்டர் நான் பிழைச்சிக்குவேனா?"

"நான் தான் உனக்கு ஆபரேஷன் வேண்டாம்னு சொல்லிட்டேனில அப்புறமென்ன சந்தேகம்... கட்டாயம் பிழைச்சிக்குவே..."

"தலைவரே! உம்மை குண்டர் சட்டத்தில் உள்ளே போடச் போவதாக சொல்கிறார்கள்!"

"சும்மா இருய்யா! நான் என்ன குண்டாவா இருக்கேன்! 50 கிலோதான் இருக்கேன்!"



"நீங்க கோவிலுக்குப் பாத யாத்திரை போவதற்கு பேங்குல ஏன் லோன் கேட்குறீங்க?"

"கால்நடைக்கு லோன் தருவதாகச் சொன்னாங்களே"

"பாம்பை வச்சு ஒரு படம் எடுத்தீங்களே என்னாச்சு சார்?"

"பெட்டிக்குள்ளேயே முடங்கிக் கிடக்கு சார்!"



"அப்பா உங்க கல்யாண சிடி யை பார்க்க யாருக்கும் கொடுக்காதீங்க!"

"ஏண்டா?"

"பார்த்தவங்க எல்லாம் ஒரு திகில் படம் பார்த்த மாதிரி இருக்குதுன்னு சொல்லுறாங்க!"

தளிரில் இதுவரை முன்அட்டையில் இடம்பிடித்தவர்கள்

"முதலாவது தளிர் அட்டைப் படத்தில் இடம்பிடித்தவர் பேபி S.பத்மஜன்"

தை மாத தளிர் 2014 முன் அட்டைக்குரியவர் செல்வி S. ஜதூரி. இவர், 2013ம் ஆண்டு தமிழ் அழகியாக ரொறொண்டோவில் முதல் இடத்தைப் பிடித்துக்கொண்டவர்.

2014 சித்திரை தளிர் முன் அட்டையில் இடம்பிடித்தவர் செல்வி S.V.கீர்த்தியா கனடிய மண்ணில் தமிழ் இசைக்குயிலாய் வலம் வரும் பாடகி.

பூந்தளிரில் இடம்பிடித்தவர் S. குகேசன்

AGSP 2014 மேலதிக விபரங்களுக்கு :

25 Agnes Street,
Unit #1,Mississauga,ON L5B 3X7
TEL : 905 270 6921

2376 Eglington Ave E,
Scarborough, ON M1K 2P3
TEL : 416 751 1364

3852 Finch Ave E,
Scarborough, ON M1T 3T9
TEL : 416 335 1553

2260 Bovaird dr E,
Brampton, ON L6R 3J5
TEL : 905 789 6699

4400 Sheppard Ave E,
Unit #1
Scarborough, ON, M1S 5J5
TEL : 416 335 3366

3351 Markham Rd,
Scarborough, ON M1X 0A6
TEL : 416 292 6699

117-5215 Finch Ave,
Scarborough ON M1S 0C2
Tel : 416 754 3100

3001 Islington Ave,
North york, ON M9L 2K9
TEL : 416 744 6177

HOTLINE : 416-620-0008

AMBIKA JEWELLERS

AMBIKA
JEWELLERS

அம்பிகாவின்
தங்க நகை
சேமிப்புத் திட்டம்

AGSP 2014

30 வருடங்களாக தங்க நகை வியாபாரத்தில்
வாடிக்கையாளர்களின் நன்மதிப்பை பெற்ற
அம்பிகா ஜீவலர்ஸ் அறிமுகப்படுத்தும் புத்தம் புதிய திட்டம்

" AGSP 2014 "

அம்பிகா ஜீவலர்ஸின் அரிமான வாடிக்கையாளர்களின்
நலனை கருத்தில் கொண்டு அறிமுகப்படுத்தும்
இப்புதிய திட்டத்தின் மூலம் வாராவாரம்
ஒரு அதிர்ஷ்டசாலி தெரிவு செய்யப்படுவர்.
அதுமட்டுமன்றி வருட முடிவில்
AGSP 2014 மூலம் $ 10,000 பெறுமதியான
பரிசுகள் மற்றும் ஆறுதல் பரிசுகளையும் வெல்லும்
வாய்ப்பு காத்திருக்கின்றது. ஜனவரி மாதம்
ஆரம்பிக்கப்படவிருக்கும் AGSP 2014 சீட்டிழுப்பு
கலாபம் தொலைக்காட்சியில் (OMNI TV ~ கலாபம்)
ஒளிபரப்பப்படும். இந்த சீட்டிழுப்பு நிகழ்வு சிகரம்
இணைய வானொலியில் நேரடியாக ஒலிபரப்பப்படும்.

வாராவாரம்
ஒரு
அதிர்ஷ்டசாலி

மேலதிக தொடர்புகளுக்கு 416-620-0008

7+1 LOCATIONS TO SERVE YOU BETTER

குழந்தைக் கனவை சாத்தியமாக்கி வரும் நவீன மகப்பேறு சிகிச்சை

Dr. சாமுண்டி சங்கரி

பொருளாதாரத்தில் எந்த நிலையில் இருந்தாலும், இல்லறத்தைத் தொடங்கும் தம்பதிகளின் முதற்கனவு குழந்தைப் பெற்றுக்கொள்வதே. இந்த சமுதாயத்தில் உடல் ரீதியாக ஆரோக்கியமாக வாழ்வதையும், உள ரீதியாக ஆரோக்கியமாக வாழ்வதையும், பருவமடைந்த ஓர் ஆணும், பெண்ணும் நிரூபிப்பதற்கு வழங்கப்படும் ஓர் அரியவாய்ப்பு குழந்தைப் பெற்றுக்கொள்வது. இதில் வெற்றிப்பெறுகிறவர்களின் எண்ணிக்கை, வேகமான வாழ்க்கை நடைமுறை மாற்றத்தால் தொடர்ந்து சரிந்து வருகிறது. இதனை உணர்ந்த மருத்துவத்துறை, இதனை தடுத்து, ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கும் வகையில் ஏராளமான ஆய்வுகளை நடத்தி புதிய புதிய உத்திகளை இப்பிரிவில் அறிமுகப்படுத்தி வருகிறது. இது குறித்தும், குழந்தையின்மைக்கான காரணங்கள் குறித்தும் இத்துறையில் நாற்பதாண்டுகளுக்கும் மேலான அனுபவம் பெற்றவரும், சென்னையில் இயங்கி வரும் சிருஷ்டி மருத்துவமனையின் நிர்வாக இயக்குநருமான டொக்டர் திருமதி. சாமுண்டி சங்கரியை சந்தித்து கேட்டோம்.

இன்றைய காலகட்டத்தில் மலட்டுத்தன்மையால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறதாமே. உண்மையா?

மனிதர்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு உடலியல் விதிகள், இயல்புகள் இருக்கின்றன. குழந்தைப் பருவத்திலிருந்து அந்த விதிகள், இயல்புகள் மனிதரிடத்தில் இயங்குகின்றன. ஆயினும், பல்வேறு காரணங்களால், சிலருக்கு மட்டும் இந்த இயல்புகளில் ஏதேனும் குளறுபடிகள் தோன்றுகின்றன. இவைதான் மனிதரிடத்தில் நோய்களாகப் பரிணமிக்கின்றது. நீங்கள் கூறும் மலட்டுத்தன்மையும் அவ்வாறானதே. அந்த அடிப்படையில், உடலியல் இயலாமை காரணமாக ஒருவரால் இனப்பெருக்கம் செய்ய முடியாத நிலை தோன்றுமாயின், அதைத்தான் மலட்டுத் தன்மை என்கிறோம். அண்மையில் செய்யப்பட்ட மருத்துவ கணக்காய்வின்படி, திருமணமாகி இரண்டு ஆண்டுகளில் குழந்தைப் பேறுக்காக முயற்சி செய்யும் தம்பதியரில் ஏழு தம்பதியரில் ஒரு தம்பதியர் என்ற விகிதத்தில் குழந்தைப் பேறில் தடைகளையும் சிரமங்களையும் எதிர்கொள்கின்றனர்.

இருபாலாரிடமும் மலட்டுத்தன்மை தோன்றுவது ஏன்?

மலட்டுத்தன்மை தோன்ற பல காரணங்கள் இருக்கின்றன. ஆண்–பெண் இருபாலாரிடமும் இவை வேறுபடுகின்றன. குழந்தைப்பேற்றைப் பொறுத்த வரையில் ஆண்களுடன் ஒப்பிடும்போது, பெண்களுக்கு வயது ஒரு பெரும் தடைக்கல்லாக விளங்குகிறது. சில வயது முதிர்ந்த பெண்கள் கருவைச் சுமக்கும் பாக்கியம் பெற்றாலும், உடல் தொடர்ந்தும் ஒத்துழையாமையால் கருச்சிதைவு ஏற்பட்டு, அந்தக் கருவைக் குழந்தையாகக் கையில் ஏந்தும் சந்தர்ப்பத்தை இழந்துவிடுகிறார்கள். சரியான மருத்துவ ஆலோசனை பெற்று பயன்படுத்தப்படும் மருந்துகள், பல்வேறு வகையிலும் உடலுக்குள் சேரும் இரசாயனச் சேர்மானங்கள், புகைத்தல் போன்ற காரணிகள் மலட்டுத்தன்மையை உருவாக்கும் முக்கிய காரணிகளாகக் கருதப்படுகின்றன. இவை தவிரவும் வயதுக்கேற்ற உடல் எடை இல்லாமை அல்லது அதிக உடல் எடை என்பனவற்றையும் பெண்களிடம் மலட்டுத்தன்மையை உண்டாக்கும் காரணிகளாகச் சொல்ல முடியும்.

ஒரு பெண் கருவைச் சுமக்க விரும்பினால் சில முக்கியமான விடயங்கள் நடைபெறவேண்டும். கருப்பையில் இருந்து கரு முட்டை வெளியாகி, உயிரோடு இருக்கும் நேரத்துக்குள் உடலுறவு கொள்ள வேண்டும். கரு முட்டையானது அதன் பொது இயல்புகளைக் கொண்டு இயங்கவேண்டும். பெண்ணின் சுரப்பிகள் சமமாக இயங்கவேண்டும். சில பெண்களிடத்தில் மேற்கூறப்பட்ட காரணிகளில் பாதிப்புகள் இருக்கலாம். கருமுட்டைகள் முதிராமல் இருக்கலாம். சரியான நேரத்துக்கு கரு முட்டை வெளிவராது இருக்கலாம். அல்லது என்டோமெட்ரியோஸிஸ் எனப்படும் கருக்குழாய் பாதிப்புகள் காணப்படலாம். இது போன்ற சில காரணிகள்தான் பெரும்பான்மையான பெண்களின் மலட்டுத்தன்மைக்கு முக்கிய காரணங்களாக விளங்குகின்றன. தான் இன்னமும் கருவுறவில்லையே எனத் தவிக்கும் ஒரு பெண்ணிடம் காணப்படும் மன அழுத்தம், ஒரு இதய நோயாளியிடம் காணப்படக்கூடிய மன அழுத்தத்துக்குச் சமமானது. காரணம், பெரும்பாலான கலாச்சாரங்களில், மலட்டுத்தன்மை என்பது பெண்களுக்கு மட்டுமேயான ஒரு தனி அடையாளமாக விழுந்து விடுவதுதான்.

ஆண்களைப் பொறுத்தவரையில், அவர்கள் உடலில் இருந்து வெளியேறும் விந்தில் காணப்படும் உயிரணுக்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருத்தல், போதிய எண்ணிக்கை இருந்தாலும் அவை அசையும் தன்மையை இழந்திருத்தல் என்பவற்றை அவர்களது மலட்டுத்தன்மைக்குக் காரணமாகச் சொல்லலாம்.

இவையனைத்துக்கும் மேலாக, சில மனோவியல் காரணங்களும் மலட்டுத்தன்மைக்குக் காரணமாயிருக்கின்றன. குழந்தைப் பேறு தள்ளிப்போகின்றதே என்ற ஏக்கம், தம்பதியரில் ஒருவருக்கோ அல்லது இருவருக்குமோ தாம்பத்திய உறவில் ஒரு சலிப்பை ஏற்படுத்தலாம். அல்லது மலட்டுத்தன்மை குறித்த மருத்துவப் பரிசோதனைக்குத் தம்மை உட்படுத்திக்கொள்வதில் தம்பதியரிடையே ஏற்படும் முரண்பாடுகளும் மன உளைச்சல்களும் மலட்டுத்தன்மைக்குக் காரணமாகின்றன. திருமணமான ஆணிடமோ, பெண்ணிடமோ அல்லது இருவரிடமுமோ அவர்களது இனவிருத்திப் பண்பில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்தும் இந்தக் குறைபாடுகளில் அனேகமானவற்றை இன்றைய நவீன மருத்துவ விஞ்ஞானத்தினால் சந்தேகமே இல்லாமல் நிவர்த்தி செய்துவிடலாம்.

செயன்முறைக் கருத்தரிப்பு என்பது என்ன?

இயற்கையில் கருத்தரிக்கும் வாய்ப்புகளை இழந்தவர்களுக்காகவே நவீன மருத்துவ விஞ்ஞானம் அஸிஸ்டட் ரீப்ரொடக்டிவ் டெக்னோலஜி (ஏ.ஆர்.டி. – ART) எனும் செயன்முறைக் கருத்தரிப்பு முறையை அறிமுகப்படுத்தியிருக்கிறது. பொதுவாகச் சொல்வதானால், ஒரு பெண்ணின் கருமுட்டை வெளியே எடுக்கப்பட்டு, விந்தணுக்களுடன் சேர்க்கப்பட்டு, எம்ப்ரியோஸ் எனப்படும் கருக்கூட்டல் செய்யப்பட்ட சினையை மீண்டும் அந்தப் பெண்ணின் கர்ப்பப்பையினுள்ளேயே வைத்து வளர்த்தெடுத்துப் பிரசவிக்க வைப்பதே செயன்முறைக் கருத்தரிப்பு எனப்படுகிறது. இந்த ஏ.ஆர்.டி.யின் கீழ் ஒரு சில செயன்முறைகள் இருக்கின்றன. தம்பதியரிடம் காணப்படும் குறைகளைப் பொறுத்து, அவர்களுக்குப் பொருத்தமான முறையில் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

இதிலுள்ள விடயங்களை விரிவாக விளக்குங்களேன்?

முதலாவது இன் விட்ரோ ஃபெர்டிலைசேஷன் (In Vitro Fertilization). இதைச் சுருக்கமாக ஐ.வி.எப். என்று அழைப்பார்கள். இந்தச் செற்கூட்டம், உடலுக்கு வெளியே நிகழும் கருக்கட்டலைக் குறிக்கிறது. செயன்முறைக் கருத்தரிப்பு முறைகளில் மிகுந்த பயனுள்ள, திருப்திகரமான, சாதகமான முடிவுகளைத் தரும் முறை இந்த ஐ.வி.எஃப்.தான். பெண்ணின் பலோப்பியன் குழாயில் அடைப்புகள் இருந்தாலோ, ஆணின் விந்தில் குறைந்தளவு உயிரணுக்கள் இருந்தாலோ ஐ.வி.எஃப்.பின் மூலமாக அந்தக் குறைகளை நிவர்த்தி செய்யலாம். இதன்போது, சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு நாம் சில மருந்துகளைக் கொடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட கருமுட்டைகளை வெளியாக்கச் செய்வோம். அந்த முட்டைகள் சினையாக ஏற்ற காலத்தை அடைந்ததும் அவற்றை அந்தப் பெண்ணின் உடலில் இருந்து வெளியெடுப்போம். வெளியெடுக்கப்பட்ட அந்த முட்டைகள், ஆணிடம் இருந்து எடுக்கப்பட்ட உயிரணுக்களுடன் ஆராய்ச்சிக் கூடத்தில் ஒரு சிறு தட்டில் இடப்பட்டு கருக்கட்டலுக்காக மூன்று முதல் ஐந்து நாட்களுக்கு வைக்கப்படும். அதன்பின், கருக்கூட்டிய சினையில் ஆரோக்கியமானதொன்றைத் தெரிவு செய்து அதைப் பெண்ணின் கருப்பையினுள் மீள வைத்துவிடுவோம்.

அடுத்து, இன்ட்ராஸிடோபிளாஸ்மிக் ஸ்பெர்ம் இன்ஜெக்ஷன் – சுருக்கமாக இக்ஸி (Intracytoplasmic Sperm Injection) எனப்படும் சிகிச்சை. பொதுவாக, ஆணின் விந்தணுவில் பலத்த குறைபாடுகள் இருக்கும்பட்சத்திலும், ஐ.வி.எஃப். சிகிச்சையில் தோல்வி அடைந்தவர்களுக்கும், வயது கூடிய தம்பதியினருக்கும் இந்த சிகிச்சையே வழங்கப்படும். இக்ஸியில் ஆணின் ஆரோக்கியமான ஒரு உயிரணுவை ஊசி மூலமாக, வெளியே எடுக்கப்பட்ட பெண்ணின் முதிர்ந்த கருமுட்டையில் நேரடியாகச் செலுத்துவோம். அதன்பின் கருக்கட்டப்பட்ட அந்தச் சினை பெண்ணின் கருப்பையினுள் வைக்கப்படும்.

செயன்முறை கருத்தரிப்பு சிகிச்சை முறையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் நவீன சிகிச்சைகள் என்னென்ன?

தம்பதிகளுக்கு தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று முறைகளுக்கு மேல் கரு தங்காமல் இயற்கையாகவே கலைந்துவிட்டால், ஆணின் உயிரணுவை எடுத்து, பரிசோதித்து, எதனால் கரு கலைகிறது என்ற காரணத்தை கண்டறியும் நவீன சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதேப் போல் ஹீமோபீலியா என்ற இரத்த உறைதல் பிரச்சனையுள்ள மரபணுக்களை ஆண் அல்லது பெண் மூலம் கண்டறிந்து, அதற்கு மாற்றான சிகிச்சையை செய்துகொள்ளவும் புதிய சிகிச்சை கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் ஊனமில்லாத ஆரோக்கியமான குழந்தைகளை பிரசவிப்பதற்கான கூறுகளையும் கண்டறிய முடியும். உயிரணுக்களின் எண்ணிக்கை பத்து தான் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதையும் தற்போது இம்சி என்ற சிகிச்சை முறையை பயன்படுத்தி, அதில் ஆரோக்கியமாக இருக்கும் ஒரேயொரு உயிரணுவைத் தெரிவு செய்து, அதன் மூலமாக மகப்பேறை உறுதிச் செய்ய இயலும். இம்முறையில் உயிரணுக்களிலுள்ள செல்கள் ஆறாயிரம் முறை பெரிதாக்கப்பட்டு, அதன் வீரியம் மற்றும் இங்கு தன்மை சோதிக்கப்படுகிறது. அதேப் பெண்களின் கரு முட்டையையும் ஸ்பின்டில் வ்யூ எனப்படும் பரிசோதனை மூலம் அதன் தரம் மற்றும் உறுதி குறித்து கண்டறியவும் புதிய சிகிச்சை முறை அறிமுகமாகியிருக்கிறது.

உயிரணுக்களே இல்லை என்று உறுதி செய்வதில் சில மருத்துவமனைகளே துல்லியமான முறையிலான பரிசோதனைகளை மேற்கொள்கிறது. அதனால் உயிரணுக்களே இல்லை என்று தரப்படும் பொதுவான மருத்துவ அறிக்கையை, இத்துறை சாந்த மருத்துவ நிபுணர்களிடம் காண்பித்து, ஆலோசனை செய்து, மறு பரிசோதனை மூலம் உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது. மேலும் எங்களது மருத்துவமனையில் உயிரணுக்களை உற்பத்தி

செய்வதில் பங்கு வகிக்கும் ஹார்மோன்களின் தரம் மற்றும் அதன் செயல்பாடு குறித்த பரிசோதனையையும் செய்கிறோம். இதன் மூலம் உயிரணுக்களின் உற்பத்தியில் ஏற்பட்ட சிக்கல்களுக்காக மூல மருத்துவ காரணங்களை கண்டறிந்து, அதற்கான நிவாரணத்தையும் வழங்குகிறோம். அதே தருணத்தில் உயிரணுக்கள் இருந்தும் மகப்பேறு நடைபெறவில்லை என்றால், அவை எங்கு மறைந்திருக்கின்றன என்பதையும், அதனால் அவை செயல்படாமல் இருக்கின்றன என்பதையும் கண்டறிய பீஸா, மீஸா மற்றும் டீஸா என்ற மூன்று வகையான தொழில் நுட்பத்தை பயன்படுத்துகிறோம்.

ஆண்களும், பெண்களும் குழந்தை பெறும் வயதை நாற்பது வயதைக் கடந்த பின்னரே வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள். இந்த எண்ணப் போக்கு ஆரோக்கியமானதா?

வயது ஆக ஆக கருமுட்டையின் வீரியமும், உயிரணுக்களின் வீரியமும் குறைவதற்கான வாய்ப்புள்ளது. முப்பந்தைந்து வயதைக் கடந்த பெண்களின் கருமுட்டையின் மேற்சுவர் இயல்பாக இல்லாமல் முதிர்ச்சியடைந்து தடித்துவிடுகிறது. இதனால் உயிரணுக்கள் உள்ளேச் செல்லமுடியாத நிலை உருவாகிறது. இவர்களுக்கு நாங்கள் லேசர் சிகிச்சை மூலம் கருமுட்டையின் மேற்சுவரின் தடிமனை இயல்பாக்கிறோம். இதனைத் தொடர்ந்து உயிரணுக்கள் இயல்பாக இயங்கும் ஒரு சூழலை உருவாக்குகிறோம். எனவே இளம் வயதில் குழந்தைப்பெற்றுக்கொள்வதையே நாங்கள் பரிந்துரை செய்கிறோம்.

பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப் பை மற்றும் கரு முட்டை தொடர்பான சிக்கலுக்கு லேப்ராஸ்கோப்பிக் சிகிச்சை முறையில் தீர்வு காண இயலும் என்கிறார்களே. அதன் முழு விளக்கத்தையும் சொல்லுங்களேன்?

கர்ப்பப் பை, கரு முட்டை சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கும் மட்டுமல்ல குழந்தைபேறில்லாத பெண்களுக்கும் அதற்கான காரணத்தை கண்டறியவும் இந்த லேப்ராஸ்கோப்பிக் சிகிச்சை முறை பயன்படுகிறது. இன்றைய சூழலில் பெண்களும் பணிக்கு சென்று வருவாய் ஈட்டியாக வேண்டிய கட்டாய நிலை இருப்பதை காண்கிறோம். இதனால் பணிபுரியும் நிறுவனத்தில் பிரவசத்திற்கென அதிக நாள்களுக்கு விடுமுறை எடுக்க இயலாது. அத்துடன் கூட்டுக் குடும்ப முறையும் இல்லாததால், வீட்டிலும் அதிக நாட்கள் ஓய்வு எடுக்க இயலாத சூழலே நீடிக்கிறது. மேலும் மருத்துவ படுக்கை கட்டணம் கூடுதலாக இருப்பதால் அதிக நாள்கள் மருத்துவமனையில் இருப்பதும் சாத்தியமற்றது. இதற்கு மாற்றாக மருத்துவ முறை அறிமுகப்படுத்திய சிகிச்சை முறை தான் லேப்ராஸ்கோப்பிக் சிகிச்சை. இதன் மூலம் சிகிச்சை பெற்றவர்கள் விரைவில் எழுந்து நடமாட இயலுகிறது. அதாவது குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்காக நடத்தப்படும் குழாய் பரிசோதனை மற்றும் பொதுவாக மேற்கொள்ளப்படும் கரு முட்டைப் பை கட்டிகள், குடும்ப கட்டுப்பாடு சிகிச்சைகளுக்கு பின் இரண்டு நாள்களிலேயே வீட்டு வேலைகளை தானே செய்யவும் மற்றும் அலுவலகத்திற்கு சென்று பணி மேற்கொள்ளமளவிற்கான உடல் வலிமையையும் இந்த சிகிச்சை மூலம் பெறலாம் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. எண்டோமெட்ரியாசிஸ் எனப்படும் கர்ப்பப் பையின் உள்ளே வளரவேண்டிய அணுக்கள், கர்ப்பப் பையின் வெளியே வளர ஆரம்பித்து விடுவதால், மாதவிடாயின் போது ஏற்படும் அதிக வயிற்று வலி மற்றும் உதிர போக்கு, மகப்பேறு தடைப்படுவது போன்றவை நிகழக்கூடும். அத்துடன் சாக்லேட் சிஸ்ட் எனப்படும் ஒருவித கருமுட்டைப் பை கட்டியும் உருவாகலாம். இதனை கண்டறிந்து, குணப்படுத்துவதற்கு துல்லியமான சிகிச்சை லேப்ராஸ்கோப்பிக் தான். மேலும் எல்லாவித பெண்களுக்கும் ஃபைப்ராய்ட் எனப்படும் கர்ப்பப் பை கட்டிகள் மற்றும், கரு முட்டை பையில் உருவாகும் நீர் கட்டிகளுக்கு சரியான தீர்வை வழங்கி வருவதும் இந்த சிகிச்சை முறையே. ஒரு சிலருக்கு கருக்குழாயில் கரு தங்கி விடும். அதாவது எக்டோபிக் பிரெக்னன்ஸி என்ற சிக்கலுக்கும் இந்த சிகிச்சை முறை மூலம் தீர்வு காணலாம். மேலும் பல பெண்களுக்கு குழந்தைபேறின்மைக்கான காரணம், பிறப்பிலேயே அவர்களுக்கு கர்ப்பையில் தேவையற்ற உட்சுவர் இருக்கும். இதனை ஹிஸ்ட்ராஸ்கோப் என்ற சிகிச்சை மூலம் அகற்றலாம்.

ட்ரை ஃபுரூட் புலாவ்

காலையில் குழந்தைகளுக்கு ஆரோக்கியமாகவும், அவர்கள் விரும்பி சாப்பிடக்கூடியவாறும் ஏதேனும் ஒரு கலவை சாதம் செய்ய நினைத்தால், ட்ரை ஃபுரூட் புலாவ் செய்யுங்கள். இது மிகவும் சுவையாக இருப்பதோடு, குழந்தைகளுக்கு மிகவும் ஆரோக்கியமான ரெசிபியும் கூட. சரி, இப்போது அந்த ட்ரை ஃபுரூட் புலாவ் ரெசிபியை எப்படி செய்வதென்று பார்ப்போமா!!!

தேவையான பொருட்கள்:

அரிசி – 2 கப்

பாதாம் – 10

உலர் திராட்சை – 10

முந்திரி – 10

நெய் – 2 டேபிள் ஸ்பூன்

மிளகு – 1 டீஸ்பூன்

உப்பு – தேவையான அளவு

பிரியாணி இலை – 1

குங்குமப்பூ – 1 சிட்டிகை

தண்ணீர் – 3 கப்

செய்முறை:

முதலில் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் தண்ணீர் ஊற்றி சூடேற்ற வேண்டும். மற்றொரு அடுப்பில் மற்றொரு வாணலியை வைத்து, அதில் நெய் ஊற்றி காய்ந்ததும், பிரியாணி இலை, மிளகு, பாதாம், முந்திரி, உலர் திராட்சை சேர்த்து வறுக்க வேண்டும். பின் அதில் அரிசியை கழுவி சேர்த்து 1-2 நிமிடம் வறுக்க வேண்டும். பின்பு அதில் உப்பு மற்றும் குங்குமப்பூ சேர்த்து 1/2 நிமிடம் கிளறி, பின் அதில் 3 சூடேற்றிய நீரை ஊற்றி, கலவையானது கொதிக்க ஆரம்பிக்கும் போது, அதனை மூடி வைத்து, சாதம் வெந்து நீர் வற்றியப் பின் இறக்கினால், ட்ரை ஃபுரூட் புலாவ் ரெடி!!!

கூர்க் ஸ்டைல் ப்ரைட் சிக்கன்

வார இறுதி வந்தாலே அனைவரது வீட்டிலும் சிக்கன், மட்டன் என அசைவ உணவுகளின் மணம் வீசும். அந்த வகையில் இந்த வாரம் ஏதேனும் வித்தியாசமான ரெசிபி முயற்சிக்க நினைத்தால், கூர்க் ஸ்டைல் ப்ரைடு சிக்கனை முயற்சித்துப் பாருங்கள். இது மிகவும் சுவையுடனும், காரமாகவும் இருக்கும். மேலும் இது மழைக்காலத்தில் சாப்பிடுவதற்கு ஏற்ற ரெசிபியும் கூட. சரி, இப்போது அந்த கூர்க் ஸ்டைல் ப்ரைடு சிக்கனை எப்படி செய்வதென்று பார்ப்போமா!!!

தேவையான பொருட்கள்:

மல்லி – 1 டேபிள் ஸ்பூன்

மிளகு – 10

சீரகம் – 1 டீஸ்பூன்

கடுகு – 1 டீஸ்பூன்

பட்டை – 1 இன்ச்

கிராம்பு – 5

சிக்கன் – 1/2 கிலோ

வெங்காயம் – 2 (பொடியாக நறுக்கியது)

பூண்டு – 5 பற்கள் (நறுக்கியது)

கூர்க் வினிகர் – 2 டேபிள் ஸ்பூன்

மிளகாய் தூள் – 1 டீஸ்பூன்

உப்பு – தேவையான அளவு

எண்ணெய் – 2 டேபிள் ஸ்பூன்

செய்முறை:

முதலில் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் மல்லி, சீரகம், கடுகு, மிளகு, பட்டை, கிராம்பு ஆகியவற்றை போட்டு வாசனை வரும் வரை வறுத்து, பின் அதனை இறக்கி குளிர வைத்து, மிக்ஸியில் போட்டு பொடி செய்து கொள்ள வேண்டும். பின்னர் சிக்கனை நன்கு சுத்தமாக கழுவி, நீரை வடித்துவிட்டு, அதில் அரைத்து வைத்துள்ள பொடியில் ஒரு டீஸ்பூன் தனியாக வைத்துக் கொண்டு, மீதமுள்ளதை சேர்த்து, அத்துடன் உப்பு சேர்த்து பிரட்டி 1 மணிநேரம் ஊற வைக்க வேண்டும். பின்பு ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், தனியாக எடுத்த வைத்த பொடியை போட்டு, அத்துடன் வெங்காயம், பூண்டு சேர்த்து 2-3 நிமிடம் நன்கு வதக்க வேண்டும். பிறகு அதில் மிளகாய் தூள் சேர்த்து பிரட்ட வேண்டும். பின் அதில் ஊற வைத்துள்ள சிக்கனை சேர்த்து தீயை குறைவில் வைத்து 10 நிமிடம் வறுக்க வேண்டும். அடுத்து அதில் சிறிது வினிகரை தூவி பிரட்டி, மூடி வைத்து 5 நிமிடம் வேக வைத்து இறக்கினால், கூர்க் ஸ்டைல் ப்ரைடு சிக்கன் ரெடி!!!

கேரளா ஸ்டைல் சிக்கன் கட்லெட்

சிக்கன் பிரியர்களே! உங்களுக்காக ஒரு ருசியான கேரளா ஸ்டைல் சிக்கன் கட்லெட் ரெசிபி. இந்த ரெசிபியானது வீட்டில் உள்ளோர் அனைவரும் விரும்பி சாப்பிடும் வகையில் இருக்கும். குறிப்பாக குழந்தைகள் விரும்பி சாப்பிடுவார்கள். சரி, இப்போது அந்த கேரளா ஸ்டைல் சிக்கன் கட்லெட் ரெசிபியை எப்படி செய்வதென்று பார்ப்போமா!!!

தேவையான பொருட்கள்:

சிக்கன் கீமா – 1/2 கிலோ

வேக வைத்த உருளைக்கிழங்கு – 2 (மசித்தது)

மிளகுத் தூள் – 1 டீஸ்பூன்

கரம் மசாலா – 1 டீஸ்பூன்

பச்சை மிளகாய் – 2 (பொடியாக நறுக்கியது)

இஞ்சி – 1/2 இன்ச் (துருவியது)

முட்டை – 1 (நன்கு அடித்து வைத்துக் கொள்ளவும்)

பிரட் தூள் – 1 கப்

கறிவேப்பிலை – சிறிது (நறுக்கியது)

உப்பு – தேவையான அளவு

எண்ணெய் – 1 கப்

செய்முறை:

முதலில் சிக்கன் கீமாவை நன்கு சுத்தமாக கழுவி நீரில் வடித்துவிட்டு, ஒரு பௌலில் போட்டு, அத்துடன் மசித்த உருளைக்கிழங்கை சேர்த்து, கையால் மீண்டும் ஒருமுறை மசிக்க வேண்டும். பின்னர் அதில் இஞ்சி, பச்சை மிளகாய், கரம் மசாலா, மிளகுத் தூள், கறிவேப்பிலை மற்றும் உப்பு சேர்த்து நன்கு, மசாலாப் பொருட்கள் ஒன்று சேர பிசைய வேண்டும். பின்பு அதனை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து கட்லெட் போன்று தட்டிக் கொள்ள வேண்டும். பிறகு ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், தட்டி வைத்துள்ள கட்லெட்டை முட்டையில் நனைத்து, பின் பிரட் தூளில் பிரட்டி எண்ணெயில் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுத்தால், கேரளா ஸ்டைல் சிக்கன் கட்லெட் ரெடி!!!

Kipling & Steeles சந்திப்பில்
ASIA GOLD INC.
"தங்கத்தின் மலிவைப் பார்த்து தரத்தை இழந்து விடாதீர்கள்"
சிங்கப்பூர், டுபாய் நாடுகளிலிருந்து இறக்குமதி
செய்யப்பட்ட 22K நவீன டிசைன் நகைகள்
விஷேட விலைக் கழிவில்....
மே மாதம் முதல் புதிய நகைச்சீட்டு ஆரம்பம்
புதிய அங்கத்தவர்கள் தொடர்புகொள்ளவும்
நீங்கள் விரும்பும் டிசைன்களில் புதிய நகைகள்
செய்தும் நகைகள் திருத்தியும் கொடுக்கப்படும்.
துரித பணமாற்றுச் சேவையும் செய்யப்படும்
Tel: 416-746-ASIA (2742)
16B -5010 Steeles Ave. West
Etobicoke, Ontario
M9V 5C6
(Kipling & Steeles)

மகத்துவமிக்க கோவைக்காய்

இன்று உலகிலேயே அதிகமான நீரிழிவு நோயாளிகள் உள்ளனர். உணவு பழக்க வழக்கங்கள், உடல் உழைப்பு குறைந்த வாழ்க்கை முறைகள் மற்றும் பரம்பரை இவற்றால் உண்டாகும் வியாதி நீரிழிவு. இந்த வியாதி நெடுங்காலமாக, ஆயிரக்கணக்கான வருடங்களாக மனிதர்களை பாதித்து வரும் நோய். இவ்வளவு நாட்கள் இருந்தும், நீரிழிவுக்கு முழு நிவாரணம் இல்லை. எனவே மாற்று மருத்துவ முறைகள் தற்போது பிரபலமாகி வருகின்றன. இயற்கை மூலிகைகள், தாவரங்கள் இவைகள் நீரிழிவு வியாதியை குணப்படுத்த முடியுமா என்பது தற்போது ஆராயப்பட்டு வருகின்றன. பாகற்காய், வெந்தயம் இவைகள் நீரிழிவு நோயை கட்டுப்படுத்த உதவும் என்று தெரியவந்துள்ளது.

கோவைக்காய் (Coccinia Indica) பழங்காலத்திலிருந்தே நீரிழிவு நோய் மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் காய்கறிகளில் ஒன்று. வெள்ளரிக்காய் குடும்பத்தை சேர்ந்த இந்த எளிமையான காய்கறி கொடியினத்தை சேர்ந்தது இந்தியாவில் எங்கும் கிடைக்கும்.

இந்திய ஆராய்ச்சியாளர்களால் கோவைக்காயை வைத்து, ஒரு நீரிழிவு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. 60 டைப் - 2 நீரிழிவு நோயாளிகள் (வயது - 35 லிருந்து 60 வயது வரை) இந்த ஆராய்ச்சிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் 33 நபர்கள் ஆண்கள். 26 - பெண்கள். இவர்களின் ரத்த சர்க்கரை அளவு 110 - 180 மிகி. / டெ.லி. (பட்டினியின் போதுள்ள அளவு) இவர்களில் ஒருவர் விலகிவிட்டார்.

மீதி 59 பேரில் 29 நோயாளிகளுக்கு கோவைக்காய் சாறும், 30 நோயாளிகளுக்கு 'வெற்று' மருந்தும் (Placebo) கொடுக்கப் பட்டன. கொடுக்கப்பட்ட கோவைக்காய் சாறு இலையிலிருந்தும், கோவைக்காய் / பழங்களிலிருந்து எடுக்கப்பட்டது. இந்த ஆராய்ச்சி பெங்களூரில் உள்ள ஆராய்ச்சி கூடத்தில் மேற்கொள்ளப்பட்டது.

90 நாட்கள் இந்த சிகிச்சை தொடர்ந்தது. அதன் பிறகு பார்த்ததில் நீரிழிவு நோயாளிகள் ரத்த சர்க்கரை அளவு கணிசமாக குறைந்திருப்பது தெரியவந்தது. 16% சதவிகித குறைவு ஏற்பட்டிருந்தது.

கோவைக்காய் சிகிச்சை பெறாதவர்களின் சர்க்கரை அளவு அதிகமாகிருந்தது.

தினசரி 1 கிராம் கோவைக்காய் சாறு, உணவுக்குப் பின் எடுத்த சர்க்கரை அளவை 18% சதவிகிதம் குறைந்திருப்பது தெரியவந்தது.

பல வருடங்களுக்கு முன்பே, அமெரிக்க ஹார்வார்டு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பள்ளியில் நடத்திய ஆய்வில் கோவைக்காய் நீரிழிவு வியாதியை குறைக்கும் குணமுடையது என்பது சொல்லப்பட்டது.

பெங்களூரில் நடத்திய மேற்சொன்ன ஆராய்ச்சியிலும் இது நிரூபிக்கப்பட்டுள்ளது. தீவிரமில்லாத சர்க்கரை வியாதிக்கு கோவைக்காய் நல்ல பலனை அளிக்கும். கோவைக்காய் சாறு எடுத்துக் கொள்வதால் பக்க விளைவுகளும் அதிகம் ஏற்படுவதில்லை. ஆராய்ச்சிக்கு உட்பட்ட நோயாளிகளுக்கு சிறிய வயிற்றுக்கோளாறுகள் ஏற்பட்டாலும், அவை 1 வாரத்தில் மறைந்து விட்டன.

கோவைக்காய் எரிசேரி

தேவையானவை

கோவைக்காய் (பொடியாக நறுக்கியது)	- 1 கப்
மிளகு	- 2 ஸ்பூன்
சீரகம்	- 2 ஸ்பூன்
மஞ்சள் தூள்	- 1 ஸ்பூன்
உப்புத் தூள்	- தேவையான அளவு
புளி	- தேவையான அளவு
பசு நெய்	- 50 கிராம்

செய்முறை

ஒரு பாத்திரத்தில் பொடியாக நறுக்கிய கோவைக்காயை போடவும். புளியைக் கரைத்து ஊற்றவும் (அ) எலுமிச்சைப்பழத்தை பிழிந்து ஊற்றவும். உப்பைப் போடவும். மஞ்சள் பொடியைப் போடவும். மிளகு, சீரகம் இவற்றைப் பொடி செய்து போடவும். தண்ணீர் இல்லாமல் பகல் (அ) இரவு முழுவதும் பிசிறி ஊற விட வும்.

மறுநாள் சமைக்கும் முன் 10 மணியிலிருந்து 11 (அ) 12 மணி வரை வெய்யிலில் தாம்பாளத்தில் கொட்டிப் பரப்பி வைத்து காய வைக்கவும். அரை மணி நேரம் கழித்து மறுபடி காய்களை புரட்டி வைத்து காய்ந்ததும், எடுத்து வாணலியில் நெய்யை ஊற்றி காய்ந்ததும் காயவைத்த கோவைக்காய்களை நெய்யில் பொரித்து எடுக்கவும். இதுவே கோவைக்காய் எரிசேரி என்பது.

அடம்பன் கொடியும்

டாக்டர்.போல் யோசேப்

மரங்களிடமிருந்து மனிதத்தை
கற்றுக்கொள்ளும் அளவுக்கு
மனிதனிடம் மனிதம்
மரத்துப் போயுள்ளது.

விலங்குகளிடமிருந்து வாழக்
கற்றுக்கொள்ளுமளவிற்க்கு
மனிதம் விலங்கியல்
அறிவியலாகியுள்ளது.

சுறுசுறுப்பென்றாலோ
சேமிப்பு என்றாலோ
எறும்புகளும் தேனீக்களும்தானே
நமக்குப் பேராசிரியர்கள்.

பாசத்தைக் கற்றுக்கொள்ள
பசுவிடம் பரிந்துரை செய்கிறோம்.

நன்றி என்றதும் நினைவுக்கு வருபவர்
நம்ம பப்பியும் ஜிம்மியும்தானே
அடுத்தவனை நாயென்று திட்டாதீர்கள்
யாருக்குமே இங்கு நன்றியில்லை

ஆமையும் முயலும் கதை
அன்றிலிருந்து இன்றுவரை
நான் ஆமையா? முயலா?
நமக்குள் இன்னும் தீராத சந்தேகம்

காகத்தை பார்த்து
பகிர்தலைக் கற்றும்
படலையைச் சாத்தும்
பழக்கம் போகவில்லை

குரங்கிலிருந்து பிறந்ததால் என்னவோ
அது
கொஞ்சம் பொருத்தமாயுள்ளது.
இடையில் நம்ம நரியார் மட்டும்
எப்படி வந்தாரென்று
எனக்கு தெரியவில்லை – ஆம்
அவ்வளவு நெருக்கம்

மானிடம்(மான்) மானிடமில்லை
ஆனால் மானம் மட்டும் உள்ளது
கவரிமான் அதுமட்டும்
நம்மினத்துக்கு பொருந்தவே பொருந்தாது.

வண்டுகள் வரவில்லை என்பதற்காக
பூக்கள் கண்ணீர் விடுகிறதா ?
சிலந்திகள் எந்த நம்பிக்கையில்
வலைகளைப் பின்னிக்
காத்துக்கிடக்கின்றன. – ஏன்
மனிதா நீ மட்டும்
தோல்விகளைக்கண்டு துவண்டு போகிறாய்
கஸ்ட காலத்தைக் கண்டு கவலைப்படுகிறாய்.

வண்ணத்துப் பூச்சியிடமிருந்து
வாழக் கற்றுக் கொள்ளுங்கள்

ஆம்பலுக்குச்சமமாகுமா தான் ஆம்
புழுவாய் கூட்டுக்குள் அடைபட்டு
கருமையிலும் கருமை மயிர்கொட்டியாய்
பட்டாலும் பார்த்தாலும்
அருவருக்காதவர் நம்மில் யாருண்டு – ஆம்
ஆரம்பம் மிக அற்பம்தான் – முடிவில்
கண்ணைக் கவரும் பார்க்காத வண்ணங்கள்
யார் இப்படி வண்ணங்களை தெளித்து
வண்ணத்துப் பூச்சியாய் பறக்கவிட்டது.
ரவிவர்மாவும் பிக்கா சோவும்
வெட்கித் தலைகுனிந்து தோற்றுப்போனதும்
இந்த சிறகடிக்கும் பட்டாம் பூச்சியிடம்தானே.

தேனியிடம் ஒரு நாள் கேட்டேன்
மனிதன் தேனைத் திருடும் போது
உனக்கு கவலையில்லையா என்று
அது சொன்னது
பாவம் திருடி தின்றுவிட்டும்
ஆயிரமாயிரம் ஆண்டுகளானாலும்
தேனை உருவாக்கும்
வித்தையை மட்டும் அவனால்
திருட முடியாதே என்ற போது
என் தலையில் சுறுக்கென்றது
தேனீ அது கொட்டவில்லை.

அறிவியல் ரீதியாக குழந்தை உருவாவது எப்படி என்று பார்ப்போம்!

டாக்டர். போல் யோசேப்

குழந்தை உருவாவதற்கு ஆணின் விந்து, பெண்ணின் சினை முட்டை இரண்டும் தேவை என்று பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குக்கூடத் தெரியும். ஆனால், அறிவியல் ரீதியாக அது எப்படி நடக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாமா?

பெண்ணின் இனப்பெருக்க மண்டலம்

(Reproductive system)

பெண் உடலின் வெளிப்புறப்பகுதியில் அமைந்துள்ள பால் மற்றும் இனப்பெருக்க உறுப்புகளுக்கு வெளிப்புற உறுப்புகள் என்று பெயர். பெண்ணின் பிறப்பு உறுப்புப் பகுதியில் மூன்று துவாரங்கள் உள்ளன. முன்புறத்தில் இருப்பது சிறுநீர் வெளியேறும் துவாரம். இது சிறுநீர் இறக்குக் குழாய் (Urethra) எனப்படுகிறது. அதன் கீழே, யோனியின் (Vagina) நுழைவுத் துவாரம் (Introitus) அமைந்திருக்கிறது. அதன் கீழே இருப்பது, மலம் வெளியேறும் ஆசன வாய்.

வல்வா (Vulva) என்று அழைக்கப்முடும் யோனியின் வெளிப்பகுதியில், கிளைடோரிஸ் (Clitoris), வெளி உதடுகள் (Labla majora), உள் உதடுகள் (Labla minora) ஆகியவை அமைந்திருக்கின்றன. இவற்றில் கிளைடோரிஸ்தான் மிகவும் நுட்பமான, உணர்ச்சிகரமான பகுதி. பட்டாணி உருவில், முழுக்க முழுக்க மெல்லிய நரம்புகள் கொண்டதாக இருக்கும் கிளைடோரிஸுக்கு பாலின்பத்தை வழங்குவதுதான் தலையாய பணி. ஆணுறுப்பைப் போலவே இது குவிந்த தோலால் பாதுகாக்கப்பட்டுள்ளது.

கொழுப்புத் திசுக்களாலான வெளிஉதடுகள், யோனியின் நுழைவுத் துவாரத்தைச் சுற்றி அமைந்திருக்கின்றன. இவை குஷன்போல் செயல்பட்டு, இத்துவாரத்தைப் பாதுகாக்கின்றன. இவற்றின் உள்ளே அமைந்திருக்கும் உள்உதடுகள் மிக நுட்பமானவை. தூண்டிவிடப்படுகையில், புடைக்கும் தன்மை கொண்டவை.

யோனிக்குழாய் என்பது கருப்பையையும், உடலின் வெளிப்பகுதியையும் இணைக்கும் தசையாலான ஒரு பாதை. இதன் வழியாகவே, விந்து உள்ளே செல்லும். மாதவிலக்குக் கழிவு வெளியேறும். பொதுவாக, காற்றுப் போன பலூன் போன்ற தோற்றம்கொண்ட யோனி, ஆண் குறியை அல்லது குழந்தையின் தலையை ஏற்றுக்கொள்கிற அளவுக்கு விரிந்து கொடுக்கும் தன்மை உடையது. இதன் உட்புறச் சுவர் மிருதுவான தசையாலானது. கருப்பையின் கழுத்துப் பகுதியோடு இது இணைகிறது. கர்ப்பக்காலத்தில், கருவுற்ற முட்டை, வளர்ச்சி பெற்று, குழந்தையாக மாறும் இடம்தான் கருப்பை. இது, கீழ் வயிற்றுப் பகுதியான பெல்லிஸின் அடி ஆழத்துக்குள், சிறுநீர்ப்பைக்குப் பின்புறமாக உள்ளது. கைப்பிடியளவுள்ள கருப்பை ஒரு பேரிக்காயைப் போன்ற தோற்றம் கொண்டது. தசையாலான அதன் உட்புறச் சுவரை எண்டோமெட்ரியம் (Endometrium) என்னும் சவ்வுப்படலம் சூழ்ந்துள்ளது. இந்த உறையில்தான், கருவுற்ற முட்டை வந்து பதிகிறது. கருத்தரிக்கவில்லை எனில், இந்தச் சவ்வுப் படலம் கழன்று ரத்தத்துடன் மாதவிலக்குக் கழிவாக வெளியேறிவிடும்.

கருப்பையின் கழுத்துப் பகுதிக்கு செல்விக்ஸ் (Cervix) என்று பெயர். இப்பகுதிதான், கருப்பையை யோனியோடு இணைக்கிறது. இப்பகுதியில் கிரிப்ட்ஸ் (Crypts) என்ற பிரத்தியேகமான சுரப்பி உள்ளது. இது சுரக்கும் சளி போன்ற ஒரு திரவம், கருப்பையை, பாக்டீரியாக்களிடமிருந்து காப்பாற்றுகிறது. விந்து, கருப்பைக்குள் நுழைந்து முட்டையைச் சென்றடையவும் இத்திரவம் உதவுகிறது.

கருப்பையின் மேற்பகுதியில், இரண்டு பக்கமும் சுமார் பத்து செ.மீ. நீளமுள்ள இரண்டு கரு இணைக்குழாய்கள் (Fallopian tubes) அமைந்துள்ளன. இவற்றில் உள்ள கை போன்ற பகுதி, கருவகத்தில் (Ovary) உற்பத்தியாகும் முட்டையைப் பெற்று கருப்பைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கின்றன. முட்டை கருவகத்தில் இருந்து கருப்பையை அடைய இவையே பாதை அமைத்துக் கொடுக்கின்றன. கரு இணைக்குழாய்களின் உட்பகுதியில் உள்ள லட்சக்கணக்கான மெல்லிய முடி இழைகள் ஒரு ஒழுங்கு முறையில் அசைந்து, முட்டையை முன்னோக்கி நகரச் செய்கின்றன.

கரு இணைக்குழாய்கள், முட்டை பயணப்படும் பாதையாக மட்டும் பயன்படுவதில்லை. முட்டைக்கும், ஆரம்பகால கருவுக்கும் போஷாக்கு அளிப்பதும் இவற்றின் வேலை. இரண்டு குழாய்களில் ஏதேனும் ஒன்றில்தான் விந்து, முட்டையுடன் இணைந்து கருவாகிறது.

பாதாம் பருப்பு அளவில், பெல்லிஸுக்கு இரண்டு பக்கமும் அமைந்துள்ள கருவகங்கள், இருவித பணிகளைச் செய்கின்றன. ஒன்று முட்டை உற்பத்தி, இரண்டு ஹார்மோன்களைச் சுரப்பது. ஒவ்வொரு மாதமும், முட்டை வெளிப்படும் சமயத்தில் (Ovulation) ஒரு முதிர்வடைந்த முட்டையைக் கருவகம் வெளிவிடுகிறது. அவற்றைப் பெற்றுக்கொள்கிற வேலை கரு இணைக்குழாயுடையது.

கருவகத்தில் உள்ள முட்டைகள் "ஃபாலிகுல்ஸ்" என்ற பைகளில் சேகரித்து வைக்கப்படுகின்றன. (ஃபாலிகுலஸ் என்றால் லத்தீன் மொழியில் சாக்குப் பை என்று அர்த்தம்) இந்தப் பைகளில் முட்டைகளுடன், அவற்றை ஊட்டமடையச் செய்யும் சில செல்களும் இருக்கும். பெண் ஹார்மோன்களும் இங்குதான் உற்பத்தி ஆகின்றன.

கருவாக உருப்பெற்ற பின், கருவகத்தில் சுமார் இருபது லட்சம் முட்டைகள் இருக்கும். அதற்குப் பின் முட்டைகளின் எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே வரும். பிறந்தவுடன் மூன்று லட்சம் என்ற அளவில்தான் முட்டைகளின் எண்ணிக்கை இருக்கும். வாழ்நாள் முழுமைக்குமான முட்டைகளின் கையிருப்பு அவ்வளவுதான். இவை தவிர புதிதாக முட்டைகளை கருவகம் உற்பத்தி செய்வதில்லை.

ஒவ்வொரு மாதவிலக்குச் சுற்றின்போதும், கிட்டத்தட்ட ஐந்நூறு முட்டைகள் கருவகத்தில் இருந்து கரு இணைக்குழாய்க்குள் விடுவிக்கப்படும். அவற்றுள் ஒன்றுதான் முதிர்வடைந்து கருத்தரிப்பதற்குத் தயாராகும். மாதவிலக்கு முற்றுப்பெறும் சமயத்தில் கருவகத்தில் முட்டைகளை இருக்காது.

மாதவிலக்குச் சுற்று

பெண்ணின் இனப்பெருக்க மண்டலத்தில் மாதாமாதம் நிகழும் மாதவிலக்கு பற்றி அனைவருக்கும் தெரியும். ஒரு மாதவிலக்கு தொடங்கிய நாளில் இருந்து அடுத்த மாதவிலக்கு தொடங்கும் நாள் வரைக்குமான

இடைப்பட்ட காலம்தான் ஒரு மாதவிலக்குச் சுற்று. இந்தச்சுற்று பொதுவாக 28 முதல் 35 நாட்களைக் கொண்டது. மூன்று வாரம் முதல் ஆறு வாரங்கள் வரையில் எத்தனை நாட்கள் இருந்தாலும் சகஜம்தான்.

மாத விலக்குச் சுற்றின்போது கருப்பை, கருவுறத் தயாராகிறது. ஈஸ்ட்ரோஜன், புரோஜெஸ்டெரோன் ஆகிய ஹார்மோன்களின் உபயத்தில், கரு பதிந்து வளரும் வகையில் கருப்பையின் உட்புறச் சுவர் படுக்கைபோல் தயாராகிறது. ஆனால் கருவுறுதல் நிகழாத பட்சத்தில், இந்தப் படுக்கையை வெளியேற்றி கருப்பையைக் காலி செய்ய வேண்டியது அவசியமாகிறது. அப்போதுதானே அடுத்த மாதவிலக்குச் சுற்றில் கரு உருவானால் புதிதாகப் படுக்கையைத் தயார் செய்ய முடியும்.

இந்த அடிப்படையில்தான், ஒவ்வொரு மாதமும் பெண்ணுக்கு மாதவிலக்கு ஏற்பட்டு, கருப்பைக்குள் இருக்கிற படுக்கை போன்ற உறை, ரத்தம் (உள் உறை வெளியேற்றப்படும் போது அதனுள் உள்ள ரத்த நாளங்கள் கிழிபடு வதால் வரும் ரத்தம்), கருவுறாத முட்டைகள் போன்றவை மாத விலக் குக் கழிவாக வெளி யேற்றப்படுகின்றன. அதனையடுத்து, கருப் பையின் உட்புறச்சுவர், அடுத்த சுற்றுக்குத் தயா ராகிறது.

சில சமயங்களில், கருப்பையின் உட்புறச் சவ்வு கிழிகிறபோது, சி ன்னச் சின்னத் துண்டுகளாக வெளியேறும். இது இயல் பான நிகழ்வுத ான். இதை சில பெண்கள் கருச்சிதைவு ஏற்பட்டுவிட்டதாகத் தவறாக நினைத்துவிடுவார்கள்.

கருத்தரிக்காமையால் கஷ்டப்படும் பெண்கள், மாதவிலக்கு தொடர்பான மனமயக்கத்தில் இருக்கிறார்கள். மாதவிலக்குக் கழிவில் ஒரு சிறிய மாற்றம் இருந்தாலும் (சில சமயம் அதிக ரத்தப்போக்கு இருக்கும்; சில நேரங்களில் ரத்தப்போக்கு குறைவாக இருக்கும். ரத்தப்போக்கு ஒரே நாளில் நிற்கலாம் அல்லது இரண்டு, மூன்று நாட்களுக்கு நீடிக்கலாம்) அதைப்பற்றி அதீதமாகக் கவலைப்படுகிறார்கள்.

மாதவிலக்குக் கழிவுகள் வெளியேறுவதற்கும், கருவுறும் திறனுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதால், இந்தச் சின்னச் சின்ன வித்தியாச ங்களை மகப்பேறு குறைபாடு உள்ள பெண்கள் பெரிதாக எடுத்து க்கொள்ளக்கூடாது.

டாக்டர். போல் யோசேப்

B.H.M.S. (India), H.D.(Canada). R.A.P.

(Bachelor of Homeopathic Medicine and Surgery) 1193A Brimley Road, Unit 10, Scarborough, Ontario M1P 3G5

Tel: 4164383939, Cell: 4169864903

லேபர் டே

Labour Day 01-09-2014 தொழிலாளர் தினம் செப்டெம்பர் முதலாம் திகதி 2014, தொழிலாளர் தினத்தன்று ரொறோண்டோ Steel Workers Union அலுவலகத்துக்கு முன்னால் தொழிலாளர்கள் மற்றும் தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஊர்வலமாக தங்களது பதாதைகளுடன் CNE சென்றடைந்தனர்.

புதிய உலக அதிசயங்களைப் பற்றி...

கொலாசியம் என்ற பிரம்மாண்ட அரங்கம், இத்தாலி



சிசென்இட்ஸா என்ற கோயில், மெக்சிகோ



மாச்சு பிச்சு என்ற மனித குடியிருப்புகள், பெரு



பெட்ரா என்ற அதிர்ஷ்டக் கோயில், ஜோர்டான்



கிறிஸ்து தி ரீடிமர் என்ற 105 அடி உயர ஏசு சிலை, பிரேசில்



தாஜ்மகால், இந்தியா



சீனப் பெருஞ்சுவர், சீனா

புதிதாக உலக அதிசயங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகள் அறிவிக்கப்பட்டு ஓராண்டு ஆகிறது. அவை என்ன என்று நமக்கு அவ்வளவாக நினைவில் இருப்பதில்லை. அதற்காகத்தான் இந்த பட்டியல்.

BEST WAY
BLINDS & SHUTTERS INC.
Vertical Blind, Horizontal Blinds, Shutters (Wood/Vinyl), Draperies
We have a new showroom & Manufactory
Mon-Fri : 7.30am to 5.30pm / After hours & Saturday, Sunday & Holidays (Appointment only)
CALL : RAJ / Tel: 416 831 6397 / 416 431 6218 / Fax: 416 431 5069
33 Estate Drive, Toronto, ON M1H 2Z2 (Markham & 401 - Oppo. of public Storage)
www.bestwayblinds.com email: bestwayblinds@yahoo.com

குறட்டையின் பயங்கரம்!

நீங்கள் ஆணாய்ருந்தாலும் சரி, பெண்ணாய்ருந்தாலும் சரி, நித்திரையின் போது குறட்டை விடுபவரா? உங்கள் குறட்டையின் சத்தத்தால் அருகில் படுத்திருப்பவர் தன் தூக்கத்தை இழக்கிறாரா? இதனால் நீங்களும் மனச் சோர்வடைகிறீர்களா? அப்படியெனில் நான் இனிச் சொல்லப் போவதை நீங்கள் மிகவும் கவனமாகப் படிக்க வேண்டும். சரி, நீங்கள் குறட்டை விடுவதில்லையா? பரவாயில்லை. உங்கள் வீட்டில் இருக்கும் உங்கள் அப்பாவோ, அம்மாவோ, சகோதரனோ, சகோதரியோ. துணையோ, நண்பனோ குறட்டை விடுபவரா? அப்படியிருந்தாலும் நீங்கள் இதைப் படிக்க வேண்டும். 'குறட்டை விடாமல் அமைதியாய் உறங்குவது எப்படி?' என்றோ, 'குறட்டையைத் தடுக்கப் பத்து வழிமுறைகள்' என்றோ உங்களுக்குப் பாடம் சொல்லித்தரப் போவதில்லை நான். ஆனால் அதைவிடப் பெரிய விசயம் ஒன்றைச் சொல்லப் போகிறேன். குறட்டையுடன் சம்மந்தப்பட்ட மிகமுக்கியமான விசயம் ஒன்றைப் பற்றிச் சொல்லப் போகிறேன். அதுவும் தமிழர்களான நம்மில் பலர் அறிந்தேயிராத முக்கிய விசயம் அது. நவீன மருத்துவத்துடன் சம்பந்தப்பட்ட, அறிவியலின் அருமையான கண்டுபிடிப்பு அது. "அட! என்னதான் அது" என்றுதானே கேட்கிறீர்கள்? சொல்கிறேன்.

ஊரில் அல்லது கிராமத்தில் வாழும் உறவினர் ஒருவர் திடீரெனப் பக்கவாத நோயால் (Paralysis) பாதிக்கப்பட்டு, எழுந்திருக்க முடியாமல் படுக்கையில் விழுந்துவிடுவார். அல்லது இரவு படுக்கைக்குச் சென்றவர் காலையில் எழுந்திருக்கவே மாட்டார். படுக்கையிலேயே இறந்திருப்பார். அப்படி இறந்தவரைப் பரிசோதனை செய்த மருத்துவர், 'அவர் மாரடைப்பால் இறந்திருக்கிறார்' என்று அறிக்கை தருவார். உறவினர்களிலும், அயலவர்களிலும் அடிக்கடி நடக்கும் சம்பவங்கள் இவை. இந்தச் சம்பவங்கள் சம்பவிப்பதற்கு அதிகபட்சமாகக் காரணமாக இருப்பது ஒன்று. அதுவே மேலே சொல்லப்பட்ட குறட்டை பற்றி விரிவாகப் பார்ப்பதற்குக் காரணமாகவும் இருக்கிறது. அந்த ஒன்றைப் பற்றிதான் நாம் இங்கு விரிவாகப் பார்க்கப் போகிறோம். அதன் பெயர் 'ஸ்லீப் அப்னியா' (Sleep Apnea).

'ஸ்லீப் அப்னியா' என்னும் இந்தப் பெயரை நீங்கள் அதிகம் கேள்விப் பட்டிருக்கமாட்டீர்கள். ஆனால் நம்மில் பலருடன் தொடர்புபட்டது இந்தப் பெயர். இந்த ஸ்லீப் அப்னியா, நாம் அறியாமலே நமக்குள் இருந்து, நம்மையே அழிக்கக் காத்திருக்கும் ஒரு நோய். ஸ்லீப் அப்னியா நோய் உள்ளவர்கள் அதைக் கவனிக்காத பட்சத்தில் உறக்கத்திலேயே உயிரை விட்டுவிட அதிகளவு சாத்தியங்கள் உண்டு. இல்லையெனில் பாரதூரமான உடல் பாதிப்புகளுக்கு அது நம்மை இட்டுச் செல்லும்.

"அவ்வளவு கொடுமையான நோயா இந்த ஸ்லீப் அப்னியா?" என்று நீங்கள் கேட்டால், இதைப் பாக்டீரியா, வைரஸ் போன்ற கிருமிகளினால் ஏற்படும் நோய்களுடனோ, உடல் உறுப்புகளின் பாதிப்புகளால் உருவாகும் நோய்களுடனோ ஒப்பிட முடியாது.

உறக்கத்தின் போது, நம் உடலின் செயல்பாடுகளில் நடைபெறும் குளறுபடியால் உருவாகும் ஒருவித வினோத நோய் இது. ஆனாலும் அதிகளவு ஆபத்தானது. இந்த நோய் பற்றி நான் இங்கு சொல்வதற்கு விசேச காரணம் ஒன்றும் உண்டு. இந்த நோய் எனக்கும் வந்தது. 'அட! என்ன இது? புதுக்கதையாக இருக்கிறதே!' என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆமாம்! இந்த நோய் எனக்கு வந்ததும் ஒரு கதைதான். இந்த நோய் எனக்கு வந்த கதையையும், இந்த நோயின் கதையையும் சேர்த்து இங்கு நாம் பார்க்கப் போகிறோம். இறுக்கமாக அல்ல, ஜாலியாகவே பார்க்கலாம்.

அடிப்படையில் நான் மிகவும் சுறுசுறுப்பானவன். இளைஞனாக இருக்கும் போது, இறுக்கமான உடலமைப்புடன் ஒரு விளையாட்டு வீரனாக விளங்கியவன். ஆனால், கடந்த சில காலமாக நான் மிகவும் சோம்பலாகக் காணப்பட்டேன். நன்றாக நித்திரை செய்து எழுந்தாலும், மீண்டும் நித்திரை செய்ய வேண்டும் என்னும் அளவுக்கு களைப்பாக உணர்ந்தேன். எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் அப்படியே தூங்க ஆரம்பித்தேன்.

அதிகம் ஏன், ஆபீஸில் சில சமயங்களில் நின்று கொண்டே தூங்கினேன் என்றால் பாருங்கள். விளைவும். என் உடலின் எடை மனுஷ்ய புத்திரனும், பிரச்சனையும் போல, நாளொரு மேனியும் பொழுதொரு கிலோவாக வளரத் தொடங்கியது. நிலைமை உணர்ந்து சிறிது கவலையானேன். உடன் வைத்தியரைப் பார்க்க வேண்டுமெனத் தீர்மானித்தேன். என் குடும்ப வைத்தியர் ஒரு ஜேர்மனியர். இளமையான வர். தன் சிரிப்பினாலேயே நோய்களைத் தீர்த்துவிடுவாரோ என்று, நோயாளிகளை நினைக்க வைப்பவர்.

எனக்குச் சமீபமாக நடைபெறும் சம்பவங்களை நான் அவருக்கு விவரிக்கலானேன். நான் சொன்னவற்றை மிகவும் அமைதியாகக்



கேட்டார். பின்னர் யோசனையுடன் மூக்கின் மேல் விரலைக் கொண்டு சென்று, மூக்கில் மேலாகப் பறந்த ஈயைத் தட்டிவிட்டு, என்னை வெட்டப் போகும் ஆட்டைப் பார்ப்பது போலப் பரிதாபமாகப் பார்த்தார். எனது குடும்ப வைத்தியர் ஒரு பாசக்கார வைத்தியர்.

ஆனால், அன்று அவரது பார்வையில், தன் வாடிக்கை நோயாளியை நிரந்தரமாக இழக்கப் போகும் வியாபாரியின் 'லுக்' இருந்ததை நான் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்ற சங்கடமும் அவரது பார்வையில் தெரிந்தது. சில நொடிகளில் தன்னைச் சுதாரித்துக் கொண்ட வைத்தியர் ஜேர்மன் மொழியில், "மிஸ்டர் சிவா, உங்களுக்கு 'ஸ்லீப் அப்னியா' என்னும் நோய் இருப்பதாக நான் சந்தேகப்படுகிறேன்" என்றார். அவர் சொன்னது முழுமையாகப் புரியாத நிலையில், "டாக்டர், எனக்கு ஸ்லீப் தெரியும். அது என்ன அப்னியா?" என்றேன்.

ஒன்றும் தெரியாத ஒரு அப்பாவி தன் வலையில் மாட்டிவிட்ட சந்தோசத்தில், 'ஸ்லீப் அப்னியா' என்றால் என்னவென்று எனக்கு அரை மணி நேரம் அவர் கொடுத்த விளக்கத்தை, நான் அப்படியே எழுத முடியாது. ஓடிவிடுவீர்கள். எனவே சில வரிகளில் அவர் சொன்னதைச் சுருக்கமாகச் சொல்கிறேன். 'நாம் நித்திரை கொள்ளும் போது, மூச்சு விடுவதை நம்மையறியாமலே சில செக்கன்களுக்கு நிறுத்தி விடுகிறோம். அதாவது, ஆழ்ந்த நித்திரையின் போது, நமது நாக்குடன் சேர்ந்திருக்கும் தாடைப்பகுதி சற்றுக் கீழே இறங்கி, சுவாசிக்கும் காற்று உடலில் செல்லும் வழியை முழுவதுமாக அடைத்துவிடுகிறது. அதனால், பல நொடிகளுக்கு மூச்சு எடுக்காமல் இருந்துவிடுகிறோம். இதன் விளைவாக, நமது இரத்தத்தில் உள்ள ஆக்சிசன் வாயுவின் அளவு குறைந்து, மூளையில் மின்னல்கள் போல அதிர்ச்சி அலைகள் ஏற்பட்டு, நித்திரை கொண்டாலும் மூளை விழித்துக் கொண்டு, இதயத்தின் செயற்பாடு படிப்படியாக பலவீனமாகி, ஒருநாள் அது நிறுத்தப்பட்டு, மாரடைப்பால் இறந்து விடுவோம், அல்லது மூளையில் ஏற்படும் அதிர்ச்சி அலைகளின் தாக்கத்தால் பக்கவாதத்தில் விழுவோம். அவ்வளவுதான். வெரி சிம்பிள்'.

எனக்கு விளக்கம் கொடுத்துவிட்டு, என்னைச் சோகமாகப் பார்த்த வைத்தியரின் பார்வையில், 'என்ன சைஸில் எனக்கு பெட்டி எடுக்கலாம்' என்ற சேதி அடங்கியிருந்ததை நான் உடனடியாக அறிந்து கொண்டேன். "இப்ப நான் என்ன செய்ய.....?" என்று 'தம்பி' பட மாதவன் ஸ்டைலில் நானும் வைத்தியரைக் கேட்டேன். அதற்கு அவர், "நீங்க ஒன்றும் செய்ய முடியாது மிஸ்டர் சிவா. நான்தான் ஏதாவது செய்ய வேண்டும்" என்று சொல்லிவிட்டு, தொலைபேசியை எடுத்து எண்களை அழுத்த ஆரம்பித்தார்.



யாருடனோ மிகவும் பொறுப்புடன் அமைதியாகப் பேசிய பின் என்னிடம் சொன்னார், "மிஸ்டர் சிவா, உங்களுக்கு வந்திருப்பது ஒரு சிக்கலான நோய். அதை நாங்கள் சரியான வகையில் அளவிட்டு அறிய வேண்டும். இதற்கென மிகவும் பிரத்தியேகமான பரிசோதனைச் சாலைகளுடன் கூடிய சிறந்த வைத்தியசாலைகள் இருக்கின்றன. துரதிர்ஷ்டவசமாக, ஜேர்மனியிலேயே மூன்றே மூன்று வைத்தியசாலைகள்தான் உண்டு.

அதிலும் அதிர்ஷ்டவசமாக எனது நண்பன் ஒருவன் அந்த வைத்திய சாலைகளில் ஒன்றில், வைத்தியராகப் பணிபுரிகிறான். அவனுடன்தான் இப்போது போனில் பேசினேன். சாதாரணமாக அந்த வைத்தியசாலைக்கு அனுமதி கிடைப்பதற்கு நீங்கள் மாதக் கணக்கில் காத்திருக்க வேண்டும். ஆனால் எனது நண்பன் மூலம் உங்களுக்கு எதிர்வரும் பதினைந்தாம் திகதி அட்மிட்டாக இடம் எடுத்து விட்டேன். என்ன, வைத்தியசாலை இங்கிருந்து 200 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ளது. தூரம்தான் என்றாலும் நீங்கள் அங்கு செல்லத்தான் வேண்டும்" என்று கட்டளை போலச் சொன்னார். 'செய் அல்லது செத்து மடி' என்று மட்டும்தான் அவர் சொல்லவில்லை.

"சென்று.....?" என்று ஈனஸ்வரமாக இழுத்தேன்.

"அங்கே ஒரு 'ஸ்லீப் லாபரட்டரி' ஒன்று உண்டு. அதில் நீங்கள் நித்திரை கொள்ள வேண்டும்"

"அந்த நித்திரையை நான் இங்கு எங்கும் கொள்ள முடியாதா டாக்டர்" என எதுவும் தெரியாத மாதிரி வைத்தியரைப் பார்த்துக் கேட்டேன்.

முட்டாள் ஒருவனை முதல் முறையாகப் பார்ப்பது போல, முக பாவனையை மாற்றிய வைத்தியர் தொடர்ந்து சொன்னார்,

"அந்த வைத்தியசாலையில், நீங்கள் நித்திரை செய்வதைப் பல விதமான கோணங்களில், பலவிதமான கருவிகள் மூலமாக அளப்பார்கள், வீடியோ மூலமாகப் படம்பிடிப்பார்கள். அந்த அளவீட்டின் மூலம், இந்த நோய் உங்களுக்கு எந்த அளவிற்கு பாதித்து உள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம்" என்றார். சவப்பெட்டி ஒன்று என் மனதுக்குள் வந்து சட்டெனப் பயமுறுத்தியதால், உடன் சம்மதித்தேன். மீண்டும் சந்திக்கலாம் என்று (சந்தேகத்துடனேயே) அவர் கைகொடுத்து வழியனுப்பி வைத்தார்.

200 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வைத்தியசாலையை நோக்கி என் பிரயாணம் ஆரம்பமாகியது. நகர்ப்புறங்கள் கழிந்து, படிப்படியாகச் செல்ல வேண்டிய அந்த இடத்தை அண்மிக்க, இயற்கை அழகு நம்மை அரவணைத்து முத்தமிட்டது. அழகான மலைகள் பரந்திருக்கும் பகுதியில், ரம்மியமாக அமைந்த இடங்களினூடாக எனது கார் அந்த வைத்திய சாலையை நோக்கிச் சென்றது. இறுதியில் ஒரு மலையைச் சுற்றிச் சுற்றி மேலே ஏற ஆரம்பித்தேன்.

மலை உச்சியின் முடிவில், கறுப்பு நிறத்தில் உயர்ந்த கோட்டை ஒன்று காணப்பட்டது. அந்தக் கோட்டையின் வாசலை அடைந்தேன். வைத்திய சாலையே அந்தக் கோட்டைக்குள்தான் அமைந்திருந்தது. மிகவும் கட்டுப் பாடான ஒருவித கிருஸ்தவ அமைப்பினால் அந்த வைத்தியசாலை நடத்தப் பட்டு வருகிறது என்பதை அங்கு சென்றதும்தான் கவனித்தேன். வைத்திய சாலைக்கு அருகிலேயே புராதனமான பெரிய சர்ச்சொன்றும் காணப்பட்டது.

கருத்த அங்கி அணிந்து கொண்டு முகத்தையும் மூடியவாறு, முக்காடிட்ட நிலையில் வித்தியாசமான உடை அணிந்தபடி பலர் அங்கும் இங்குமாக நடமாடினர். தவறுதலாக ஹாலிவூட்டில் தயாரிக்கப்படும் பயங்கரப் படப்பிடிப்பின் செட் ஒன்றுக்குள் வந்து விட்டேனோ என்ற சந்தேகம் வந்தது. விசாரித்ததில், அவர்கள் அனைவரும் ஒரு வித்தியாசமான வழியைப் பின்பற்றும் கிருஸ்தவப் பாதிரிமார்கள் என்றும், வைத்திய சாலையுடன் இணைந்து அவர்களுக்குரிய பயிற்சிக் கல்லூரியும் இருக்கிறது என்றும் அறிந்து கொண்டேன். வாழ்க்கையில் முதல் முறையாக இப்படிப் பட்டவர்களைக் கண்டதாலும், அந்த இடம் இருந்த தனிமையான அமைப்பினாலும், ஏதோ இனம் புரியாத ஒருவகைப் பய உணர்ச்சி என் வயிற்றினூடாகப் பரவியது.

வைத்தியசாலைக்குள் நுழைந்தேன். உள்ளே எனக்குப் பெரிய அதிசயம் காத்திருந்தது. வெளியே பழைய கோட்டை போலத் தெரிந்த கட்டடம், உள்ளே ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டல் போலக் காட்சியளித்தது. எனது மனம் ஓரளவு நிம்மதியான நிலைக்கு வந்தது. பதிவுகள் செய்யப்பட்ட பின்னர், சகல வசதிகளுடன் கூடிய பெரிய அறையொன்று எனக்குத் தரப்பட்டது.

அழைத்துச் சென்ற தாதி உட்பட, மணியடித்தால் ஓடி வந்து சேவை செய்ய, தாதிகள் கூட்டமே அங்கு காத்திருந்தது. எனக்குரிய ஆரம்ப வைத்திய நடைமுறைகள் அனைத்தும் நடந்து முடிந்தன. எல்லாம் முடிந்ததும் தலைமை வைத்தியர் என் அறைக்குள் வந்தார். நலம் விசாரித்தார். சம்பிரதாயச் சோதனைகளையும், கேள்விகளையும் முடித்து விட்டு, 'அன்று இரவு, நித்திரை கொள்ளும் சோதனைச் சாலைக்கு நான் செல்ல வேண்டுமெனவும், அங்கு என்னை ஒரு தாதி அழைத்துச் செல்வார் எனவும், நான் எப்போது நித்திரை கொள்ள ஆயத்தமோ, அப்போது அறிவித்தால் என்னை அழைத்துச் செல்வார்கள் எனவும், பரிசோதனைகள் முடிந்ததும் நாளைக்கே நான் மீண்டும் வீட்டிற்குச் திரும்பிவிடலாம்' எனவும் கூறி, மாலை வணக்கத்துடன் கைகுலுக்கி விடை பெற்றார்.

ஏற்கனவே பயணக் களைப்பில் இருந்ததால், அப்போதே நித்திரை கண்களில் நின்று விளையாடியது. கட்டிலில் படுத்துச் சிறிது கண்ணயர்ந்துவிட்டு எழுந்து பார்க்க, நேரம் இரவு ஒன்பது மணியை தாண்டி விட்டிருந்தது. பதறியபடி மணியை அடித்துத் தாதியை அழைத்தேன். மிகவும் அழகான தாதி ஒருவர் வந்து, என்னை நித்திரை சோதனைக்கு அழைத்துச் சென்றார்.

மாடல் அழகிகள் டி.வியில் மட்டும் வருவதில்லை, தாதி உருவத்திலும் வருவார்கள் போல. விமான நிலையங்களில் இருப்பது போல, ஒளி வெள்ளத்துடன் கூடிய மிக நீண்ட ஹாலில், வெகு தூரம் நடந்து சென்று ஒரு சோதனைச் சாலையை அடைந்தோம். அங்கே இன்னுமொரு மாடலிடம், ச்சே...! தாதியிடம் என்னை ஒப்படைத்துவிட்டு அவர் செல்ல, கவலையுடன் இரவு வணக்கம் சொல்லி அவரிடம் இருந்து விடைபெற்றேன்.

அந்தப் புதிய தாதி என்னை அன்புடன் நலம் விசாரித்தார். பெயரை அறிந்து கொண்டார். மங்கிய இருட்டான ஒரு தனியறைக்கு என்னை அழைத்துச் சென்றார். ஜன்னலருகே அமைந்த ஒரு கட்டிலில் என்னைப் படுக்கச் செய்தார். என் உடைகளைக் களைந்துவிட்டு, தலை முதல் கால்வரை அந்தத் தாதி எனக்கு...!

நீங்கள் நினைப்பது போல எதுவும் இல்லை. அவர் தலைமுதல் கால்வரை, உடல் முழுவதும் பல விதமான வயர்களால் என்னை இணைக்க ஆரம்பித்தார். அப்போதுதான் நிமிர்ந்து அறையைப் பார்த்தேன். சுற்றிவரப் பலவிதமான கருவிகள். சுவரின் நான்கு மூலைகளிலும் நவீன வீடியோக் காமராக்கள். என்னென்னவோ சிவப்பு ஒளிக்கீற்றுகள். மங்கலான இருட்டில் அனைத்தும் மின்னிக் கொண்டிருந்தன. வயர்களை இணைத்து முடிந்ததும் தாதி சொன்னார், "நான் விளக்குகளை அணைத்து விட்டு சென்றதும் நீங்கள் நித்திரை கொள்ளலாம். அடுத்து இருக்கும் அறையிலிருந்து நாங்கள், காமராக்கள் மூலமாகவும், கருவிகள் மூலமாகவும் நீங்கள் நித்திரை செய்வதை அவதானிப்போம். உங்களுக்கு எதுவும் தேவையெனின், இந்த பட்டனை அழுத்தினால், நான் உடன் வருவேன்" என்று சொல்லிவிட்டு. நல்ல இரவுடன் விடைபெற்றார்.



நான் நித்திரைக்கு முயற்சித்தேன். முடியவில்லை. வழக்கமாக படுத்தவுடன் வரும் நித்திரை வரமறுத்தது. ஆயிரம் வயர் சுற்றிய அபூர்வ சிந்தாமணியான நான் எப்படி உறங்குவது? வயர்களை அணைத்தபடி உறங்குவது, இதுதான் முதல்முறை என்பதால், நித்திரை வரமாட்டேன் என்று அடம்பிடித்தது. அப்படி, இப்படி உடலை அசைத்துத் தூங்க முயற்சி செய்தேன். அப்போது அறைக் கதவு தட்டப்பட்டு, அந்தத் தாதி அறைக்குள் நுழைந்தார். நுழைந்தவர், 'எனக்கு ஏன் நித்திரை வரவில்லை' என்பது தனக்குப் புரிகிறது என்றும், அதை யோசிக்காதது தன் தவறுதான் என்றும் சொல்லி, அதற்கு மன்னிப்பும் கேட்டுவிட்டு, கட்டிலுக்கு அருகே இருந்த ஜன்னலை நன்றாகத் திறந்து விட்டார். திரைச் சீலையையும் விலக்கி விட்டார். அத்துடன் அவர், "இப்போது நல்ல காற்று வரும். இனி நீங்கள் நிம்மதியாகத் தூங்கலாம்" என்று சொல்லிவிட்டு, மீண்டும் 'நல்ல இரவு' சொல்லி விடைபெற்றாள்.

அவள் சென்றதும் படுக்கையில் படுத்தபடி எனக்கருகே ஆவெனத் திறந்திருந்த ஜன்னலூடாக வெளியே பார்க்கத் திரும்பினேன்.

அய்யோ.....! அங்கே நான் கண்ட காட்சி.....!!

பிரகாசமான சந்திர வெளிச்சத்தில், ஆயிரம் சிவப்பு நிறத்திலான மெழுகுவர்த்திகள் காற்றில் சலசலத்தபடி வரிசையாக எரிய, கறுப்பு மனிதர்கள் எழுந்து நிற்பது போல, வரிசையாக அடுக்கப்பட்ட கல்லறைகள் என்னைப் பார்த்துச் சிரித்தன. அதாவது சவ அடக்கம் செய்யும் இடம். நான் இதற்கு முன்னர் சவ அடக்கம் செய்யும் இடத்திற்குச் சென்றிருக்கிறேன். ஆனால் சவ அடக்கம் செய்யும் இடத்தில் படுத்ததில்லை. கடும் இருட்டில் இவ்வளவு சமீபமாக, சாவாதனமாக நான் இதுவரை சவக்காடுகளைப் பார்த்ததுமில்லை. நான் உறங்கும் அறையை ஒட்டியபடியே தாழ்வான மிகச் சிறிய சுவரொன்று பிரிக்க கைக்கெட்டும் தூரத்தில் கல்லறைகள். 'க்ளோஸ்டர்' என்று சொல்லப்படும் சர்ச்சிற்குச் சொந்தமான அடக்கம் செய்யும் இடம் அது. அவர்களுக்கு அது ஒரு புனிதமான இடம். ஆனால், எனக்கு?

என்னில் இணைத்த வயர்களெல்லாம் குடல்களாகி வாய்க்குள் வந்தது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. கண்னை மூடியபடி என்னை நானே தேற்றிக் கொண்டேன். பயம் கொள்வது ஆணுக்கு அழகில்லையல்லவா? மனதை ஒரு நிலைப்படுத்தினேன். நித்திரை கொள்ள முயற்சித்தேன். ஆனால் கண்ணைத் திறந்து அங்கே பார் பார் என்று மனம் கெஞ்சிக் கொண்டே இருந்தது. முக்காடிட்ட அந்த பாதிரிமார்களின் உருவங்களும், கோட்டையும், நான் பாஅர்த்த 'றாகுலா' படங்களும் ஞாபகத்தில் வருவதைத் தடுக்க முடியவில்லை. விடியும் வரை நான் நித்திரை கொண்டேனா? இல்லையா? என எனக்கே தெரியவில்லை.

விடிந்ததும் தலைமை வைத்தியர் என்னைச் சந்தித்தார். கம்யூட்டர் களில் தெரிந்த வரைவுகளைப் பார்த்தார். புருவம் மேலும் கீழுமாக ஏறி இறங்கியது. அப்புறம் அவர் சொன்னார், "மிஸ்டர் சிவா, கிடைத்த தரவுகள் ஏனோ ஒழுங்கற்றவையாக இருக்கின்றன. எனக்கே இது சற்றுக் குழப்பமாக இருக்கிறது. சில சமயங்களில் கருவிகளின் ஒழுங்கற்ற தொழில்பாட்டால் இவை நடக்கச் சாத்தியம் உண்டு. அது ஏன் என்று எனக்குத் தற்சமயம் புரியவில்லை? எப்படி இருந்தாலும் இந்த முடிவுகளில் எனக்குத் திருப்தியில்லை. மீண்டும் ஒரு முறை நீங்கள் இங்கே வந்து சோதிக்க வேண்டும்" என்றார். அப்போது நான், "அந்த அறை கல்லறைகளோடு சேர்ந்து இருக்கும் வரை உங்களுக்குச் சரியான ரீடிங்குகள் கிடைக்க வாய்ப்பில்லை டாக்டர்" என்று அவருக்குச் சொல்லவில்லை. என் மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு வைத்தியசாலையை விட்டு வெளியே வர, அந்த இயற்கை அழகு ஏனோ என்னை வசீகரிக்கவில்லை. என் கார் வீடு நோக்கித் தன் பயணத்தைத் தொடங்கியது.....!

இந்த இடத்தில், 'இந்தக் கதையில் வரும் பெயர், சம்பவங்கள் யாவும் கற்பனையே! யாரையும் குறிப்பன இல்லை' என்று நான் போட வேண்டும். ஆனால், இப்போது அது முக்கியமல்ல. நம்மை மிரட்டும் இந்த ஸ்லீப் அப்னியா நோயைப் பற்றிய முழு விபரத்தையும் அறிவதே முக்கியமானது. அதையும் நாம் விளக்கமாகப் பார்த்துவிடலாம்.

சாதாரணமாக மனிதன் ஒருவன் சுவாசிக்கும் போது, அவன் வாயின்

Jasmine Flowers

Fragrance of Asia

Imports, Exports, Wholesale, Decor Flowers & Pooja Items

WE ARE THE FIRST ONE TO INTRODUCE INDIAN TRADITIONAL FLOWERS IN CANADA



FLOWERS
FOR
WEDDINGS & TEMPLES
LOOSE, STRINGS AND GARLAND

KARTHIGAI POO, SENBAGA POO,
IXORA (VIRUCHIGA POO), JASMINE,
MULLAI, JATHI MALLI, KANAGAMBARAM,
SAMBANGI, SAMANTHEE, NAGALINGA POO,
ARALI RED, PINK, WHITE & YELLOW
PAN LEAVES, ALLARI, LOTUS PINK & WHITE,
PANNER ROSE, PAVAL MALLI, VADAMALLI,
ROSE PETALS, ERUKUM POO, ARUGAM PULL,
THULSI, VILVUM, MANGO LEAVES, NEEM LEAVES,
BANANA LEAVES & TREE, MARAGHU,
MARIKOLUNTHU, HIBISCUS,
THALAM POO, SANGU POO,
CARNATION FLOWER & CUSTOMER REQUEST

Available Locations

www.jasmineflower.ca

we serve INDIA, USA, EUROPE & AUSTRALIA

WE HAVE now **MOVED** to serve you better

UNIT #10 - 3500 McNicoll Ave, Toronto ON M1V 4C7
Major Intersection : Markham Rd & McNicoll Ave.

Contact : 674.836.9999 / 647.207.4444

SPECIAL OFFER
SMALL CARNATION FLOWERS BOUQUET
$ 2.99
always

SPECIAL OFFER
5 CARNATION FLOWERS
$ 1.00
always

மூலமாகவும், மூக்கின் மூலமாகவும் காற்றை உள்ளே எடுத்து வெளியே விடுகிறான். இந்த மூச்சுக் காற்று சுவாசப் பையை அடையும். மூக்கு, வாய், தொண்டை ஆகியவற்றினூடாகக் காற்றுச் செல்லும் குழாய் போன்ற அமைப்பை பாரிங்ஸ் (Pharynx) என்றழைப்பார்கள். விழித்திருக்கும் நிலையில், நாம் சுவாசிக்கும் காற்று எந்தத் தடையுமில்லாமல், ஆக்சிசனுடன் சுவாசப் பையை அடைகிறது.

ஆனால் நித்திரை கொள்ளும் போது, தொண்டைக் குழாய்ப் பகுதியில் இருக்கும் சவ்வுகள் வளர்திருக்கும் நிலையிலும், உள்நாக்கு என்று சொல்லப்படும் டான்சில்ஸ் (Tonsils) பெரிதாக வளர்ந்த நிலையிலும், இந்தச் சுவாசக் காற்றுச் செல்லும் பாதை குறுகியதாக அடைபட்டிருக்கும். இந்தக் குறுகிய பகுதியினூடாக மூச்சுக் காற்றுச் செல்லும் வேளையில்தான், மனிதன் குறட்டை விடும் செயல்பாடுகள் அதிகமாக காணப்படுகின்றன.

சாதாரணமாக ஒரு சுகதேகி நித்திரை செய்யும் போது, நூறு சதவீதம் ஆக்ஸிசன், மூச்சுக் காற்றினூடாக உள்ளே செல்லும். ஆனால், மேலே சொல்லப்பட்ட காரணங்களினால் குறட்டை விடுபவர்களுக்கு அதை விட மிகக்குறைந்த சதவீதத்திலேயே ஆக்ஸிசன் உடலை அடையும். உணவுச் சமிபாட்டுக்கும், உடல் தொழிற்பாட்டுக்கும் இந்த ஆக்ஸிசன் மிகவும் முக்கியமானது. ஆக்ஸிசன் இரத்தத்தில் குறையும் போது, சமிபாடு மந்தமாக நடைபெறுவதால், சமிபாடடையாத உணவுகள் கொழுப்பாகச் சேமிக்கப்பட ஆரம்பிக்கும். இதனால் உடலின் எடை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கும். அத்துடன் உடலில் மிகவும் சோர்வான நிலையில் எப்போதும் காணப்படும். ஸ்லீப் அப்னியாவின் ஆரம்ப நிலையாக இதைக் கருதலாம்.

ஆனால், இதைவிடக் கடுமையான ஸ்லீப் அப்னியாவும் உண்டு. இதை Obstructive Sleep Apnea என்பார்கள். சிலர் நித்திரை கொள்ளும் போது, அவர்களின் நாக்கு, வாய் போன்ற உறுப்புகள் சற்றே கீழ் நோக்கி அமுத்தப்படும். அப்போது, இந்தப் பாரிங்ஸ் என்னும் குழாய் முற்றாக நெருக்கப்பட்டு, மூடப்பட்டுவும்.

சிறிதளவேனும் மூச்சுக் காற்று உள்ளே செல்ல முடியாதவாறு அது அடைபட்டுக் கொள்கிறது. இப்படி முற்றாக மூச்சுக் காற்று உள்ளே வராமல் அடைபட்டு இருப்பதால், நாம் சுவாசிப்பதை பல நொடிகளுக்கு நிறுத்திவிடுகிறோம். சுவாசிக்காமல் மனிதன் உயிர் வாழ முடியாது அல்லவா? சுவாசப் பைக்கு ஆக்ஸிசன் வரவில்லை என்றதும், அந்தச் செய்தி மூளைக்கு அனுப்பப்படுகிறது. அப்போது மூளை நம்மை நித்திரையிலிருந்து எழுப்பிவிடுகிறது. ஆனாலும் நாம் உறக்கத்தில் இருப்பதாகவே நினைத்துக் கொள்ளுவோம். இப்படி நித்திரை கொள்ளும் போது, மூச்சுக் காற்றுக்காக நம்மை எழுப்பிவிடும் செயல், பல நூறு தடவைகள் நடைபெறும். நானூறு தடவைகளுக்கு மேலே நடைபெறுவது என்பதெல்லாம் சாதாரணம்.

ஒரு முழு இரவுத் தூக்கத்தின் போது, நானூறு தடவை களுக்கு மேல் நாம் தூக்கத்திலிருந்து எழுந்து மீண்டும் தூங்கி னால், உண்மையில் அது ஒரு முழுமையான தூக்கமாக இருக்க முடியாது. அதை ஒரு விழிப்பு நிலை என்றே சொல்லலாம். ஆனாலும் தூங்கிக் கொண்டிருப்பதாக நாம் நினைப்பதுதான் வேதனை. இதனால் விடிந்து எழுந்ததும் அந்த நாள் முழுவதும் நித்திரைக் கலக்கத்துடனே இருந்து கொள்வோம். எந்த இடத்திலும் அந்த நேரத்திலும் தூங்க ஆரம்பிப்போம். அமெரிக்காவில் அதிகப்படியான கார் விபத்துகளுக்கு இந்த ஸ்லீப் அப்னியாவும் ஒரு முக்கிய காரணமாக கருதப்படுகிறது. காரில் செல்லும் போது, நித்திரை கொள்வதால்தான் அதிக விபத்துகள் அங்கே நடக்கின்றன.

சுவாசம் தடைப்பட்டு ஆக்ஸிசன் சுவாசப் பைக்குச் செல்லாமல் விடும் போது மூளைக்குச் செய்தி போகின்றது என்று பார்த்தோமல்லவா? அந்தக் கணங்களில் மூளையில் சிறிய மின்னல் போன்ற அதிர்ச்சித் தாக்குதல் எப்போதும் தோன்றிக் கொண்டே இருக்கும். இந்த மின்னதிர்ச்சி பல காலம் தொடர்ச்சியாக ஏற்படும் நிலையில், திடீரென ஒருநாள் அது பக்க வாத நோய்க்கு அழைத்துச் சென்று விடுகின்றது. அது போல, ஆக்ஸிசன் குறைந்த இரத்தோட்டத்தின் காரணத்தினால், சீரற்ற இதயத் துடிப்புகளும் ஏற்பட ஆரம்பிக்கிறது. இதுவும் என்றாவது ஒருநாள் மரணத்துக்கு இட்டுச் செல்கிறது. ஒருவர் அதிகமாகக் குறட்டை விடுவதும், அதி காலையில் எழுந்ததும் தலையிடி போன்ற உணர்வு இருப்பதும், பகல் நேரத்தில் நித் திரை கொள்ள விரும்புவதும், மிகவும் சோர்வாக இருப்பதும், உடல் எடை அதிகரித்துச் செல்வதும், உடன் கோபமடையும் தன்மையுடையவராக இருப்பதும், கவனக் குறைவுகள் ஏற்படுவதும் இந்த நோயின் முக்கிய அடை யாளங்களாக கருதப்படுகின்றன.

ஸ்லீப் அப்னியாவைக் கவனிக்காமல் விட்டுவிடுவதால், உயர் இரத்த அழுத்த நோய், இதயக் கோளாறுகள், ஒழுங்கற்ற இதயத் துடிப்பு, ஊட்டம் குறைந்த இரத்தம், பக்கவாதம், சர்க்கரை நோய் போன்ற நோய்கள் உருவாகலாம். இதன் அதிகபட்ச முடிவாக இறப்பும் ஏற்படலாம். ஆனால், இதைச் சரியாக கவனித்து அதற்குரிய வைத்தியத்தைச் செய்து வருபவர்கள் என்றும் சுகதேகியாக வாழலாம். பொருளாதார வசதிகள் உள்ள நாடுகளான மேற்குலக நாடுகளில், ஸ்லீப் அப்னியா நோய் உள்ளவர்களுக்கென, காற்றை செலுத்துக் கொண்டே இருக்கும் சிறிய பெட்டி போன்ற கருவியைக் கொடுகின்றனர். இந்தக் கருவியை CPAP (Continuous Positive Airway Presure) என்று சொல்வார்கள். இந்தக் கருவியுடன் இணைக்கப்பட்ட ஒரு மாஸ்க்கைப் (Mask) பொருத்தியபடியே ஸ்லீப் அப்னியா நோயுள்ளவர்கள் எப்போதும் உறங்க வேண்டும். தொடர்ச்சியாகக் காற்று அந்தக் கருவிமூலம் கிடைப்பதால், மூச்சுத் தடைப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்தக் கருவி ஒரு அடி நீளமும், அரை அடி அகலமும் கொண்ட மிகச் சிறிய கருவியாகும். இதை வீட்டில் வைத்தே பயன்படுத்தலாம். இதன் மூலம் எத்தனையோ இறப்புகளையும், பக்கவாத தாக்குதல்களையும் தடுத்திருக்கிறார்கள். ஆனால் இது போன்ற வசதியற்ற நம் நாடுகளில் வசிப்பவர்கள், உடனடியாகத் தங்கள் உடல் எடையைக் குறைப்பதற்கு வழி செய்தே ஆகவேண்டும். அத்துடன் புகைத்தல், மதுவருந்துதல் பழக்கம் இருந்தால் உடன் நிறுத்திவிட வேண்டும். நித்திரை செய்யும் போது, எப்போதும் பக்கவாட்டிலேயே சரிந்து படுக்க வேண்டும். முடிந்தால், டான்ஸில்ஸ் போன்றவற்றை ஆபரேசன் மூலமாக நீக்கி மூச்சுக் காற்று வர வழி வகை செய்யலாம்.

இந்த நோய் பற்றிய விழிப்புணர்வு நம்மக்களிடையே கொஞ்சமும் இல்லாததால், நான் சொன்னதை அவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள். ஆனால் இந்த நோய் பற்றி இணையத்தின் மூலமாகவோ, புத்தகங்கள் மூலமாகவோ அறிந்து கொள்ளும் போது நிச்சயம் அதிர்ச்சியே காத்திருக்கும். இந்த நோயைப் பற்றிய அறியாமையினாலும், அலட்சியத்தினாலும் நம் உறவுகளில் பலரை நாம் இழந்திருக்கிறோம் என்பதைக் கூட நாம் அறிந்து கொள்ளவில்லை என்பதுதான் நிஜம். இனியாவது விழித்துக் கொள்வோம்

"அந்த வைத்தியசாலையில், நீங்கள் நித்திரை செய்வதைப் பல விதமான கோணங்களில், பலவிதமான கருவிகள் மூலமாக அளப்பார்கள், வீடியோ மூலமாகப் படம்பிடிப்பார்கள். அந்த அளவீட்டின் மூலம், இந்த நோய் உங்களுக்கு எந்த அளவிற்கு பாதித்து உள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம்" என்றார்.

வாகன விபத்தா? அழையுங்கள்

ABS MR. P. SINGARAJ

MICHAEL TAYLOR
A PROFESSIONAL CORPORATION

NO COMMISSION FOR HOUSEKEEPING!
NO COMMISSION FOR CARE GIVER!
NO COMMISSION FOR ATTENDANT CARE!
NO COMMISSION FOR INCOME REPLACEMENT!

வாகன விபத்தால் உங்களுக்கு ஏற்படும் இழப்புகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாடி சரியான முறையில் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நீங்கள் அழைக்கப்பட வேண்டியவர் Mr. P. சிங்கராஜ். இவர் உங்களின் நண்பன்.

HONEST AND FRIENDLY SERVICE
CALL: MR. P. SINGARAJ
416-993-8443
905-471-3058

- ராஜ்சிவா

நேரம், காலம்

என்பவற்றை நாம் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறோமா?

"இறந்தகாலம், எதிர்காலம் என்று எதுவுமே இல்லை. அவை இரண்டும் நிகழ்காலத்திலேயே, அதனுடன் ஒன்றாகச் சேர்ந்து இருக்கின்றன. சொல்லப் போனால், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றுமே நாம் நினைப்பது போல இல்லாமல், புகைப்படம் போல உறைந்து போன நிலையில் நமக்கு அருகிலேயே எப்போதும் இருக்கின்றன. நாம்தான் இல்லாத இந்தக் காலங்களையெல்லாம் இருப்பதாகக் கற்பனை பண்ணிக்கொண்டு பூமியில் வாழ்ந்து வருகிறோம்".

என்ன? ஏதாவது ஆன்மீகப் பிரசங்கத்துக்கு வந்துவிட்டது போல இருக்கிறதா? இல்லை, மேலே நான் சொன்னது தத்துவமோ, பிரசங்கமோ கிடையாது. முழுக்க முழுக்க அறிவியலை அடிப்படையாகக் கொண்ட கூற்று அது. அதாவது விஞ்ஞானம் பிரமிக்கும்படியாக வளர்ந்துவிட்ட நிலையில் உருவான நவீன அறிவியல் கூற்று.

"இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் மூன்றையும் நாம் தினசரி வாழ்க்கையிலேயே அனுபவித்துக் கொண்டு வருகிறோம். அனுபவத்திலும் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், இவற்றை இல்லையென்று முட்டாள்தனமான அறிவியல் கூறாதே?" என்று நீங்கள் நிச்சயம் நினைப்பீர்கள். இந்தக் கூற்றின் உண்மைத் தன்மையை உங்களுக்கு நான் முழுமையாகப் புரியவைக்கும் வரை இந்தச் சந்தேகம் உங்களுக்கு இருக்கும். அதனால் இதைப் புரியவைக்க வேண்டுமென்றால் முதலில் அடிப்படையான சில தகவல்களை நான் சொல்லிச் செல்ல வேண்டும். கொஞ்சம் ரிலாக்ஸாக, மூச்சை உள்ளே இழுத்து, வெளிவிட்டு அமைதியாக இதை வாசியுங்கள்.

'ஒளி' ஒரு செக்கனுக்கு 300000 கிலோமீட்டர்கள் தூரம் செல்கிறது (மணிக்கு அல்ல செக்கனுக்கு). இதே வேகத்தில் நாம் ஒரு ரொக்கெட்டில் பயணம் செய்தால், எதிர்காலத்தை அடைய முடியும் என்று நவீன இயற்பியல் சொல்கிறது. இந்தக் கோட்பாட்டுக்கு அடித்தளம் அமைத்தவர் அன்றும், இன்றும் மிகப் பிரமிப்புடன் பார்க்கப்படும் கணிதவியலாளர் அல்பேர்ட் ஐன்ஸ்டைன் (Albert Einstein).

இந்தக் கோட்பாட்டை ஐன்ஸ்டைன் எழுந்தமானமான முறையில் சொல்லிவிடவில்லை. இயற்கை விதிகளுடன் இணைந்த கணிதச் சமன்பாடுகளை முன்வைத்து அறிவியல் உலகம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உலகிற்கு அறிவித்தார். பின்னர், பலவிதமான வெவ்வேறு வகைப் பரிசோதனைகள் மூலம், இந்தக் கோட்பாட்டின் அடிப்படை உண்மையானது தான் என்பதை அறிவியல் உலகம் கண்டுகொண்டது. ஆனாலும் மனிதனால் இதுவரை ஒரு குறித்த அளவுக்கு மேல் வேகம் செல்லக் கூடிய சாதனத்தை உருவாக்க முடியவில்லை.

அதிகபட்சமாக மனிதனால் உருவாக்கப்பட்ட ரொக்கெட்டுகளில், சூரியனின் வட்டப்பாதையை நோக்கி அனுப்பப்பட்ட ஹீலியஸ் (Helios) என்னும் விண்கலமே உயர்வேகம் பெற்றிருக்கிறது. இது கிட்டத்தட்ட மணிக்கு 250,000 கிலோமீட்டர்கள் வேகத்தில் பயணித்தது



(செக்கனுக்கல்ல, மணிக்கு). ஆனாலும் இது மனிதன் இல்லாத ஒரு விண்கலம். மனிதன் அமர்ந்து பயணித்த ரொக்கெட்டின் அதியுயர் வேகம் மணிக்கு 40,000 கிலோமீட்டர்கள் வேகம்தான்.

இந்த வேகங்கள் அனைத்தும் ஒளியின் வேகத்துடன் ஒப்பிடும் போது ஒன்றுமே இல்லை என்று சொல்லலாம். ஆனாலும் மனிதன் என்றோ ஒரு நாள் ஒளியின் வேகத்தில் பயணிக்கும் ஆற்றலைப் பெறுவான் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். ஒருவேளை மனிதன் ஒளியின் வேகத்தில் பயணிக்கும் ஆற்றலை அடைந்தால், அவன் எதிர்காலத்துக்குப் பயணம் செய்வான் என்று சொல்கிறது அறிவியல். இந்த இடத்தில் ஐன்ஸ்டைன் சில சிக்கலான விளைவுகள் பற்றியும் சொல்லியிருக்கிறார்.

ஒரு பொருள் ஒளியின் வேகத்தை அடையும் போது, அதன் எடை கற்பனையே பண்ண முடியாத அளவுக்கு அதிகரித்துக் கொண்டு செல்வதோடு, அதன் உருவம் சிறியதாக குறுகிக் கொண்டே போகும் என்றார். அத்துடன் வேறு பல விளைவுகளையும் சந்திக்க நேரிடும் என்றார். ஒளியின் வேகத்தில் பயணிக்க ஆரம்பிக்கும் போது, இப்படிப்பட்ட விளைவுகளைச் சந்திக்க வேண்டுமென்பதாலேயே, மனிதனால் ஒளியின் வேகத்தை அடையமுடியாது என்ற ஐயமும் பல விஞ்ஞானிகளிடையே இருக்கிறது. ஒளியின் வேகத்தை அடைவது சாத்தியமே இல்லாத ஒன்று என்று அவர்கள் சொல்கிறார்கள்.

ஒளியின் வேகத்தை அடையும்போது ஏற்படும் விளைவுகள் மனிதனைத் தாக்காதவாறு, பாதுகாப்பாக அவன் அமர்ந்து செல்லும் ஒரு இயந்திரத்தைத் தயார் செய்தால், ஒளியின் வேகத்தில் பயணம் செய்யலாம் என்னும் அடிப்படையில், அப்படி ஒரு இயந்திரத்தைத் தயாரிக்க, பலவித முயற்சிகளை நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த வகையில் உருவாக்கப்படும் இயந்திரத்தை, 'கால இயந்திரம்' (Time Machine) என்கிறார்கள். இதுவரை பல வடிவங்களில் கால இயந்திரங்கள் உருவாக்கப்பட்டு, ஒளியின் வேகத்தில் பயணித்து இருக்கின்றன. ஆனாலும் அவையெல்லாம் ஹொலிவூட் திரைப்படங்களில் மட்டும் தான். நிஜத்தில் அது இன்னும் சாத்தியப்படவில்லை.

"அப்படியென்றால், மனிதனால் கால இயந்திரம் ஒன்றை உருவாக்கவே முடியாதா?" என்று நீங்கள் கேட்டால், 'முடியும்' என்றுதான் விஞ்ஞானிகளிடமிருந்து பதில் வருகின்றது.

"இன்றைய திகதியில் உள்ள அறிவியல் கண்டுபிடிப்புகளில் மனிதனால் அது சாத்தியமில்லாமல் இருக்கலாம். ஆனால் நாளைய மனிதன் அதைக் கண்டுபிடித்தே தீருவான்" என்கிறார்கள். அதற்கு அவர்கள் சுட்டிக் காட்டுவது அண்டத்தின் பரந்த வெளியெங்கும் பரவிக் கிடக்கும் 'கருஞ்சக்தி' (Dark Energy), 'கரும்பொருள்' (Dark Matter) இரண்டையும்தான்.

இந்தப் பிரபஞ்ச வெளியெங்கும் உள்ள நட்சத்திரங்கள், நெபுலாக்கள், கெலக்ஸிகள் அனைத்தையும் ஒன்று சேர்த்தால், பிரபஞ்ச வெளியின் 4% அளவிலேயே காணப்படுகின்றன. எஞ்சியிருக்கும் 96% பிரபஞ்சவெளியில், 70% அளவில் டார்க் எனர்ஜியும், 26% அளவில் டார்க் மேட்டர்களும் நிறைந்திருக்கின்றன என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

"அப்படி என்னதான் விசேசம் இருக்கிறது இந்த டார்க் எனர்ஜியில்?" என்று நீங்கள் கேட்டால், அதற்கான பதில் உங்களை ஆச்சரியப்பட வைக்கும். இதுவரை பூமியில் எரிசக்தி முதல் மின்சக்தி வரையுள்ள அனைத்து சக்திகளையும் பெற, நாம் பெற்றோலியத்தையும், காற்றையும், நீரையும், சூரியனையும் நம்பி வந்தோம். சமீபத்தில் அதனுடன் அணு உலையும் இணைந்தது. இவற்றின் உதவியுடன் நாம் பூமிக்குத் தேவையான சக்திகள் அனைத்தையும் ஓரளவுக்குப் பெற்று வருகிறோம். இருந்தாலும் தட்டுப்பாடு என்பது இருந்து கொண்டே இருக்கிறது.

ஆனால் டார்க் எனர்ஜியை எடுத்துக் கொண்டால், ஒரு லீட்டர் கனவளவுள்ள டார்க் எனர்ஜியின் மூலம், உலகத்தில் உள்ள அனைத்து நாடு களுக்கும் நூறு வருடங்களுக்கு தடையில்லா மின்சாரம் தொடர்ந்து கொடுக்க முடியும் என்கிறார்கள். என்ன பிரமிப்பாக இருக்கிறதா? இந்த அளவுக்கு வீரியமான டார்க் எனர்ஜி, அண்டம் முழுவதும் வெறுமனே பரவியிருக்கிறது. அவற்றின் மொத்த சக்தியை நீங்களே கணித்துக்கொள்ளுங்கள். இவை அண்டத்தில் பரவி இருப்பதால், நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு அதிசய நிகழ்வை நாம் பார்த்துவிட்டு மேலே செல்லலாம்.

'பிக்பேங்க்' (Bigbang) என்னும் பெருவெடிப்பின் மூலம் அண்டம் உருவாகியது என்பதை அறிந்திருக்கிறோம். அந்த ஆரம்ப வெடிப்பின் போது ஏற்பட்ட பெருவிசையினால், அண்டம் இன்றுவரை விரிவடைந்து கொண்டே செல்கின்றது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அண்டத்தின் எல்லையில் உள்ள நட்சத்திரங்களையும், காலக்ஸிகளையும் அவதானித்த 'எட்வின் ஹுபிள்' (Edwin Hubble) என்னும் வானவியல் ஆராய்ச்சியாளர் அவை விலகிச் செல்வதைக் கண்டார் (இவரின் ஞாபகார்த்தமாகவே விண்வெளியில் விடப்பட்டிருக்கும் தொலை நோக்கிக் கருவிக்கு 'ஹுபிள் தொலைநோக்கி' என்று பெயரிட்டிருகிறார்கள்).

மிக மிகத் தொலைவிலிருந்து வரும் ஒளி, நம்மை நோக்கிய திசையில் பயணித்தால் நீல நிறமாகவும், நம்மை விலகிய திசையில் பயணித்தால் சிவப்பு நிறமாகவும் நிறச் சிதறலடையும். இதைச் 'செவ்வொளி விலகல்' (Redshift) என்பார்கள். இந்தச் செவ்வொளி விலகல் அவதானிப்பின் மூலம், அண்டம் இன்றும் விரிவடைந்து கொண்டு செல்கின்றது என்று ஹுபிள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

13.7 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற வெடிப்பு ஏற்படுத்திய விசையே இன்றும் அண்டம் விரிவடைந்து செல்லக் காரணம் என்று நம்பிய விஞ்ஞானிகளுக்கு வேறு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. ஆரம்ப வெடிப்பினால் ஏற்பட்ட விசையினால் அண்டம் விரிவடையுமானால், அவை விரிவடைந்து செல்லும் வேகம் படிப்படியாகக் குறைந்து, ஏதோ ஒரு கட்டத்தில் நின்றுவிட வேண்டுமல்லவா? ஒரு பந்தை பெரும் விசையுடன் மேல் நோக்கி நீங்கள் தூக்கியெறிந்தால், அந்த விசையின் சக்தி படிப்படியாகக் குறைந்து பூச்சியமாகி பந்து கீழே விழ வேண்டுமல்லவா? அதுபோல, அண்டமும் என்றாவது ஒருநாள், தன் விரிவடையும் வேகத்தைக் குறைத்துப் பூச்சியத்தை அடைய வேண்டும். ஆனால் நடந்து கொண்டிருப்பதோ வேறு. அண்டம் விரிவடையும் வேகத்தைக் குறைப்பதற்குப் பதில், அதிகரித்துக் கொண்டு செல்கிறது. அதாவது அண்டம் 'ஆக்ஸிலரேசன்' (Acceleration) பெற்று, மேலும் வேகத்தை அதிகரித்து, விரிவடைந்து சென்று கொண்டே இருக்கிறது. இது நம்பவே முடியாத, சாத்தியமே இல்லாத ஒன்று. இதை அவதானித்த விஞ்ஞானிகள் பிரமித்துப் போய் இருக்கின்றனர்.



அண்டம் விரிவடைவதற்குரிய வேக வளர்ச்சியைக் கொடுப்பது யார்? இதை ஆராய்ந்த போதுதான் 'டார்க் எனர்ஜி' பற்றிய அறிவு கிடைக்கப் பெற்றது. டார்க் எனர்ஜி மிகவும் வீரியம் வாய்ந்த ஒரு சக்தி. பூமியில் அதற்கு இணையான ஒரு சக்தி கிடையவே கிடையாது. இந்த டார்க் எனர்ஜியை மனிதன் எப்போது கையாளும் வகையில் தன் விஞ்ஞான அறிவைப் பெற்றுக் கொள்கிறானோ, அப்போது ஒளியின் வேகத்தில் பயணிப்பது என்பதெல்லாம் வெகு சுலபமான காரியமாக ஆகிவிடும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். அந்தக் காலமும் வெகு தொலைவில் இல்லை என்பது போலத்தான் தெரிகிறது.

ஒளியின் வேகத்தில் பிரயாணம் செய்யும் மனிதன், எதிர்காலத்துக்குப் பயணம் செய்யலாம் என்ற கோட்பாட்டைத் தந்த ஐன்ஸ்டைன், இறந்தகாலத்துக்கு மனிதனால் எப்படிப் பயணம் செய்யலாம் என்பதையும் சொல்லியிருக்கிறார்.

இறந்தகாலத்துக்குச் செல்லும் வாசல் கதவாக நமக்கு

ஐன்ஸ்டைன் திறந்து விட்டுச் சென்றது வினோதமான ஒன்றை. அதன் பெயர் 'புழுத்துளை' (Wormhole) என்பதாகும்.

அண்டத்தில் இருக்கும் இரண்டு வெளிகளைப் புழுப்போன்ற குழாய் வடிவிலான ஒன்று இணைத்து வைத்திருக்கிறது என்று ஐன்ஸ்டைன் வழமை போல கணிதத் தரவுகள் மூலம் நிறுவியுள்ளார். அண்டம் என்பது வளைந்த நிலையிலேயே இருக்கிறது என்றும் அப்படி வளைந்திருக்கும் பகுதிகளில் குழாய் போன்ற அமைப்பின் மூலம் பல ஒளியாண்டுகள் இடைவெளி தூரத்திலிருக்கும், ஓரிடத்திலிருந்து அடுத்த இடத்துக்கு சொற்ப நேரத்துக்குள் சென்று விடமுடியும் என்றும் ஐன்ஸ்டைன் கருதினார். இந்த அடிப்படையில், நமது மூதாதையர்கள் வாழ்ந்து வந்த இறந்த காலத்துக்கும் நம்மால் பயணிக்க முடியும் என்பதை அவர் கோட்பாட்டு ரீதியில் நிரூபித்தார்.

நவீன இயற்பியலின்படி, இந்த வோர்ம்ஹோலை அண்டத்தின் எந்த இடத்திலும் நம்மால் உருவாக்க முடியும். வோர்ம்ஹோலின் வாசல் என்பது அணுக்கருவின் அளவுக்கு மிகச் சிறியதாகத்தான் இருக்கும். அதை மிகப் பெரிய சக்தியைக் கொடுத்துத் திறந்தால், மனிதன் பிரயாணம் செல்லும் அளவுக்கு பாரிய ஒரு துளையாக அது திறக்கும். அதனுள் நுழைந்து அண்டத்தின் அடுத்த வெளிக்கு நம்மால் சுலபமாகச் சென்றுவிட முடியும்.

கேட்பதற்கு அம்புலிமாமா கதை போலவும், ஹாரி போட்டர் கதை போலவும் தெரியும் இந்த வோர்ம்ஹோல் கதை, அறிவியல் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட மனித சாத்தியமுள்ள ஒரு கதைதான்.

ஆனால், அணுக்கருவின் அளவு சிறியதாக இருக்கும் வோர்ம்ஹோலின் ஒரு முனையைத் திறக்கத் தேவையான சக்தி மனிதனிடம் இன்றைய விஞ்ஞானத்தின் நிலையில் கைவசம் இல்லை. ஆனால் எப்போது மேலே சொல்லப்பட்ட 'டார்க் எனர்ஜி' என்பது மனிதனின் கைவசப்படுகிறதோ, அப்போது இதுவும் சாத்தியமாகிவிடும். வோர்ம்ஹோல் வாசல்களும் திறக்கப்படும். இறந்தகாலங்களும் வசமாகிவிடும்.

நான் இந்தக் கட்டுரை மூலம் உங்களுக்கு சொல்ல வந்தது, மனிதனால் இறந்தகாலத்துக்கோ, எதிர்காலத்துக்கோ பயணம் செய்ய முடியும் என்ற கோட்பாட்டைப் புரிய வைக்க அல்ல. எனது நோக்கமே வேறு.

ஒளியின் வேகத்தில் பயணம் செய்வது, வோர்ம் ஹோலினூடாகப் பயணம் செய்வது, இறந்தகாலம், எதிர்காலம் ஆகியவற்றிற்குப் பயணம் செய்வது என அனைத்தும் இன்றுவரை கோட்பாடுகளாகத்தான் இருகின்றன. ஆனாலும் அவை சாத்தியமாகத் தேவைப்படும் அறிவியல் வளர்ச்சியை மனிதன் எட்டவில்லை.

என்றாவது ஒருநாள் அந்த வளர்ச்சியை மனிதன் அடைவான். அப்போது, அவனால் இறந்தகாலத்துக்கும், எதிர்காலத்துக்கும் பயணம் செய்ய முடியும் என்பதில் ஐயமில்லை.

ஒளியின் வேகத்தை மனிதனின் இன்றைய நிலையில் அடைய முடியாது, வோர்ம்ஹோலை மனிதனால் திறக்க முடியாது என்றுதான் இதை மறுக்கும் விஞ்ஞானிகளில் சிலர் சொல்கிறார்களேயொழிய, ஒளியின் வேகத்தை அடைந்தால் எதிர் காலத்தை அடைய முடியும் என்பதை அவர்களும் மறுக்கவில்லை.

ஆகையால் எதிர்காலத்துக்கு செல்லலாம், இறந்தகாலத்துக்குச் செல்லலாம் என்பது அறிவியலின்படி பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விசயமாகிறது.

இந்த நிலையில்தான், நான் இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் சொன்ன கூற்றுக்கு மீண்டும் வருகிறோம்.

மனிதனால் இறந்தகாலத்துக்கும், நிகழ்காலத்துக்கும் செல்ல இயலுமோ? இயலாதோ? என்பது ஒருபுறமிருக்க, செல்லலாம் என்ற முடிவை மட்டும் நாம் எடுத்துக் கொண்டால், இந்தக் கணத்தில் நாம் சென்றடையும் நிலையில்தான் இறந்தகாலமும், எதிர்காலமும் இருக்கிறது என்பது அர்த்தமாகிறது.

இந்தக் கணத்தில் என்னால் 5000 ஆண்டுகளுக்கு முன்னால் உள்ள இறந்தகாலத்துக்குச் செல்ல முடியும் என்றால், அது எப்படி இறந்தகாலம் ஆக முடியும்?

அது போல, இனிவரும் 4000 ஆண்டு எதிர்காலத்திற்கு என்னால் இந்தக் கணமே செல்ல முடியும் என்றால் அது எப்படி எதிர்காலம் ஆக முடியும்? இறந்தகாலமும், எதிர்காலமும் இன்றே அடையும் நிலையில்தான் இருக்கின்றன என்றல்லவா அர்த்தமாகிறது.

நேற்று, முந்தாநேற்று, கடந்த வருடம், நான் பிறந்த வருடம், யேசுநாதர் பிறந்த வருடம் என எல்லாக் காலங்களுக்கும் இப்போதே நான் பயணம் செய்ய முடியும் எனின், அந்த ஒவ்வொரு நாட்களும் இன்று நிகழ்காலத்திலேயே, உறைந்த நிலையில் இருக்கிறது என்றுதானே அர்த்தம்.

அதாவது ஆயிரம் ஆயிரம் ஆண்டு காலங்களாக நடந்து முடிந்த ஒவ்வொரு நாட்களும், அவற்றின் ஒவ்வொரு கணங்களும், ஒரு போட்டோப் பிரதியைப் போல பதிந்தபடி இருக்கிறது என்றாகிறதல்லவா? அதுபோல எதிர்காலத்தில் நடக்கப் போவதும் ஏற்கனவே நடைபெற்ற நிகழ்வுகளாக, போட்டோப் பிரதிகளாக பதியப்பட்டு இருக்கின்றன என்றாகிறதல்லவா?

இப்போது நீங்கள், "போட்டோக்களாக உறைந்த நிலையில் இருப்பதாக சொல்வது நமது வாழ்க்கையைப் பற்றியது. வாழ்க்கை என்பது ஒரு வீடியோக் காட்சி போல இயங்கும் நிலையில் நடைபெறுவதல்லவா? அப்படி என்றால், அவை எப்படிப் போட்டோப் பிரதிகள் போல இருக்க முடியும்?"



என்று கேட்கலாம். ஆனால், ஒரு வீடியோப் படக்காட்சியோ, திரைப்படமோ அசையும் நிலையில் நமக்குத் தெரிந்தாலும், அவை ஒவ்வொன்றும் தனித் தனிப் படங்கள்தான். ஒரு செக்கனுக்கு 24 போட்டோக்களை இயங்க வைத்தால், நகரும் வீடியோக் காட்சிகளை நாம் பார்க்க முடியும்.

அதுபோல, ஒவ்வொரு கணத்திலும் நடைபெறும் அண்டத்தின் அனைத்துக் காட்சிகளும் போட்டோ பிரதிகளாக பதிவு செய்யப்பட்டு இயங்கும் காட்சிகளாக நம்மை நம்ப வைக்கிறது.

கேட்கும் போது நம்பவே முடியாத பிரமிப்பான கட்டுக்கதை போல இது தெரிந்தாலும், இறந்த காலத்துக்கும், எதிர்காலத்துக்கும் மனிதனால் பயணம் செய்ய முடியும் என்ற கோட்பாடு இருக்கும் வரை, இந்தக் கட்டுக்கதை உண்மையாக இருக்கச் சாத்தியம் நிறையவே உண்டு.

இப்போது நான் ஆரம்பத்தில் கூறியதை மீண்டும் படித்துப் பாருங்கள்.....!

"இறந்தகாலம், எதிர்காலம் என்று எதுவுமே இல்லை. அவை இரண்டும் நிகழ்காலத்திலேயே, அதனுடன் ஒன்றாகச் சேர்ந்து இருக்கின்றன. சொல்லப் போனால், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றுமே நாம் நினைப்பது போல இல்லாமல், புகைப்படம் போல உறைந்து போன நிலையில் எப்போதும் இருக்கின்றன. நாம்தான் இல்லாத இந்தக் காலங்களையெல்லாம் இருப்பதாகக் கற்பனை பண்ணிக்கொண்டு பூமியில் வாழ்ந்து வருகிறோம்".

என்ன புரிகிறதா.....?

இதுபோன்ற இன்னும் பல அதிசயங்களை உள்ளடக்கி வைத்திருக்கிறது நமது பேரண்டம். அதுபற்றி அடுத்து வரும் இதழ்களில் காணலாம்.

சிவமயம்
பிள்ளையார் துணை

SHANKAR & CO

இறக்குமதியாளர்கள் மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

இறக்குமதி செய்யப்பட்ட
இந்திய, இலங்கைப் பொருட்கள்
சமையலறைப் பொருட்கள்
பூஜைப் பொருட்கள்
பூஜை தீரவியங்கள்
திருமணம்
பூப்புனித நீராட்டு வைபவம்
அரங்கேற்றம்
மரணச் சடங்குகளுக்கான
பொருட்களுக்கும் மற்றும்
அனைத்து வைபவங்களுக்கும்
இன்றே நாடுங்கள்

கெணடி & எக்லிங்ன்ரன் சந்திப்புக்கருகாமையில்

சங்கரி & கோ

Tel : 416 759 5100 / 416 759 4916 / 416 305 1832
2425 Eglinton Ave East unit #6 Scarborough
ON M1K 5G8 (Kennedy & Eglinton)

தளிரிலிருந்து அவசியம் தெரிந்து கொள்ளுங்கள்

வாழ்க்கையின் பயணத்திற்கு பயனுள்ள குறிப்புக்கள்:

– சாணக்கியர் –

* பிறரின் தவறுகளில் இருந்து நீங்கள் கற்றுக்கொள்ளுங்கள். அந்தத் தவறுகளை நானும் செய்துதான் கற்றுக்கொள்வேன் என்றால், அதற்கு உங்கள் ஆயுள் போதாது.

* அளவுக்கதிகமாக நேர்மையுணர்வைக் கடைப்பிடிக்கக் கூடாது. நேரான மரங்களே முதலில் வெட்டப்படுவதைப் போன்று, அளவுக்கதிகமாக நேர்மையாக இருப்பவர்களே முதலில் ஒதுக்கப்படுகிறார்கள்.

* விஷமில்லாத பாம்பாகவே இருந்தாலும், அது கொடியதாகக் காட்டிக்கொள்ளவேண்டும்.

* எந்தவொரு நட்பின் பின்னணியிலும் சுயவிருப்பம் என்ற ஒன்றும் பிணைந்திருக்கிறது. சுயவிருப்பம் இல்லாத நட்பு என்பதே இல்லை. கசப்பாயிருந்தாலும், இதுதான் உண்மை.

* ஒரு வேலையைத் துவங்குமுன், உங்களை நீங்களே மூன்று கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள். நான் ஏன் இதைச் செய்ய வேண்டும், இதன் விளைவு என்னவாக இருக்கும், என்னால் இந்த வேலையை வெற்றிகரமாக முடிக்க முடியுமா என்பனவே இந்த மூன்று கேள்விகளுமாகும். இந்த மூன்று கேள்விகளுக்கும் திருப்தியான பதில்கள் உங்களிடம் இருந்தால் மட்டும் அந்த வேலையை ஆரம்பியுங்கள்.

* எப்போதெல்லாம் பயம் உங்களை நெருங்கி வருகிறதோ, அப்போதே அந்த பயத்தை தகர்த்தெறிந்துவிடுங்கள்.

* இந்த உலகின் மிகப்பெரும் சக்தி, இளமையும், ஒரு பெண்ணின் அழகும்தான்.

* ஒரு வேலையைச் செய்ய ஆரம்பித்து விட்டால், அது தோல்வியைத் தருமோ என்று பயப்படவோ, அந்த பயத்தினால் அந்த வேலையைக் கைவிட்டுவிடவோ முயலாதீர்கள். உண்மையாக உழைப்பதிலும் ஒரு மகிழ்ச்சி உங்களுக்குக் கிடைக்கும்.

* மலர்களின் நறுமணம், காற்று வீசும் திசையில் மட்டுமே பரவும். ஆனால், ஒரு மனிதனின் நற்குணம் எல்லாத் திசையிலும் பரவும்.

* கடவுள்கள் கோவில்களில் மட்டுமோ அல்லது சிலைகளில் மட்டுமோதான் இருப்பதில்லை. உங்கள் உணர்வுகளே கடவுள். உங்கள் ஆன்மாவே ஆலயம்.

* மனிதன் எண்ணங்களாலேயே உயர்கிறான். பிறப்பால் அல்ல!

* உங்கள் தரத்திற்குக் குறைவான அல்லது உங்கள் தரத்தை விட உயர்ந்த இடத்தில் நட்புப் பாராட்டாதீர்கள். ஏனெனில், அம்மாதிரியான நட்புக்கள் உங்களுக்கு எப்போதும் மகிழ்ச்சியைத் தரமாட்டா.

* உங்கள் குழந்தையை, முதல் ஐந்து வருடங்களுக்கு, உங்களது அன்புக்குரியவளா(னா)கச் சீராட்டுங்கள். அடுத்த ஐந்து வருடங்களுக்கு அவர்களைத் திட்டுங்கள். அவர்கள் பதினாறு வயதை எட்டும்போது உங்கள் நண்பனாக அவர்களை நடத்துங்கள். வளர்ந்த பிள்ளைகள் தான் உங்களது மிக நெருங்கிய நண்பர்கள்.

* பார்வையற்றவருக்கு எந்தளவுக்கு ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி உதவுமோ அதேயளவுதான் ஒரு முட்டாளுக்கு புத்தகங்கள் உதவும்.

* கல்வியே மிகச் சிறந்த நண்பன். கல்வியிற் சிறந்தவனுக்குச் செல்லுமிடமெல்லாம் சிறப்பு. கல்வித் தகைமை, அழகையும், இளமையையும் தோற்கடித்துவிடும்.

– வில்லியம் ட்யூரண்ட் –

* உடலையும் உள்ளத்தையும் துப்புரவாக்கிக் கொண்டபின் உன் யோசனையைத் தொடங்கு. உன் குளியலறையை நீயே சுத்தம் செய்து நன்றாக வைத்துக் கொள்.

* காலையில் எழுந்ததும் உன் அறையைவிட்டு வெளியே வரும்போது உன்னுடைய அழுக்கு உடைகளைத் துவைப்பதற்காகத் தனிக் கூடையில் போட மறக்காதே.

* நன்றாக ஆடை உடுத்திக் கொள். புது நபர்கள் நம்மை நெருங்கிப் பழகி அறிந்து கொள்வதற்கு முன்பு நம் உடையைப் பார்த்துத்தான் நம் தரத்தை எடை போடுகிறார்கள். மதிப்புள்ள பிரமுகர்களின் கருத்து நம் உயர்வுக்கும் நல்வாழ்வுக்கும் வகை செய்கிறது.

* தினமும் குடும்பத்திலோ வெளியிலோ மற்றவர்களுடன் பழகத் தொடங்கும்போது புன்சிரிப்போடு இரு; அப்படியே பழகு. உன் குறைகளைக் குறைவாகவும் உன் நிறைகளை அதிகமாகவும் எண்ணி மகிழ்ச்சி கொள்.

* மற்றவர் பேசும்போது நீ குறுக்கே பேசாதே; உனக்குப் பேச வாய்ப்புக் கிடைக்கும்போது பேசு; பணிவாகவே பேசு. வம்பு வளர்க்கும் வாக்குவாதத்தில் இறங்காதே.

* உண்மையை ஏற்றுக் கொள்,

* எல்லோரிடமும் பண்போடு கண்ணியமாகப் பழகு. விட்டுக் கொடுக்கவும் உதவவும் தயாராக இரு. முக்கியமாக உன் விரோதிகளிடத்தில் இவற்றைத் தவறாது மேற்கொள்.

* பண்படாத பயனில்லாத தீங்கு தரும் சொல், செயல், காட்களை மிக மிகக் குறைவாகவே அணுகு. உன் மூளைக்கு ஏற்றபடிதான் உன் புத்தி அமையும். உன் மூளையைக் குப்பைத்தொட்டியாக்கிக் கொள்ளாதே.

* தினமும் ஏதாவது நல்ல விஷயத்தைப் படித்துக் கொண்டு வா. இப்படியே படித்துப் படித்து முடிந்தவரையில் கல்வியறிவை வளர்த்துக் கொண்டே இரு.

* வெளிக்குப் பணிவுள்ளவனாகவும் உள்ளுக்குள் தன்மானம் நிரம்பியவனாகவும் இரு. பணிவினால் அக்கம்பக்கத்தாரிடமும் புதியவர்களிடமும் நல்ல பெயர் எடுப்பது எளிது.

* கடுமையான வழியும் வேண்டாம். எளிமையான வழியும் வேண்டாம். நடுத்தர வழியில் முன்னேறு. வெற்றிக்கு எளிய வழி இதுதான்.

நகரசபை தேர்தலில் நம்மவர்களை தெரிவு செய்ய ஒன்று பட்ட தோழமையாய் தோழ் கொடுப்போம் .

Elect

JOSEPH (MOHAN) REMISIAR

Councillor Candidate –Ward 8 – Markham

Joseph (Mohan) Remisiar is one of Markham's foremost and recognized community builders. Joseph's professional and community accomplishments show his dedication and leadership as a community builder and social activist.
Joseph's current involvements with our communities are as follows:
President- Markham Tamil Organization, President- Milliken Mills Lions Club, President- Aldergrove Rate Payers Association, Chair- Catholic School Council- St Benedict CES, Park Ambassador- City of Markham.
VOTE for Joseph (Mohan) Remisiar on October 27th, 2014 to elect him for Council in ward 8, Markham
For further information, please visit www.josephremisiar.ca or call 416-528-0372, or Email: info@josephremisiar.ca

நான் உங்கள் தோழன் ஜோசப் மோகன் ரெமிசியர். என்றும் உங்களுடன் கைகோர்த்து செயல்பட மார்க்கம் நகரசபை தேர்தலில் போட்டியிடுகிறேன் வாட் இல 8 , எனவே உங்களது ஆதரவினை எனக்கு வழங்குங்கள் .அன்போடு உங்கள் தோழன் நன்றி.

"நான் உங்கவீட்டுப்பிள்ளை"!
உங்களுக்கு சேவை செய்ய
என்னைத் தெரிவு செய்யுங்கள்!

பாலசந்திரன் நிரஞ்சன்

Elect

CITY COUNCILLOR WARD 37
SCARBOROUGH CENTRE

BALACHANDRAN NIRANJAN

VOTE FOR ME ON OCT 27 2014

416-752-6999
info@niranjan.ca
Ab Ranjan niranjan.ca

Everything is possible, Change is in your hand.

VOTE FOR THE CHANGE DON'T VOTE FOR THE SAME

நீங்கள் அனைவரும் அறிந்திருக்கின்றபடி எதிர்வரும் ஒக்டோபர் 27, 2014 திங்கட்கிழமை, டொறொன்றோ மாநகராட்சி தேர்தல் நடைபெற இருக்கின்றது. உங்களின் பிரதிநிதியான நான், ஸ்கார்பரோ மத்திய தொகுதி வேட்பாளனாக 37ஆம் வார்டில் போட்டியிடுகிறேன். எனக்கு நீங்கள் வாக்களித்து என்னை வெற்றியடையச் செய்து, நமது தமிழ் அன்னையின் புகழை கனடா முழுவதும் பரவச் செய்ய உதவுமாறு சிரம் தாழ்த்தி பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறேன். நீங்கள் எனக்கு கட்டளையிடுங்கள்! நான் உங்களுக்கு சேவை செய்கிறேன்.!!

சிறுவர்களுக்கான பகுதி

பூந்தளிர்

உலகப் பிரசித்தி பெற்றோர், உலக சுவைமிகு தகவல்கள், சிறுவர் நிகழ்வுகள், பிறந்தநாள், புகைப்படங்கள் என்பன 3 மாதங்களுக்கொருமுறை வெளிவரும். தளிர் சஞ்சிகையில் நீங்களும் இப்பகுதியுடன் இணைந்து கொள்ளுங்கள்.

உண்மை அன்பு உடையவர்களாக வாழுங்கள்!

மூர்த்தி மாமா

அன்புத் தம்பி தங்கையர்களே!

நீங்கள் அனைவரோடும் உண்மையான அன்புடன் பழகுங்கள். உங்களை பத்து மாதம் வயிற்றினில் சுமந்து பெற்று, வளர்த்தவர்கள் உங்களது அன்னையர்கள். உங்களை அரவணைத்து தாய் பால் ஊட்டி அன்புடன் வளர்த்து எடுத்தவர்கள் அன்னையர்கள். அதனால் நீங்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆகிவிட்டால் அன்னையர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அதனால் தான் பிள்ளைகள் மே மாதத்தில் அன்னையர் தினத்தை கொண்டாடி வருகின்றனர். அன்றைய தினத்தில் தமது தாய்மார்களுக்கு அன்பளிப்புகளை வழங்கி மகிழ்ச்சி அடைகின்றனர்.

அன்னையாரிடம் மாத்திரமல்ல தம்பி தங்கையர்களே உங்களது நண்பர்கள், அக்கம் பக்கத்தில் வசிப்போர்கள் ஆகியோரிடம் நீங்கள் அன்பு செலுத்த வேண்டும். அத்துடன் வளர்ப்புப் பிராணிகளான நாய், பூனை, பச்சைக் கிளி ஆகியவற்றின் மீதும் நீங்கள் அன்பு செலுத்த வேண்டும்.



நீங்கள் அனைவரோடும் அன்புடன் நடந்து கொண்டால் அவர்களும் உங்கள் மீது அன்பு செலுத்துவார்கள். அதனால் உங்களுக்கு எதிரிகளோ, பகைவர்களோ இன்றி நீங்கள் மகிழ்ச்சியுடன் வாழலாம்.

பிறரிடம் அன்பு செலுத்துவது எப்படி என்று யோசிக்கிறீர்களா? முதலில் பொய் பேசாது, களவு செய்யாது, நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். அத்துடன் பிறருக்கு கஷ்டம், துன்பம் வரும்போது நீங்கள் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

சிறுவர்களாகிய நாங்கள் பெரியவர்களுக்கு எவ்வாறு உதவி செய்ய முடியும் என்று யோசிக்கின்றீர்களா? வயது போன தாத்தா ஒருவர் வீதியிலே விழுந்து கிடப்தை நீங்கள் கண்டு விட்டீர்கள். அவருக்கு உதவி செய்ய உங்களால் முடியாது. ஆனால் அதனை உங்கள் அப்பாவிடமோ அல்லது வேறு எவரிடமோ சொல்லி உதவி செய்யுமாறு கூறலாம் அல்லவா?. அவர்கள் தாத்தாவுக்கு உதவி செய்வார்கள். அதனால் அவருக்கு உதவி செய்த பெருமை உங்களு க்கு தான் சேரும்.

கடவுளும் உயிரினங்கள் மீது உண்மையான அன்பு வைத்துள்ளார். அதனால் உண்மையாக நடந்து கொள்ளும் உயிரினங்களுக்கு அவர் உதவி செய்வார். ஆனால் பிறருக்கு உதவி செய்யாமல் துன்பம் செய்வோரை இறைவன் தண்டிப்பார்.

எனவே நீங்கள் தண்டனை பெறாது இன்பமாய் வாழ்வதற்கு பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டியது அவசியம். அன்பு தான் கடவுள். நீங்கள் பிற உயிர்கள் மீது உண்மையான அன்பு வைத்தால் கடவுளையே நேரில் காணும் பாக்கியத்தை பெறுவீர்கள்.

அதனால் தான் "உண்மை அன்பை உடையவரே உலகை அளந்த பெருமானை அண்மையாகக் கண்டி டுவர் அல்லார் காணார் காணாரே" எனப் பாடியுள்ளனர்.

தெனாலிராமன்

சுமார் நானூற்று எண்பது வருடங்களுக்கு முன் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஒரு சிற்றூரில் ஓர் ஏழை அந்தணர் குடும்பத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அவனுக்குத் தெனாலிராமன் என்று பெயர் சூட்டினர். தெனாலிராமன் இளவயதிலேயேதந்தையை இழந்ததால், அவனும் அவன் தாயும், தாய்மாமன் ஆதரவில் வசித்துவந்தனர். தெனாலி ராமன் பாடசாலை செல்லும் பருவம் வந்ததும், அவனைப் பாடசாலைக்கு அழைத்துச் சென்றார் தாய்மாமன். ஆனால் தெனாலிராமனுக்கோ பாடசாலை வேப்பங்காயாகக் கசந்தது. ஆனாலும் அவன் மிகுந்த புத்தி சாலியாகவும், மிகுந்த நகைச்சுவை உணர்வு கொண்டவனாகவும், பெரும் அறிவுக்கூர்மை கொண்டவனாகவும் இருந்ததால், ஊர் மக்களுக்கு அவன் செல்லப்பிள்ளையானான். காலங்கள் உருண்டன. தந்தை இல்லாத காரணத்தால், வீட்டுப் பொறுப்பை எடுக்க வேண்டிய நிலை தெனாலிராமனுக்கு ஏற்பட்டது.

ஒருநாள் அவ் ஊருக்கு ஒரு முனிவர் வந்தார். அவர் தெனாலி ராமனின் நிலையைக் கண்டு, ஒரு மந்திரத்தைக் கற்றுக் கொடுத்தார். அந்த மந்திரத்தை ஆயிரத்து எட்டு முறை பக்தியுடன் சொன்னால், காளி கண் முன் தோன்றிக் காட்சிகொடுப்பாள் என்று கூறியிருந்தார் அந்த முனிவர். உடனே மந்திரத்தைக் கற்றுக்கொண்ட தெனாலிராமன், அருகேயுள்ள ஒரு காளி கோயிலுக்குச் சென்று, முனிவர் கற்றுக்கொடுத்த மந்திரத்தை தவறின்றி நூற்றி எட்டு முறை கூறினான். ஆனால் காளி தெனாலிராமன் முன் காட்சிகொடுக்கவில்லை. தன் முன்னால் காளி காட்சிகொடுக்கவில்லையே என்று மனம் வருந்திய தெனாலிராமனுக்கு, தான் ஆயிரத்து எட்டு முறை கூறாமல், நூற்றியெட்டு முறை மட்டுமே மந்திரத்தைக் கூறியது நினைவுக்கு வர, மீண்டும் மந்திரத்தைக் கூறத் தொடங்கினான். பகலும் சென்று இரவும் வந்தது. தெனாலிராமன் வீட்டிற்குச் செல்லாமல் கோவிலில் இருந்தவாறே மந்திரத்தைக் கூறத் தொடங்கினான்.

காளியும் தெனாலிராமனின் விடாமுயற்சியைக் கண்டு இரக்கம் கொண்டு, தெனாலிராமன் முன் தோன்றினாள். காளியைக் கண்ட தெனாலிராமன் மிகுந்த மகிழ்ச்சிகொண்டு வணங்கி நிற்க, "என்னை ஏன் அழைத்தாய்? உனக்கு என்ன வேண்டும்?" என்று கனிவாகக் கேட்டாள் காளி.

"தாயே... நானோ வறுமையில் வாடுகிறேன். என் வறுமை அகலும் வழியும், எனக்கு நல்லறிவும் தர வேண்டும்" என்று தொழுதவாறு கேட்டான் தெனாலிராமன்.

"உனக்கு கல்வியும், செல்வமும் வேண்டுமா?" என்றாள் காளி.

"ஆமாம் தாயே... புகழுடையக் கல்வியும், வறுமை நீங்கச் செல்வமும் வேண்டும். அதனால் இரண்டையும் தந்து உதவுங்கள்" என்றான் தெனாலிராமன்.

காளி சிரித்தவாறே, தன் இரு கரங்களையும் நீட்ட, அக் கரங்களில்

அன்புத் தம்பி தங்கைகளே... இது உங்கள் பக்கம்!

பூந்தளிர் பகுதியில் உங்கள் பெயர், புகைப்படங்களும் இடம்பெறவேண்டுமாயின் உங்கள் மின்னஞ்சல், கல்வி பயிலும் பாடசாலை, தரம் என்பவற்றைத் தெளிவாகத் தமிழில் எழுதி உங்களது புகைப்படத்தினையும் எமக்கு அனுப்பிவையுங்கள்.

உங்கள் சிந்தனைக்கு வேலை கொடுக்கும் வகையில் கடந்த பூந்தளிரில் சொற்களத் தளிர் என்ற தொடரில் நாம் கொடுத்த சொற்களத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கூடுதலான சொற்களை உருவாக்கிய தம்பி தங்கைகளில் இம்முறையும் 3 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

போட்டி இல: 4

ட	ய	ற
க	ம்	மு
ல்	பு	கா

சொற்களத் தளிர் போட்டி இலக்கம் 3இல் பங்குபற்றி பரிசில் பெறும் 3 தம்பி தங்கைகளின் பெயர்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

முதலாவது இடத்தைப் பிடித்திருப்பவர்

S. குகேசன்

5ம் ஆண்டு

83, Ediston Road, North York

இரண்டாவது இடத்தைப் பிடித்திருப்பவர்

P. சர்மினா

4ம் ஆண்டு

Eglinton Avenue East

Scarborough ON

மூன்றாவது இடத்தைப் பிடித்திருப்பவர்

P. அபிலாஸ்

2315 Lawrence Ave East

Scarborough

பூந்தளிருக்கான சொற்களப்போட்டியில் வெற்றி பெற்றோர் பின்வரும் தொலை பேசி எண்களுடன் தொடர்பு கொண்டு பரிசில்களை பெற்றுக்கொள்ளவும்.

பூந்தளிர் 647 657 0910

இரண்டுபாற் கிண்ணங்கள் வந்தன. அக் கிண்ணங்களை தெனாலிராமனிடம் நீட்டி,

"இராமா! இவ்விரு கிண்ணங்களிலும், வலதுபுறத்தில் இருக்கும் கிண்ணத்தில் உள்ள பாலை அருந்தினால் கல்வியும், இடது கிண்ணத் தில் உள்ள பாலை அருந்தினால் செல்வமும் கிடைக்கும்" என்றதும் தெனாலி ராமன் இரு கிண்ணங்களிலும் உள்ள பாலை அருந்த முயலவே, காளி தடுத்தாள்.

"பொறு ராமா... இப்பாலை அப்படியே அருந்த முடியாது. இவ்விரு கிண்ணங்களிலும் ஒரு கிண்ணத்திலுள்ள பாலை மட்டுமே அருந்தவேண்டும். உனக்கு கல்வி வேண்டுமா, செல்வம் வேண்டுமா என்பதைத் தீர்மானித்து, அதற்கேற்ப ஒரு கிண்ணத்துப் பாலை மட்டும் அருந்துவாயாக" என்றாள்.

அதைக் கேட்டதும்,தெனாலிராமன் சற்று நிதானித்தான்.

"தாயே... இது சரியல்ல... நான் இரண்டையுமல்லவா கேட்டேன்... நீங்களோ, ஒன்றை மட்டும் தேர்வுசெய்யச் சொல்லிச் சொல்கிறீர்களே... இதில் எதைத் தேர்ந்தெடுப்பேன்" என்று கேட்டவனுக்கு உடனே ஒரு யுக்தி தோன்றியது.

இடதுகரத்தில் உள்ள பாலை, வலதுகிண்ணத்தில் ஊற்றி, அப்பால் முழுவதையும் ஒரு சொட்டும் விடாது குடித்து முடித்தான் தெனாலிராமன். இதைக் கண்ட காளி கோபம் கொண்டு,

"இராமா...! என்ன காரியம் செய்து விட்டாய். உன்னை ஒரு கிண்ணத்துப் பாலை மட்டும்தானே குடிக்கச் சொன்னேன்... நீயோ இரு கிண்ணத்துப் பாலையும் குடித்துவிட்டாயே..." என்றாள்.

அதற்குத் தெனாலிராமனோ,

"என் மீது எதற்குக் கோபப்படுகிறீர்கள் தாயே... நீங்கள் சொன்னது போல ஒரு கிண்ணத்துப் பாலைத்தானே குடித்தேன்" என்றான்.

"நீ குடித்தது ஒரு கிண்ணத்துப் பாலாக இருந்தாலும், இரண்டையும் கலந்தல்லவா குடித்தாய்" என்றாள் காளி கோபம் மாறாமல்.

"தாயே... நீங்கள் என்ன சொன்னீர்கள்? ஒரு கிண்ணத்துப் பாலைத்தான் குடிக்கவேண்டும் என்று. நானும் அதைத்தான் செய்தேன். ஒரு கிண்ணத்தில் உள்ள பாலைக் குடிக்கவேண்டும் என்று சொன்ன நீங்கள், இரு பாலையும் ஒன்றோடொன்று கலக்கக் கூடாது என்று கூறவில்லையே" என்றான் தெனாலிராமன்.

தெனாலிராமனின் அறிவுக் கூர்மையைக் கண்ட காளி புன்முறுவல் பூத்தாள். வாயார அவனை மெச்சி

"இராமா... என்னையே ஏமாற்றி விட்டாயே... நீ பெரும் புலவன் என்று பெயர் பெறாமல், விகடகவி என்று பெயர் பெற்று, அழியாத புகழுடன் இவ் வையகம் போற்ற வாழ்வாய்" என்று ஆசி கூறி மறைந்தாள்.

இராமனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. விகடகவி என்று தனக்குள் கூறிப் பார்த்தான். எப்படிப் படித்தாலும் விகடகவி என்று பொருள் கொள்ளும் தன் பட்டத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்தவனாகத் தன் ஊர் நோக்கிச் சென்றான்.

ஏ.ஆரத்ரிகா

தூதுளிர் விண்ணப்பப் படிவம்

பெயர்:.....

வகுப்புத் தரம்:.....

பாடசாலை:.....

தொலைபேசி இலக்கம்:.....

இதனைப் பூர்த்தி செய்து எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

thalir.thalir@yahoo.ca | 647 657 0910

MOON RICE

நிலாச்சோறு உணவகம்

South Indian & Ceylon Restaurant
Take Out & Catering

தரமான உணவு
திருப்த்தியான சாப்பாடு

3050 Confederation Parkway,
Unit 109, Mississauga, ON L53 3Z6
905 276 8292
mooonrice@gmail.com

நிலாநிலாஓடிவா...

நிலாநிலாஓடிவா
நில்லாமல்
ஓடிவா
மலைமேல்
ஏறிவா
மல்லிகைப்பூக்
கொண்டுவா
உலகம் முழுக்கசுற்றிவா

S. கபினாஸ்

நல்லவற்றைக் கண்டுவா
தூங்கும்போதுஎனக்கு
கண்டவற்றைக் கூற வா
நல்லதமிழ் கூறிவா
நல்லகதைகொண்டுவா
சின்னப்பிள்ளை எனக்கு
நல்ல வழிகாட்டிவா

.....

விடுகதைகள்

உங்களில் யார் திறமைசாலி எனப் பார்ப்போமா? உங்களுக்கு நான் 5 விடுகதைகள் தரப் போகிறேன். புதிலைப் பார்க்காமல் சொல்பவர்கள் கெட்டிக்காரர்கள். உங்கள் திறமையைப் பார்ப்போமா?

1. சுற்றும்போது மட்டும் சுகம் தருவாள். அவள் யார்?
2. செய்திவரும் பின்னேமணியோசைவரும் முன்னே. அதுஎன்ன?
3. கல்லுக்கும் முள்ளுக்கும் அஞ்சாதவன் பள்ளநீரைக் கண்டு பதை பதைக்கிறான் அவன் யார்?
4. கடலிலேகலந்து, கரையிலேபிரிந்து, தரையிலேதிரியும் பூ என்ன பூ?
5. கறுப்புக் காகம் ஓடிப்போச்சு, வெள்ளைக் காகம் நிக்குது அது என்ன?

A. தனிஸா

SAMY & SONS

Wholesalers & Retailers

☑ வரவேற்பு
☑ விலை
☑ தரம்

Textiles, Jewellery, Gift Items & Fancy Goods,
Express Money Transfer,
Pawn Broker, Party Item Rental Etc.

☑ தொழில்
☑ நம்பிக்கை
☑ நாணயம்

1884 B. Kennedy Road,
Scarborough, Ontario
M1P 2L8

சாமி அன் சன்ஸ்

Phone: 416-298-1598
Fax: 416-298-2849
Email: samyandsons@gmail.com

RE/MAX®
CHAMPIONS REALTY INC.
Brokerage
Independently Owened and Operated

For Brampton Area and Other Parts of Ontario.

REAL ESTATE SERVICES
Your Source to Assist
- Real Estate Lawyers,
- Mortgage
- Home Inspectors
- Insurance etc.

REALTOR® MLS® MULTIPLE LISTING SERVICE®

NESHON Ponniah
Sales Representative
Dir : 647-297-7196
sivaneshonp@yahoo.com

25-1098 Peter Robertson Blvd
Brampton, ON, L6R 3A5
Off:(905) 487-6000
Fax:(905) 487-2000

B.V.F
BRIGHT VISION FINANCIAL CORP.
Securing your Family's Future

சேவை ஆற்றும் முன்னணிக் காப்புறுதி முகவர்கள்

Vee Kanagasabai
Insurance Advisor
Direct: 647-972-1951

Sathi Muthiah
Insurance Advisor
Direct: 416-854-0851

Param Nandakumar
Insurance Advisor
Direct: 416-892-7156

Prasatch Srirajah
Insurance Advisor
Direct: 416-316-0410

Goby Subramaniam
Insurance Advisor
Direct: 416-670-6260

Bruntha Ratnaganthy
Insurance Advisor
Direct: 647-405-9303

Priya Lloyd
Insurance Advisor
Direct: 416-450-7937



Vigneswaran Aiyadurai
Insurance Advisor
Direct: 416-930-4600

Vanaja Prasath
Insurance Advisor
Direct: 647-215-5967

Panusha Poologasuntharanathan
insurance Advisor
Direct: 647-526-7765



Varna Kanapathipillai, B.Sc.(Eng.)
Sales Representative
Direct: 416.844.7390

Jay Gandhi
Insurance Advisor
Direct: 647-894-5727

இதில்
உங்கள் பெயரும்
இடம்பெற
416-623-4937

சகலவிதமான காப்புறுதி தேவைகளுக்கும்
இவர்களை அழையுங்கள் **416-623-4937**

SUPER VISA INSURANCE 100% REFUND (ON VISA REJECTION)

416.623.4937 **416.321.0413** 80 Nashdene Road, Unit B28, Scarborough

உங்கள் வருமான வரித்தேவைகளை பூர்த்தி செய்ய **647.309.7177**

PROPERTY MAX®
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
WHERE PROPERTIES SOLD AT IT'S BEST!

நீங்கள் என் மூலமாக வீடு வாங்கினாலோ விற்றாலோ

LEGAL FEE
PROPERTY EVALUATION
MORTGAGE COUNSELING

இலவசம்!!

SPECIALIZE IN RESIDENTIAL AND COMMERCIAL

Direct: 416.844.7390
Office: 416.291.3000 / Fax: 416.321.0413 Email: vkanapat@yahoo.ca
6888 14th Avenue E , Markham,On. L6B 1A8

Varna Kanapathipillai, B.Sc.(Eng.)
Sales Representative

முதலீடுகளில் முக்கிய முதலீடு வீடு

என்னூடாக வாங்கும் வீடுகளுக்கு ஒரு வருட உத்தரவாதம்

GOLD AWARD WINNER 2009 | DIAMOND AWARD WINNER 2010 | CHAIRMAN AWARD WINNER 2011 | TOP 5% SALES REP IN CANADA 2010, 2011

வீடு வாங்க விற்க அழையுங்கள்

சங்கர் மாணிக்கம்

416.453.6666

NO BODY CAN BEAT MY SERVICE & COMMISSION ★ GUARANTEED ★ UPTO 80% OFF *

உங்களுக்குத் தெரியுமா?

வீட்டு உரிமையாளர்கள் பெரிதளவு பணத்தைச் சேமிக்கின்றார்கள்

வீணாகும் உங்கள் பணத்தை சேமியுங்கள்	Condo	Townhouse	Bungalow	Detached
House Amount	Start form **$100,000**	Start form **$200,000**	Start form **$300,000**	Start form **$350,000**
Down Payment	$5,000	$10,000	$15,000	$17,500
Loan Amount	$95,000	$190,000	$285,000	$332,500
Mortgage Payment	**$420**	**$840**	**$1261**	**$1472**
Property Tax	$100	$200	$225	$250
Condo Maintenance Fee	$500	$200	-	-
Utilities	-	$200	$300	$300
Total Payment	$1020	$1640	$1786	$2022
Room Rent Income	$300	$400	-	-
Basement Rent Income	-	-	$700	$800
TOTAL	**$720**	**$1240**	**$1086**	**$1222**

அண்ணளவான கணிப்புகள் - Down Payment 5% - வட்டிவீதம் 3%

உங்களுக்காக வீடு விற்க வாங்க தகுதியான Real Esate Agent ஐ தெரிவு செய்யுங்கள்

About Shankar Manickam...

- Full Time Realtor
- Top 5% Sales Rep in Canada
- Highest award winner - Chairman 2011
- Working 7 days a week 9am to 9pm
- Home inspector
- Former Mortgage Advisor

Home Life/Future Realty Inc., Brokerage* 905.201.9977 Cell: 416.453.6666

*INDEPENDENTLY OWNED AND OPERATED